**29.11.2022 செவ்வாய்கிழமை**

**காலை 10.00 மணிக்கு**

**நடைபெற்ற**

**ஒத்திவைக்கப்பட்ட சாதாரண**

**மன்றக்கூட்ட தீர்மானங்கள்**

**பெ.ந.செ.மா.ம.அ.9ந.க.எண்/1908/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.10.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:569/2022** **பொருள் எண்.01**

**பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-9- பகுதி-25- கோட்டம்-124- கிறிஸ்தவ கல்லறை மாநகராட்சி நிதி இன்றி தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வந்தது - கல்லறைகள் கட்டப்பட்டு இடப் பற்றாக்குறை உள்ளதால் புதிய கல்லறைகளுக்கு அனுமதி நிறுத்தவும் மற்றும் புதிதாக உடல்களை புதைத்தலுக்கு அனுமதி நிறுத்தவும் மன்றத்தின் அனுமதி.**

மண்டலம்-9, கோட்டம்-124 செயின்ட் மேரிஸ் சாலையில் சுமார் 6 ஏக்கர்களுக்கும் அதிகமான பரப்பளவு உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கிறிஸ்தவ கல்லறை, மாமன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் (தீர்மான எண்.776/98) அவர் லேடி ஆப் கெய்டன்ஸ் சர்ச் என்ற நிறுவனத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் பராமரிக்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 28.12.1998 நாளிட்ட மாநகராட்சி சுகாதார அலுவலரால் வழங்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் மேற்கண்ட நிறுவனம் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இந்த கல்லறை நிர்வாகம் மேற்கண்ட அவர் லேடி ஆப் கெய்டன்ஸ் சர்ச் நிறுவனம் மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 31.03.2014 வரை மேற்கொள்ளப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.

01.04.2014க்கு பிறகு கல்லறை வளாக பராமரிப்பு நீட்டிப்பிற்காக மேற்கண்ட நிறுவனம் மூலம் வேண்டுகோள் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், நிர்வாக காரணங்களால் இக்கல்லறை வளாக பராமரிப்பிற்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மாநகராட்சி மூலம் அளிக்கப்படவில்லை.

இக்கல்லறை வளாகத்தில் 1998 முதல் தற்போது வரை உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிப்போருக்கு சுமார் 2500க்கு மேல் கல்லறை கட்ட அனுமதி அளிக்கப்பட்டு கல்லறைகள் கட்டப்பட்டுள்ளன. கடந்த 2020-2021 கோவிட் பாதிப்பு சமயத்தில் அதிக எண்ணிக்கையிலான உடல்கள் புதைக்கப்பட்டன.

இந்நிலையில் THE PARISH PRIEST, OUR LADY OF GUIDANCE CHURCH மூலம் 17.10.2021 மற்றும் 07.04.2022 ஆகிய தினங்களில் ஆணையருக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் இக்கல்லறை வளாகத்தில் இறந்த உடல்களை புதைக்க இடம் இல்லை எனவும், அவ்வளாகத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியே மீள எடுத்துக்கொள்ளவும், கோரிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மண்டல சுகாதார குழு மூலம் இக்கல்லறை வளாகம் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வில், இவ்வளாகத்தில் அதிக எண்ணிக்கையில் கல்லறை கட்டப்பட்டதாலும், அதிக எண்ணிக்கையில் உடல்கள் புதைக்கப்பட்டதாலும், புதிய கல்லறைகள் கட்டவும், மேற்கொண்டு உடல்கள் புதைக்கவும், இடப்பற்றாக்குறை இருப்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

இக்கல்லறை வளாகத்தின் பராமரிப்பு, புரிந்துணர்வு ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாததால், பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்க மீள எடுத்துக்கொள்ளலாம். இக்கல்லறை வளாகத்தில் இடப்பற்றாக்குறை இருப்பதால் பெரும்பான்மையான கிறிஸ்துவர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப மாநகராட்சியின் பிற கிறிஸ்தவ கல்லறைகளுக்கு இங்கு வரும் பொதுமக்களுக்கு உடல்களை எடுத்து செல்ல வேண்டுகோள் விடுக்கலாம். இதற்கான கல்லறைகளின் பட்டியல்கள் அவர்களுக்கு தெரிவிக்கலாம்.

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டப்பிரிவு 324ன் படி, இக்கல்லறை வளாகத்தில் இடப்பற்றாக்குறை இருப்பதால் மேற்கொண்டு, உடல்களை புதைப்பதை நிறுத்த மாமன்றத்தின் ஒப்புதல் பெறுவது அவசியமாகிறது. மேலும், ஏற்கெனவே மாநகராட்சியின் அனுமதி பெற்று கல்லறை கட்டியிருக்கும் நபர்களின் குடும்பத்தினருக்கு சென்னை மாநகராட்சி முனிசிபல்

சட்டப்பிரிவு *349 (22)* துணை விதி எண் *14*ன் (***Conditions for re-opening a grave:-*** *No non-masonry grave or masonry grave unprovided with the separate air-tight compartment prescribed in bye-law 12 shall be reopened within 14 years after the burial of a person above 12 years)* படி *14* ஆண்டுகளுக்கு பிறகு அதே கல்லறையினை தோண்டி மீண்டும் அடக்கம் செய்ய விண்ணப்பிப்போருக்கு அனுமதிக்க மாநகராட்சி ஆணையரின் ஒப்புதல் பெற்று அனுமதி அளிக்கலாம்.

இக்கல்லறை வளாகத்தை பராமரிக்கவும், கல்லறை அனுமதி பெற்று கட்டப்பட்டு *14* ஆண்டுகள் கழித்து வரும் அதே குடும்பத்தின் உறவினர் உடல்களை அதே கல்லறையில் மறு அடக்கம் செய்யவும் அருகிலுள்ள கோட்டம்-*125* மயான பணியாளர்களை பணிக்கலாம்.

எனவே,

அ.) மண்டலம்-*9*, கோட்டம்-*124* செயின்ட் மேரிஸ் சாலை மந்தைவெளி சென்னை மாநகராட்சி கிறிஸ்தவ கல்லறை வளாகத்தை *OUR LADY OF GUIDANCE CHURCH* நிறுவனத்திடமிருந்து பெருநகர சென்னை மாநகராட்சி பராமரிப்புக்கு மீள எடுத்துக்கொள்ளவும்,

ஆ.) சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டப்பிரிவு *324*ன் படி, இக்கல்லறை வளாகத்தில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டதால் மேலும் உடல்கள் புதைப்பதை நிறுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கும்,

இ.) இக்கல்லறை வளாகத்தில் புதிதாக கல்லறைகள் கட்டுவதற்கான அனுமதியை நிறுத்தம் செய்ய ஒப்புதலும்,

ஈ.) பெரும்பான்மையான கிறிஸ்துவர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப பெருநகர சென்னை மாநகராட்சியின் பிற கிறிஸ்தவ கல்லறைகளுக்கு இங்கு வரும் உடல்களை கொண்டு செல்ல ஏதுவாக, மற்ற கிறிஸ்தவ கல்லறைகளின் முகவரிகளை அறிவிக்கை செய்யவும்,

மேற்கண்ட 'அ' முதல் 'ஈ' வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"*21.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.85/2022, நாள்.21.11.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**பொ.சு.து/ம.ந.அ(பு.வி)/ந.க.எண்/4903/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.10.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:570/2022** **பொருள் எண்.02**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதார துறை- மானியக்கோரிக்கை அறிவிப்புகள் 2022-23 - சென்னையில் உள்ள கிறித்துவர்களுக்கான அடக்கஸ்தலங்கள் அமைக்க பின்பற்றப்படும் நிபந்தனைகள் தளர்வு செய்ய கருத்துரு அரசினால் கோரப்பட்டது - அரசின் அனுமதி கோரியது - ஏற்கனவே பெறப்பட்ட மன்றத்தீர்மானம் 14 ஆண்டுகள் கடந்து விட்ட காரணத்தினால் மீண்டும் மன்றத்தீர்மானம் பெற்று அனுப்ப அரசால் கோரப்பட்டது - மன்றத்தின் அனுமதி.**

மன்ற தீர்மான எண்.692/2008, நாள்.30.12.2008ல், கிறிஸ்தவ சமுதாயத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிரந்தரமாக கல்லறைகள் கட்டப்பட்டு, ஏற்கனவே குடும்பத்தில் இறந்துபோனவர்களின் கல்லறைக்கு அருகிலோ அல்லது அதே கல்லறையினை மீண்டும் திறந்தோ அடக்கம் செய்யும் வழக்கம் இருந்து வருகிறது என்றும், சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919 பிரிவு 349(22)-ன் துணை விதி 12-ல் உள்ளபடி, தற்போது சென்னை மாநகராட்சியிலுள்ள கிறித்துவ கல்லறைகளை 14 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் திறந்து எற்கனவே அடக்கம் செய்யப்பட்டுள்ள சடலத்தை சேதப்படுத்தாமல், தற்போது மரித்தவரின் உடலை அடக்கம் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டு வருகிறது என்றும், சென்னை கிறிஸ்தவ கல்லறை வாரியத்தினர் கிறிஸ்துவ கல்லறைகளை மீண்டும் திறந்து தற்போது மரித்தவரின் உடலை அடக்கம் செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கால பட்ச இடைவெளியான 14 வருடங்கள் என்பதை 5 வருடங்களாக குறைக்கும்படி கோரியிருந்ததன்படி, மரித்தவரின் உடலை அடக்கம் செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கால பட்ச இடைவெளியான 14 வருடங்கள் என்பதை பம்பாய் மாநகராட்சி சட்ட பிரிவு 441(J) ல் குறிப்பிட்டுள்ள கீழ்கண்ட நடைமுறையின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில், சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919 பிரிவு 349 (22) - ன் துணை விதி 12- ன்படி கீழ்கண்டவாறு திருத்தம் மேற்கொண்டு,

a. பிரேதப்பெட்டி இல்லாமல் பெறும் சடலம் மட்டும் அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைகள் 12 மாதங்கள் முடிவடைந்த நிலையிலும்,
b. மரத்தினால் செய்யப்பட்ட பிரேதப் பெட்டியில் சடலத்தை வைத்து அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைகள் 18 மாதங்கள் முடிவடைந்த நிலையிலும் ,
c. உலோகத்தினால் நன்கு மூடப்பட்ட பிரேதப் பெட்டியில் சடலத்தை வைத்து அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறைகள் 7 வருடங்கள் முடிவடைந்த நிலையிலும், கிறிஸ்தவ கல்லறைகளை மீண்டும் திறந்து, ஏற்கனவே அடக்கம் செய்யப்பட்டுள்ள சடலத்தை சேதப்படுத்தாமல் தற்போது மரித்தவரின் உடலை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்குவதற்கும்,
d. சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919 பிரிவு 349 (22) -ன் துணை விதி 12- ல் செய்யப்பட்ட திருத்தங்களை தமிழக அரசின் அனுமதிக்காக அனுப்புதவற்கும் மன்றத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மன்ற தீர்மான நகலுடன், ஆணையர் அவர்களின், 21.01.2022 நாளிட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919 பிரிவு 349 (22) - ன் துணை விதி 12- ல் செய்யப்பட்ட திருத்தத்திற்கு அனுமதி அரசிடம் கோரப்பட்டது.

அரசு துணை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின், 11.03.2009, 08.12.2010 நாளிட்ட கடிதங்களில் கோரப்பட்ட கூடுதல் விவரங்களை ஆணையர் அவர்களின், 30.03.2009, 12.01.2011, 09.03.2012, 29.10.2012, 11.09.2014, 05.02.2013 & 30.07.2014 நாளிட்ட கடிதங்களில் தேவையான ஆவணங்கள் மற்றும் விரிவான திருத்தத்திற்கான வரைவு அறிவிப்பும் அனுப்பப்பட்டும் சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919 பிரிவு 349 (22)-ன் துணை விதி 12-ல் செய்யப்பட்ட திருத்தத்திற்கு கோரப்பட்ட அனுமதி அரசிடம் நிலுவையில் உள்ளது என தெரிவித்தும் மற்றும் அரசு துணை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

அவர்களின், 20.05.2022, 21.06.2022 & 08.07.2022 நாளிட்ட கடிதங்களில், 2022-*2023* ஆம் ஆண்டுக்கான பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள், சென்னையில் உள்ள கிறித்துவர்களுக்கான அடக்கஸ்தலங்கள் அமைக்க, புதிய நிலம் கையகப்படுத்தவும், சென்னையில் ஏற்கனவே உள்ள அடக்கஸ்தலங்களில் மீண்டும் அடக்கம் செய்வதற்கு உள்ள நிபந்தனைகளைத் தளர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என வெளியிட்ட அறிவிப்பைச் செயற்படுத்தவும் மன்ற தீர்மான எண்.*692/2008*ல் குறிப்பிட்டுள்ளபடி மீண்டும் திருத்தத்திற்கான அனுமதி அரசிடம் கோரப்பட்டது.

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின், 28.07.2022 நாளிட்ட கடிதத்தினை மேற்கோளிட்டு மன்ற தீர்மான எண்.*692/2008* நிறைவேற்றப்பட்டு *14* ஆண்டுகள் கடந்து விட்ட காரணத்தினால் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றம் உள்ளதால் மன்றத்தின் ஒப்புதலை பெற்று புதிய விரிவான கருத்துரை அளிக்குமாறு அரசு துணை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 29.08.2022 நாளிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள கிறித்துவர்களுக்கான அடக்கஸ்தலங்கள் அமைக்க பின்பற்றப்படும் நிபந்தனைகள் தளர்வு செய்யப்படும் என்ற மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் நலத்துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கை அறிவிப்பைச் செயல்படுத்த சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919 பிரிவு *349 (22)*-ன் துணை விதி 12-ல் செய்யப்பட்ட திருத்தத்திற்கு அரசு அனுமதி பெற 30.12.2008ல் நிறைவேற்றப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற தீர்மான எண். 692/2008ற்கு அரசினால் அறிவுறுத்தப்பட்டுள்ளபடி மீண்டும் நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "*21.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.86/2022, நாள்.21.11.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

******

**ம.அ.6நக.எண்.இ1/8220/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:571/2022** **பொருள் எண்.03**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, பகுதி-16, வார்டு-71, பள்ளி சாலையில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டிடத்தில் அமைந்துள்ள J-பகுதி கட்டிடம், அங்கன்வாடி மையம் மற்றும் பெண்கள் கழிவறை கட்டிடம் ஆகியவற்றை இடித்து அகற்ற அனுமதி.**

மண்டலம்-6, பகுதி-16, வார்டு-71, பள்ளி சாலையில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டிடத்தில் அமைந்துள்ள J-பகுதி கட்டிடம், அங்கன்வாடி மையம் மற்றும் பெண்கள் கழிவறை கட்டிடம் ஆகியவை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடமானது சுமார் 22 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட கட்டிடம் ஆகும். இது மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் அபாய நிலையில் உள்ளது.

மேற்கண்ட கட்டிடத்தினை இடிப்பதற்கான பணியை மண்டலம்-6ன் மூலம் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கட்டிடத்தை இடிப்பதற்கு 2021-22 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,19,000/- ஆகும். மேலும் பழமையான மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தை இடிப்பதற்கு முன் இக்கட்டிடத்தில் மறுசுழற்சி முறைக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்களான ஜன்னல், இரும்பு கதவு போன்றவற்றிற்கு அளவீடு எடுக்கப்பட்டு தற்போது 2021-22 ஆம் ஆண்டு விலைப்பட்டியல்படி கணக்கிடப்பட்ட தொகை ரூ.51,521.03 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மறுசுழற்சிமுறைக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்களான ஜன்னல், இரும்பு கதவு ஆகிய பொருட்களின் தற்போதைய நிலையை கருத்தில் கொண்டு மிகவும் பழமையான கட்டிடம் என்பதால் 30 சதவிகிதம் மதிப்பிறக்கம் செய்யப்பட்ட தொகை ரூ.15,457/- ஆகும். ஒப்பந்ததாரர் இந்த மறுசுழற்சி முறைக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்களுக்கான தொகையை காசோலையாக பெருநகர சென்னை மாநகராட்சியின் கருவூலத்தில் செலுத்தப்படுவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

பள்ளி சாலையில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டிடத்தில் அமைந்துள்ள J-பகுதி கட்டிடம், அங்கன்வாடி மையம் மற்றும் பெண்கள் கழிவறை கட்டிடம் ஆகிய கட்டிடங்கள் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களின் விவரங்கள் கீழ்காணும் வகையில் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | கோட்டம் எண்-71 | மண்டலம்-6 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | பள்ளி சாலையில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டிடத்தில் அமைந்துள்ள J-பகுதி கட்டிடம், அங்கன்வாடி மையம் மற்றும் பெண்கள் கழிவறை கட்டிடம் |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | J-பகுதி கட்டிடம் - 2000<br>அங்கன்வாடி மையம் - 1982<br>பெண்கள் கழிவறை கட்டிடம் - 2016 |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | J-பகுதி கட்டிடம் – 63.00 சதுரமீட்டர்<br>அங்கன்வாடி மையம் - 112.53 சதுரமீட்டர்<br>பெண்கள் கழிவறை கட்டிடம் - 44.40 சதுரமீட்டர் |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 1400.00 சதுரமீட்டர் |

| | | |
|---|---|---|
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | J-பகுதி கட்டிடம் – ரூ.195512.35<br>அங்கன்வாடி மையம் - ரூ.123953.07<br>பெண்கள் கழிவறை கட்டிடம் – ரூ.376916.22 |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | பயன்பாட்டில் உள்ளது. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | மீண்டும் பள்ளி கட்டிடம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | பழுதடைந்துள்ளது |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | செயற்பொறியாளர். |
| 10. | வார்டுக்குழு தீர்மான எண். மற்றும் நாள் | மண்டலம் - 6 வார்டுக்குழு தீர்மான எண்- 201 |

எனவே, மண்டலம்-6, பகுதி-16, வார்டு-71, பள்ளி சாலையில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டிடத்தில் அமைந்துள்ள J-பகுதி கட்டிடம், அங்கன்வாடி மையம் மற்றும் பெண்கள் கழிவறை கட்டிடம் ஆகிய கட்டிடங்களை இடித்து அகற்ற, நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"17.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். 35/2022, நாள்.17.11.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"23.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 271/2022, நாள்.23.11.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**ம.அ.12.ந.க.எண். இ1/3591/20/2022**

**முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.08.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:572/2022** **பொருள் எண்.04**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 12 - வார்டு -160ற்குட்பட்ட சௌரி தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 12, வார்டு-160ற்குட்பட்ட சௌரி தெருவில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் கடந்த ஒன்பது வருடங்களாக செயல்பாடற்று இருப்பதால் அக்கட்டிடத்தின் மேற்கூரை சேதமடைந்து கட்டிடத்திற்குள் மழைநீர் தேங்குவதால் அக்கட்டிடத்தில் தேவையற்ற பொருட்கள் சேகரமாகி அந்த பகுதி முழுவதும் மிகவும் மோசமாக உள்ளது. மேலும், இவ்வழியாக மெட்ரோ நிலையத்திற்கு செல்லும் பொது மக்கள் வாகனத்தினை இவ்விடத்தில் நிறுத்தி விட்டு செல்வதால் காலை மற்றும் மாலை வேளைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாலும், சிலர் இவ்விடத்தை ஆக்கிரமிப்பு செய்ய முற்படுவதாலும் பொதுமக்களின் நலன் கருதி இக்கட்டிடத்தினை இடித்து அகற்றவேண்டியது அவசியமாகிறது.

இது தொடர்பாக சௌரி தெருவில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டிடத்தினை 05.10.2021 அன்று மண்டல அலுவலர்,செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் அவர்களால் கள ஆய்வு மேற்கொண்டதில் இக்கட்டிடம் 1995 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாக அறிய வருவதாலும் தற்போது மிகவும் பழுதடைந்து எவ்வித பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளது. மேற்படி பழுதடைந்த அக்கட்டிடத்தினை இடித்துவிட்டு அவ்விடத்தில் புதிதாக பல்நோக்கு மைய கட்டிடம் கட்டி அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தலாம் என சமர்பிக்கப்படுகிறது..

மேலும், இடித்து அகற்றப்பட வேண்டிய அங்கன்வாடி கட்டிடத்தின் விவரங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வார்டு எண். | 160 |
| இடம் | சௌரி தெரு |
| கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 1995 (26 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது) |
| கட்டிடத்தின் பரப்பளவு | 45ச. மீ |
| கட்டிடம்அமைந்துள்ளஇடத்தின்மொத்தபரப்பளவு | 45. ச.மீ |
| தற்போதைய கட்டிடத்தின்புத்தக மதிப்பு | ரூ.1000/- |
| தற்போது கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | பயன்பாட்டில் இல்லை. |
| கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது | பல்நோக்கு மையக்கட்டிடம் |
| கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பொதுமக்கள் பயன்பாட்டில் இல்லாத பழைய கட்டிடம். |
| வார்டு குழு தீர்மான எண். | தீர்மானம் எண்.69, நாள் 08.06.2022 |

மேலும், மண்டலம் 12, வார்டு-160ற்குட்பட்ட சௌரி தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு(பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி பெற 12வது வார்டு குழுவில் தீர்மான எண் 69ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட விவரங்களின் அடிப்படையில் பொது மக்களின் நலன் கருதி மண்டலம்-12, வார்டு -160ற்குட்பட்ட சௌரி தெருவில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து அகற்றுவதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"23.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 272/2022, நாள்.23.11.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

* * * * * *

**ம.அ.12ந.க.எண்.இ1/5403/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.09.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:573/2022** **பொருள் எண்.05**

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-12, வார்டு-163 பாலகிருஷ்ணாபுரம் 1வது தெருவில் அமைந்துள்ள பழைய பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு-163, பாலகிருஷ்ணாபுரம் 1வது தெருவில் அமைந்துள்ள பழைய பொதுக்கழிப்பிட கட்டிடம் 1986ஆம் ஆண்டு பேரூராட்சியால் கட்டப்பட்டதாக தெரியவருகிறது. தற்போது மிகவும் பழுதடைந்து பயன்பாட்டில் இல்லாத நிலையில் உள்ள அக்கட்டிடத்தை இடித்து அகற்ற வேண்டி பாலகிருஷ்ணாபுரம் குடியிருப்போர் நலவாழ்வு சங்கத்திடமிருந்து 07.07.2022அன்று கடிதம் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 12வது மண்டல வார்டு குழுவில் நிலைக்குழு(பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற பரிந்துரை செய்து, 12வது மண்டல குழு தீர்மான எண்.176, 10.08.2022 நாளிட்ட மண்டல வார்டு குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது

மேலும், இடித்து அகற்றப்பட வேண்டிய பழைய பொதுக்கழிப்பிட கட்டிடத்தின் விவரங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வார்டு எண். | 163 |
| இடம் | பாலகிருஷ்ணாபுரம் 1வது தெரு |
| கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 1986 |
| கட்டிடத்தின் பரப்பளவு | 70ச.மீ |
| கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் மொத்த பரப்பளவு | 112ச.மீ |
| தற்போதைய கட்டிடத்தின் புத்தக மதிப்பு | ரூ.39190/- |
| தற்போது கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது | பல்நோக்கு மையக்கட்டிடம் கட்டப்பட உள்ளது. |
| கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பொதுமக்கள் பயன்பாட்டில் இல்லாத பழைய கட்டிடம். |
| வார்டு குழு தீர்மான எண். | தீர்மான எண் : 176 நாள்10.08.2022 |

எனவே, மேற்குறிப்பிட்ட விவரங்களின் அடிப்படையில் மண்டலம்-12, வார்டு-163, பாலகிருஷ்ணாபுரம் 1வது தெருவில் அமைந்துள்ள பழைய பொதுக்கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.088/2022, நாள். 21.11.2022-ன்படி இடிக்கப்படவேண்டிய கட்டிடம் அமைந்துள்ள இடத்தில் கட்டிடத்தை இடித்து விட்டு அவ்விடத்தில் மீண்டும் பொதுக்கழிப்பிட கட்டிடம் கட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"23.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 284/2022, நாள். 23.11.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

* * * * * *

**ம.அ.13.ந.க.எண்.சி1/ 6828 /2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண் : 574 / 2022** **பொருள் எண்.06**

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-40(அ), வார்டு-172 மடுவின்கரை, ஐந்து பர்லாங் சாலையில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளியில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடத்தை இடித்து அகற்றும் பணிகளுக்கு பின்னேற்பு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-40(அ), வார்டு-172 மடுவின்கரை, ஐந்து பர்லாங் சாலையில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. அக்கட்டிடத்தை இடித்து, அவ்விடத்தில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் புதியதாக வகுப்பறை கட்டிடம் கட்டப்பட உள்ளதால் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது. இதற்கு 13வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.207/2022, நாள்-11.10.2022-ன்படி பரிந்துரை பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

| | |
|---|---|
| வார்டு எண். | 172 |
| இடம் | மடுவின்கரை ஐந்து பர்லாங் சாலை |
| கட்டிடம்கட்டப்பட்ட ஆண்டு | 1977 -1978 |
| கட்டிடத்தின் பரப்பளவு | தரை தளம், 408.57 ச.மீ<br>முதல் தளம், 408.57 ச.மீ<br>இரண்டாம் தளம், 408.57 ச.மீ |
| இடத்தின் பரப்பளவு | 408.57 ச.மீ |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 63858.40 |
| கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | ஆம். |
| கட்டிடம் இடித்த பின் எந்த மாதிரி பயன்படுத்தப்பட உள்ளது | நமக்கு நாமே திட்டத்தின் கீழ் புதியதாக வகுப்பறை கட்டிடம் கட்டப்பட உள்ளது. |

மேற்காண் பள்ளி கட்டிடத்தை இடித்து அகற்றும் பணியின் அவசர அவசியம் கருதி துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் 26.10.2022 நாளிட்ட குறிப்பினை தொடர்ந்து பள்ளி கட்டிடம் இடித்து அகற்றும் பணிக்காக மதிப்பீடு ரூ.11,31,000/-க்கு தயாரிக்கப்பட்டு வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் 09.11.2022 நாளிட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் ஒப்பம் கோரி ஒப்பந்ததாரர் மூலம் இடித்து அகற்றப்படும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-40(அ), வார்டு-172 மடுவின்கரை, ஐந்து பர்லாங் சாலையில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளி கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இடித்து அகற்றுவதற்கு அனுமதியும், இடித்து அகற்றுவதற்கான மதிப்பீடு ரூ.11,31,000/-க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"17.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண். 36/2022, நாள்.17.11.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"23.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 273/2022, நாள்.23.11.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**மி.து.ந.க.எண்.உ.செ.பொ/தொ.நு/6165/22**

**முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.10.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:575/2022** **பொருள் எண்.07**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மின்துறை- மெரினா கடற்கரை (கலங்கரை விளக்கம் அருகில்) இலவச *WI-FI* வசதி அளித்தல் - பொதுமக்கள் பயன்படுத்தும் பொருட்டு தனியார் நிறுவனமான *C-Fibre Communication Private Limited* உடன் *M/s.Round Table India Area2* இணைந்து *WI-FI* அமைக்க அனுமதி**

திருவாளர்கள்.*C-Fibre Communication Private Limited*, *M/s.Round Table India Area2* உடன் இணைந்து சென்னை மெரினா கடற்கரை பகுதிகளில் பொது மக்கள், மாணவர், மாணவிகள், சுற்றுலா பயணிகள் *Smart phone*, *Tablet* மற்றும் *Notebook* கணினிகள் மூலம் இலவச *WI-FI* பயன்படுத்தும் வகையில் மக்கள் அதிகமாக கூடும் மெரினா கடற்கரை பகுதிகளில் அமைக்க அனுமதி கேட்டு 08.08.2022 நாளிட்ட கடிதம் அளித்துள்ளார்கள்.

*WI-FI* வசதி ஏற்படுத்தினால் எல்லா நேரங்களிலும் பொதுமக்கள் இலவசமாக பயன்படுத்தும் வகையில் உள்ளது. *WI-FI* பயன்படுத்துவதற்கு முன்பு குறுகிய கால காணொளி விளம்பரம் இடம்பெறும் வசதி உள்ளது. இந்த குறுகிய கால காணொளியில் அரசின் காணொளி மற்றும் சுற்றுலா சம்பந்தபட்ட காணொளி காட்சிகள் இடம்பெற ஏதுவாக இருக்கும் போன்ற சாராம்சங்கள் உள்ளது.

இலவச *WI-FI* சேவைக்கு தேவையான உபகரணங்களான *ISP Server Equipment* மற்றும் *Antenna* ஆகியவற்றை மாநகராட்சி கட்டிடங்கள்/கம்பங்களில் அமைப்பதற்கு அனுமதி கேட்டுள்ளனர்.

மேலும், *2x3* அடியில் விளம்பர பலகையில் *WI-FI* பற்றிய தகவல் மற்றும் அரசு, பெருநகர சென்னை மாநகராட்சியின் *LOGO* மற்றும் நிறுவனத்தின் *LOGO* இடம் பெறும் வகையில் உள்ளது. இந்த விளம்பர பலகைகளை பெருநகர சென்னை மாநகராட்சியின் மின்விளக்குகள்/கம்பங்களில் பொருத்துவதற்கும் அனுமதி கேட்டுள்ளனர்.

சென்னை மெரினா கடற்கரை பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி பொது கழிப்பிட வளாகத்தில் 4 எண்ணிக்கையில் இலவச *WI-FI* உபகரணங்கள் அமைப்பதற்கு அனுமதி கேட்டுள்ளனர்.

எனவே, பொதுமக்கள், மாணவ, மாணவிகள், சுற்றுலா பயணிகள் நலன் கருதி கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி அளிக்கலாம் என்று கருதப்படுகிறது.

1. மெரினா கடற்கரையில் இலவச *WI-FI* அமைப்பதற்கு அனுமதி வழங்குவதற்கும்,
2. *WI-FI* உபகரணங்களை பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது கழிப்பிட வளாகத்தில் அமைத்து அதற்கு தேவையான கேபிள்களை பூமிக்கு அடியில் எடுத்து செல்வதற்கு அனுமதி வழங்குவதற்கும்,
3. *C-Fiber net* மற்றும் *M/s.Round Table India Area2* நிறுவனத்தின் *WI-FI* உபகரணத்திற்கு தேவையான மின்வசதி மற்றும் மாதந்தோறும் பயனீட்டு கட்டணத்தை அந்நிறுவனமே தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்துவதற்கும்,

4. மெரினா கடற்கரை சர்வீஸ் ரோட்டில் உள்ள தெரு விளக்கு மின் கம்பத்தில் 3X2 அடியில் விளம்பர பலகை அமைப்பதற்கும்,

5. இச்சேவையை பெருநகர சென்னை மாநகராட்சி எந்த நேரத்திலும் நிறுத்த வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்படும் பொழுது சேவை நிறுத்தப்பட வேண்டும் .

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

*“23.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 274/2022, நாள். 23.11.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.*

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

*** * * * * ***

**பதுநக.எண்.டி1/SD/WDCN03/00507/2022**

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:576/2022** **பொருள் எண்.08**

## தானப்பத்திரம்

மண்டலம்-3ல் Ms. A. Jeyalakshmi and Ms. A. Poojapallavi அவர்கள் Door No.452/1, "Dr. Ambedkar Street", S.No.452/1A5, as per patta S.No.452/3 & 452/4, Puzhal Villageல் உள்ள இடத்திற்கு மனைஉட்பிரிவு வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சியில் SD/WDCN03/00507/2022 நாள்.07.07.2022ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் மனைஉட்பிரிவு வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 7.2 மீ அகல சாலை Dr. Ambedkar Street அமைய பெற்றுள்ளது. மனையின் மொத்தப் பரப்பளவு 1198.00 ச.மீ ஆகும்.

மனையின் கிழக்கு பகுதியை ஒட்டி 3.0 மீ அகலம் கொண்ட சாலை உள்ளது. அதனை 6.00 மீ அகலம் கொண்ட சாலையாக மாற்றி அமைக்க வேண்டி விண்ணப்பதாரர்கள் 133.00 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் தெரிவித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர்கள் Ms. A. Jeyalakshmi and Ms. A. Poojapallavi அவர்கள் Door No.452/1, "Dr. Ambedkar Street", S.No.452/1A5, as per patta S.No.452/3 & 452/4, Puzhal Village ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்த பரப்பளவில் 133.00ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.87/2022, நாள்.24.11.2022-ன்படி, இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

******

**ப.து.ந.க.எண்.டி1/0055/2022**

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 01.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:577/2022** **பொருள் எண்.09**

## தானப்பத்திரம்

மண்டலம்-4ல் Mrs. P. Thalamboovalli அவர்கள் Old Door No.104, New Door No.385, Melpatti Ponnapan Street, Perambur, Chennai – 600039 comprised as per patta T.S.No.852/31 & 852/92, Block No.46 of Perambur Village ல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4ல் PPA/WDCN04/07235/2022 Date.13.07.2022ன்படி விண்ணபித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 217.00 சதுர மீட்டர் ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 12.00மீ அகல Melpatti Ponnapan Street அமைய பெற்றுள்ளது. Melpatti Ponnapan Street சென்னை பெருநகர முழுமை வளர்ச்சித் திட்டம் IIன் படி 24.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 6.00ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mrs. P. Thalamboovalli அவர்கள் Old Door No.104, New Door No.385, Melpatti Ponnapan Street, Perambur, Chennai – 600039 comprised as per patta T.S.No.852/31 & 852/92, Block No.46 of Perambur Villageல் அமைந்துள்ள இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 6.00 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.83/2022, நாள்.24.11.2022-ன்படி, இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

******

**ப.துநக.எண்.*D1/SD/WDCN05/00840/2022***

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:578/2022** **பொருள் எண்.10**

## தானப்பத்திரம்

மண்டலம்-5ல் M/s. New India Maritime Agencies Private Limited represented by its authorized signatory Mr. M. Venkatasubramaniam அவர்கள் Gollawar Agraharam Road, Old Washermenpet, Chennai – 600021, R.S.No.2996 of Tondiarpet Village ல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி D1/SD/WDCN05/00840/2022 நாள்:28.10.2022ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்.09.12.2020-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரரான M/s. New India Maritime Agencies Private Limited represented by its authorized signatory Mr. M. Venkatasubramaniam மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ) M/s. New India Maritime Agencies Private Limited represented by its authorized signatory Mr.M.Venkatasubramaniam என்பவர் மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 8493.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 192.00 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) M/s. New India Maritime Agencies Private Limited represented by its authorized signatory Mr. M. Venkatasubramaniam என்பவர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், தண்டையார்பேட்டை வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019 க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 13.00 மீட்டர் *G.A.* சாலை அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ன் படி 10,000 ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகையாகவோ செலுத்தலாம். மனைஉட்பிரிவு 10,000 சதுர மீட்டருக்குள் இருப்பதால் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு ஈடாக தொகையை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்.

(உ(*i*) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை மேம்படுத்த மற்றும் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பதாரரே முன்வந்துள்ளதால் அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department dated 16.07.2022ன்படி அனுமதிக்கப்பட்டு கட்டணங்கள் வசூலிக்கப்படவில்லை.

(உ(*ii*) மனைப்பிரிவில் மேற்கொள்ளப்படும் சாலைப்பணிகள் மற்றும் தெருவிளக்கு அமைத்தல் ஆகியவை பெருநகர சென்னை மாநகராட்சி, பேருந்து சாலை துறை

மற்றும் மின் துறை பரிந்துரைக்கும் விவரக்குறிப்புகளுக்கு ஏற்ப முறையே அமைக்கப்பட வேண்டும். இந்த விவரக்குறிப்புகளை கொண்டுதான் சாலைப் பணிகள் மற்றும் தெரு விளக்குகள் அமைக்கப்பட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படும்.

(ஊ) மனைஉட்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் M/s. New India Maritime Agencies Private Limited represented by its authorized signatory Mr.M.Venkatasubramaniam அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென 192.00 சதுர மீட்டர் நிலத்தை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே, Gollawar Agraharam Road, Old Washermenpet, Chennai – 600021, R.S.No.2996 of Tondiarpet Villageல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைஉட்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கென 192.00 சதுர மீட்டர் நிலத்தை M/s. New India Maritime Agencies Private Limited represented by its authorized signatory Mr. M.Venkatasubramaniam அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.88/2022, நாள்.24.11.2022-ன்படி, இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

******

**ப.து.ந.க.எண்.டி1/0074/2022**

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:579/2022** **பொருள் எண்.11**

## தானப்பத்திரம்

மண்டலம்-5ல் Mr. K.L.Sivakumar & Mrs.S.Lalitha அவர்கள் புதிய கதவு எண்.48, பழைய கதவு எண்.175, மன்னார்சாமி கோயில் தெரு, இராயபுரம், சென்னை-600 013 R.S.No.986, Block No.17 தண்டையார்பேட்டை கிராமத்தில் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5ல் PPA/WDCN05/06687/2022 Date.27.06.2022ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 182.08 சதுர மீட்டர் ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 18.30 மீ அகல மன்னார்சாமி கோயில் தெரு அமையபெற்றுள்ளது. பெருநகர வளர்ச்சிக் குழுமம் முழுமை திட்டம் IIன் படி மன்னார்சாமி கோயில் தெரு 30.50 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர்கள் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 46.02ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர்கள் Mr. K.L. Sivakumar Mrs.S.Lalitha அவர்கள் புதிய கதவு எண்.48, பழைய கதவு எண்.175, மன்னார்சாமி கோயில் தெரு, இராயபுரம், சென்னை-600 013 R.S.No.986, Block No.17 தண்டையார்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ள இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 46.02ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.91/2022, நாள்.24.11.2022-ன்படி, இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**பதுநக.எண்.டி1/ 0069 / 2022**

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 03.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:580/2022** **பொருள் எண்.12**

## தானப்பத்திரம்

மண்டலம்-9ல் Mr. Pradeep GPA for Mrs. Rohini Vijayaraghavan, Mr.Krishna Vijayaraghavan and Mr. Bharath Parthasarathy Vijayaraghavan அவர்கள் Old Door No.10, New Door No.26, Teachers Colony, Venkatachalam Mudali Street, Royapettah, Chennai – 600014, S.No.1097/27 of Mylapore Villageல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-09ல் PPA/WDCN09/09889/2022 Date11.10.2022ன்படிவிண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 292.66 சதுர மீட்டர் ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 9.00மீ அகல Venkatachalam Mudali Street அமையபெற்றுள்ளது. Venkatachalam Mudali Street சென்னை பெருநகர முழுமை வளர்ச்சித் திட்டம் IIன் படி 12.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 29.81 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mr. Pradeep GPA for Mrs. Rohini Vijayaraghavan, Mr. Krishna Vijayaraghavan and Mr. Bharath Parthasarathy Vijayaraghavan Old Door No.10, New Door No.26, Teachers Colony, Venkatachalam Mudali Street, Royapettah, Chennai – 600014, S.No.1097/27 of Mylapore Villageல் அமைந்துள்ள இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 29.81 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.84/2022, நாள்.24.11.2022-ன்படி, இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

******

**ப.து.ந.க.எண்.டி1/0078/2022**

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:581/2022** **பொருள் எண்.13**

## தானப்பத்திரம்

மண்டலம்-9ல் Mrs. A. Ameenal Rani GPA of Mr. R. Abdul Rahman அவர்கள் Old Door No.143, New Door No.108, Dr. Babu Jagajeevanram Salai (Bells Road) Chepauk, Triplicane, Chennai – 600005 in R.S.No.2893/7, Block No.0053, Triplicane Village ல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-9ல் PPA/WDCN09/10312/2022 Date.27.10.2022ன்படி விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 135.50 சதுர மீட்டர் ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 12.90மீ அகல Dr.Babu Jagajeevanram Salai (Bells Road) அமையபெற்றுள்ளது. Dr. Babu Jagajeevanram Salai (Bells Road) சென்னை பெருநகர முழுமை வளர்ச்சித் திட்டம் IIன்படி 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 4.44 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mrs. A. Ameenal Rani GPA of Mr. R. Abdul Rahman அவர்கள் Old Door No.143, New Door No.108, Dr. Babu Jagajeevanram Salai (Bells Road) Chepauk, Triplicane, Chennai – 600005 in R.S.No.2893/7, Block No.0053, Triplicane Villageல் அமைந்துள்ள இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 4.44 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.92/2022, நாள்.24.11.2022-ன்படி, இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

******

**பதுநக.எண்.டி1/0079/2022**

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:582/2022** **பொருள் எண்.14**

## தானப்பத்திரம்

மண்டலம்-9ல் Mrs. A. Ameenal Rani GPA of Mr. R. Abdul Rahman அவர்கள் Old Door No.144, New Door No.106, Dr. Babu Jagajeevanram Salai (Bells Road) Chepauk, Triplicane, Chennai – 600005 in R.S.No.2893/6, Block No.0053, Triplicane Village ல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9ல் PPA/WDCN09/10317/2022 Date.27.10.2022ன்படி விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 96.50 சதுர மீட்டர் ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 12.3மீ அகல Dr.Babu Jagajeevanram Salai (Bells Road) அமையபெற்றுள்ளது. Dr. Babu Jagajeevanram Salai (Bells Road) சென்னை பெருநகர முழுமை வளர்ச்சித் திட்டம் //ன்படி 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 14.28 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mrs. A. Ameenal Rani GPA of Mr. R. Abdul Rahman அவர்கள் Old Door No.144, New Door No.106, Dr. Babu Jagajeevanram Salai (Bells Road) Chepauk, Triplicane, Chennai – 600005 in R.S.No.2893/6, Block No.0053, Triplicane Villageல் அமைந்துள்ள இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 14.28 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.93/2022, நாள்.24.11.2022-ன்படி, இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

******

**பது.நக.எண்.டி1/ 0080 / 2022**

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:583 / 2022** **பொருள் எண்.15**

## தானப்பத்திரம்

மண்டலம்-9ல் Mrs. A. Ameenal Rani GPA of Mr. R. Abdul Rahman அவர்கள் Old Door No.145, New Door No.104, Dr. Babu Jagajeevanram Salai (Bells Road) Chepauk, Triplicane, Chennai – 600005 in R.S.No.2893/5, Block No.0053, Triplicane Village ல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9ல் PPA/WDCN09/10325/2022 Date.27.10.2022ன்படி விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 127.32 சதுர மீட்டர் ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 12.3மீ அகல Dr. Babu Jagajeevanram Salai (Bells Road) அமையபெற்றுள்ளது. Dr. Babu Jagajeevanram Salai (Bells Road) சென்னை பெருநகர முழுமை வளர்ச்சித் திட்டம் IIன்படி 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 5.16 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mrs. A. Ameenal Rani GPA of Mr. R. Abdul Rahman அவர்கள் Old Door No.145, New Door No.104, Dr. Babu Jagajeevanram Salai (Bells Road) Chepauk, Triplicane, Chennai – 600005 in R.S.No.2893/5, Block No.0053, Triplicane Villageல் அமைந்துள்ள இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 5.16 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.94/2022, நாள்.24.11.2022-ன்படி, இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**ப.து.ந.க.எண்.டி1/0068/2022**

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 31.10.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:584/2022** **பொருள் எண்.16**

## தானப்பத்திரம்

மண்டலம்-10ல் Mr. N. Nageswaran அவர்கள் Plot No.1A, New No.42 & 42/1, Old No.76, 76/1, Arya Gowda Road, West Mambalam, Chennai – 600033 T.S.No.20/53, Block No.48 of Pulliyur Village ல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10ல் PPA/WDCN10/08714/2022 Date.30.08.2022ன்படி விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 236.90 ச.மீ ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 15மீ அகல Arya Gowda Road அமையபெற்றுள்ளது. Arya Gowda Road சென்னை பெருநகர முழுமை வளர்ச்சித் திட்டம் IIன்படி 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 4.50 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mr. N. Nageswaran அவர்கள் Plot No.1A, New No.42 & 42/1, Old No.76, 76/1, Arya Gowda Road, West Mambalam, Chennai – 600033 T.S.No.20/53, Block No.48 of Pulliyur Village ல் அமைந்துள்ள இடத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 4.50ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.85/2022, நாள்.24.11.2022-ன்படி, இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

* * * * * *

**ப.து.ந.க.எண்.*D1/LA/SD/WDCN12/00753/2022***

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *28.10.2022* நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:585/2022** **பொருள் எண்.17**

## தானப்பத்திரம்

மண்டலம்-12ல் Mr. Srinivasan Ponnuvel and Mr. Manogaran Arumugam அவர்கள் S.No.362 & 363/2, Manapakkam Villageல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN12/00753/2022 நாள்:23.09.2022ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்.09.12.2020-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதார்களான Mr. Srinivasan Ponnuvel and Mr. Manogaran Arumugam மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ) Mr. Srinivasan Ponnuvel and Mr. Manogaran Arumugam என்பவர் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 2000.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 434.63 சதுர மீட்டர் நிலமும் TANGEDCO விற்கு 13.86 சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 14.35 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) Mr. Srinivasan Ponnuvel and Mr. Manogaran Arumugam என்பவர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், ஆலந்தூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019 க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 12.00 மீட்டர் அகல சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

| | | | | பட்டா | | 193/16 | 42 | கையகப்படுத்தப்பட வேண்டிய நிலம் |
| | | | | பட்டா | | 193/17 | 3 | கையகப்படுத்தப்பட வேண்டிய நிலம் |
| | | | | பட்டா | | 193/19 | 9 | கையகப்படுத்தப்பட வேண்டிய நிலம் |
| | | | | பட்டா | | 193/20 | 42 | கையகப்படுத்தப்பட வேண்டிய நிலம் |
| | | | | பட்டா | | 193/21 | 5 | கையகப்படுத்தப்பட வேண்டிய நிலம் |
| | | | | | அரசு | 194 | 139 | புறம்போக்கு அரசு நிலம் |
| | | | 34 | பட்டா | | 196/1 | 1481 | கையகப்படுத்தப்பட வேண்டிய நிலம் |
| | | | | | மாநகராட்சி | 818/1 | 939 | மாநகராட்சி பொது |
| | | | | | மாநகராட்சி | 818/2 | 2832 | மாநகராட்சி பொது |
| | | | | | அரசு | 820/1 | 626 | புறம்போக்கு அரசு நிலம் |
| சென்னை | கிண்டி | தி.நகர் | 107 | | அரசு | 4736/2 | 70 | புறம்போக்கு அரசு நிலம் |
| | | | 110 | பட்டா | | 4815/1 | 16 | கையகப்படுத்தப்பட வேண்டிய நிலம் |
| | | | | | அரசு | 4828/1 | 3281 | புறம்போக்கு அரசு நிலம் |
| | | | | | அரசு | 4828/3 | 127 | புறம்போக்கு அரசு நிலம் |
| சென்னை | மயிலாப்பூர் | மயிலாப்பூர் | 1 | பட்டா | | 2/16 | 81 | கையகப்படுத்தப்பட வேண்டிய நிலம் |
| | | | | பட்டா | | 2/21 | 28 | கையகப்படுத்தப்பட வேண்டிய நிலம் |
| | | | | பட்டா | | 2/8 | | கையகப்படுத்தப்பட வேண்டிய நிலம் |
| | | | | பட்டா | | 2/25 | 8 | கையகப்படுத்தப்பட வேண்டிய நிலம் |
| | | | | | | பட்டா நிலம் (ச.மீ) | 2883.0 | |
| | | | | | | அரசு நிலம் (ச.மீ) | 8014.0 | |
| | | | | | | மொத்தம் (ச.மீ) | 10897.0 | |

வள்ளுவர் கோட்டம் சந்திப்பில், கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் அமைய உள்ள மேம்பாலம் அமைக்கும் பணிக்கு தேவைப்படும் மயிலாப்பூர் நகரம் (பகுதி-1), நுங்கம்பாக்கம் நகரம் மற்றும் தி.நகர் ஆகியவற்றில் அடங்கிய பட்டா நிலங்களுக்கு வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ள அடிப்படை நிலமதிப்பு விவரங்கள் பின்வருமாறு.

| வ. எண். | கோடம்பாக்கம் நெடுஞ்சாலை | | தமிழ்நாடு பத்திரப்பதிவு துறையின் வழிகாட்டி மதிப்பு 09.06.2017 முதல் | |
|---|---|---|---|---|
| | நகரம் | சார் பதிவாளர் அலுவலகம் | நகர வழிகாட்டி மதிப்பு | ரூ./ச.மீ ல் |
| *1* | மயிலாப்பூர் (பகுதி-*1*) | எண்.1 இணை சார்பதிவாளர் மத்திய சென்னை | தேனாம்பேட் | *93760* |
| 2 | நுங்கம்பாக்கம் | எண்.2 இணை சார்பதிவாளர் மத்திய சென்னை | நுங்கம்பாக்கம் | *100970* |
| 3 | தி.நகர் | தியாகராய நகர் | தி.நகர் | *144245* |

❖ மயிலாப்பூர் பகுதி -1 நகரம்:

| வ. எண். | வழிகாட்டி கிராமம் | வட்டம் | சார்பதிவாளர் அலுவலகம் | வழிகாட்டி மதிப்பு 1சதுர அடிக்கு | வழிகாட்டி மதிப்பு 1 சதுர.மீ க்கு | நில எடுப்பு செய்யப்படவுள்ள நிலத்தின் அளவு ச.மீ ல் |
|---|---|---|---|---|---|---|
| 1. | தேனாம்பேட்டை | மயிலாப்பூர் | எண்.1 இணை சார்பதிவாளர் மத்திய சென்னை | 8710 | 93760 | 117.00 |

| | |
|---|---|
| Land cost for Mylapore Part - I – 117.00 sq.mt @ Rs 93760/- per Sq.mtr | 1,09,69,920.00 |
| Multiple factor | X 1 |
| | 1,09,69,920.00 |
| 100% Solatium | 1,09,69,920.00 |
| A.M.V. 12% per annum (From the date of notification to the date of passing of award) (calculated for one year only) | 13,16,390.00 |
| Total | **2,32,56,230.00** |

❖ **நுங்கம்பாக்கம் நகரம்:**

| வ. எண். | வழிகாட்டி கிராமம் | வட்டம் | சார்பதிவாளர் அலுவலகம் | வழிகாட்டி மதிப்பு 1 சதுர.அடிக்கு | வழிகாட்டி மதிப்பு 1 சதுர.மீ க்கு | நில எடுப்பு செய்யப்படவுள்ள நிலத்தின் அளவு ச.மீ ல் |
|---|---|---|---|---|---|---|
| 1. | நுங்கம்பாக்கம் | எழும்பூர் | எண்.2 இணை சார்பதிவாளர் மத்திய சென்னை | 9380 | 100970 | 2750.00 |

| | |
|---|---|
| Land cost for Nungambakkam –2750.00 sq.mt @ Rs 100970/- per Sq.mtr | 27,76,67,500.00 |
| Multiple factor | X 1 |
| | 27,76,67,500.00 |
| 100% Solatium | 27,76,67,500.00 |
| A.M.V. 12% per annum (From the date of notification to the date of passing of award) (calculated for one year only) | 3,33,20,100.00 |
| Total | **58,86,55,100.00** |

❖ தி.நகர் நகரம்:

| வ. எண். | வழிகாட்டி கிராமம் | வட்டம் | சார்பதிவாளர் அலுவலகம் | வழிகாட்டி மதிப்பு 1 சதுர அடிக்கு | வழிகாட்டி மதிப்பு 1 சதுர.மீ க்கு | நில எடுப்பு செய்யப்படவுள்ள நிலத்தின் அளவு ச.மீ ல் |
|---|---|---|---|---|---|---|
| 1. | தி.நகர் | கிண்டி | தியாகராய நகர் | 13400 | 144245 | 16.00 |

| | |
|---|---|
| Land cost for Nungambakkam –16.00 sq.mt @ Rs 144245/- per Sq.mtr | 23,07,920.00 |
| Multiple factor | X 1 |
| | 23,07,920.00 |
| 100% Solatium | 23,07,920.00 |
| A.M.V. 12% per annum (From the date of notification to the date of passing of award) (calculated for one year only) | 2,76,950.00 |
| Total | **48,92,790.00** |

**மொத்த அடிப்படை நிலமதிப்பு – ரூ.. 61,68,04,120.00/-**

மேற்படி அடிப்படை நில மதிப்பில், மரமதிப்பு மற்றும் கட்டுமான மதிப்புகள் கணக்கிடப்படவில்லை. நிலஎடுப்பு அலுவலர் மரமதிப்பு மற்றும் கட்டுமான மதிப்புகளை நிர்ணயம் செய்து தெரிவிக்கும் நிலையில், அத்தொகையினையும் சேர்த்து மொத்த இழப்பீட்டு தொகையினையும் பெருநகர சென்னை மாநகராட்சியாலேயே வழங்கப்படும்.

எனவே, தமிழ்நாடு சட்டமன்றத்தின் 2022-*2023*-ம் ஆண்டிற்கான பட்ஜெட் கூட்டத்தொடரில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மானியக் கோரிக்கை விவாதத்தின் போது, மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களால், " வள்ளுவர் கோட்டம் சந்திப்பில் வாகன நெரிசலை குறைப்பதற்காக ரூ.98 கோடி மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் அமைக்கப்படும்" என்ற அறிவிப்பினை தொடர்ந்து, வள்ளுவர் கோட்டம் சந்திப்பில், அமையவுள்ள புதிய மேம்பாலம் அமைத்திடுவதற்கு தேவைப்படும் 10897 ச.மீ நிலத்தில், "*2883* ச.மீ தனியார் பட்டா நிலங்களை தனி நபர் பேச்சுவார்த்தை முறையில் நிலஎடுப்பு செய்து வழங்கிடவும்" (அல்லது) "நிலம் கையகப்படுத்தலில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச் சட்டம் 2013ன் கீழ் நில எடுப்பு செய்து வழங்கிட கோரிடவும், 4243 ச.மீ அரசு நிலங்களை நிலஉரிமை மாற்றம் செய்திட கோரியும், 3771 ச.மீ மாநகராட்சி பொது நிலத்தினை பயன்படுத்திக் கொள்ளவும்" நிருவாக அனுமதி அரசு ஆணையினை *(Administrative Sanction)* பெற்றுத்தர கோரி, நில நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை- 600 005க்கு மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், வழியாக முன்மொழிவுகள் அனுப்பிடவும். மேலும், நிருவாக அனுமதி அரசாணை கோரும் முன்மொழிவின் நகலினை கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தலைமைச் செயலகம், சென்னை- 600 009க்கு அனுப்புவதற்கும், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"*25.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.304/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/2737/2022**

**முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 19.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:595/2022** **பொருள் எண்.27**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-8, பகுதி-23, பழைய கோட்டம்-104, புதிய கோட்டம் - 99ல் பூபதி நகர் பகுதியில் 72வது வார்டு உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டப்பட்ட உடற்பயிற்சி கூட கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நியாயவிலைக் கடைக்கு ஒதுக்கீடு செய்ய கோரியது - மண்டலம்-8 வார்டு குழுவின் அனுமதி பெறப்பட்டது - நியாய விலை கடைக்கு (02DA046NC) ஒதுக்கீடு செய்ய அனுமதி.**

சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் 31.07.2021 நாளிட்ட கடிதத்தில், எழும்பூர் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் – 8, பகுதி – 23, பழைய கோட்டம் – 104, புதிய கோட்டம் – 99ல் தாஸ்புரம், ஓசான்குளம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மற்றும் புதிய பூபதி நகர் ஆகிய பகுதிகளில் வசித்து வரும் பொது மக்கள் தங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்கு சேத்துப்பட்டு, டோபிகானா பகுதியில் செயல்பட்டு வரும் நியாயவிலைக் கடைக்கு செல்ல வேண்டியிருப்பதால், அப்பகுதி மக்கள் அக்கடைக்கு செல்ல சேத்துப்பட்டு இரயில் நிலைய இருப்பு பாதை, நடைமேடைகளைக் கடந்து செல்ல வேண்டி இருப்பதோடு, அத்தியாவசியப் பொருட்களை வாங்கிக் கொண்டு திரும்புவதில் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும், இந்நிலையில் அப்பகுதியில் உள்ள உடற்பயிற்சி கூடத்தினை நியாயவிலைக் கடைக்கு ஒதுக்கீடு செய்து தருமாறும் கடிதம் அளித்துள்ளார்.

துணை ஆட்சியர் / மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அவர்களின் 11.07.2022 நாளிட்ட கடிதத்திலும் மேற்கண்ட உடற்பயிற்சிக் கூடத்தை நியாயவிலைக் கடைக்கு (02DA046NC) ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் – 8 அவர்கள் முதன்மைச் செயலாளர்/ஆணையர் அவர்களுக்கு 14.11.2022 நாளிட்டு சமர்ப்பித்த குறிப்பில், உடற்பயிற்சிக் கூடம் என்று குறிப்பிட்ட கட்டிடமானது தற்பொழுது துப்புரவு ஆய்வாளர் அவர்களின் துப்புரவு பொருட்களை வைப்பதற்காக சேமிப்பு கிடங்காக உபயோகத்தில் உள்ளது எனவும், இக்கட்டிடமானது 2004 ஆம் ஆண்டு எழும்பூர் தொகுதி பழைய 72வது வார்டு உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 367.80 சதுர அடியில் தரை தளத்தில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது எனவும், உதவி வருவாய் அலுவலர் மண்டலம்-8 அவர்கள் 08.11.2022 அன்று கட்டிடத்தை நேரில் சென்று கள ஆய்வு செய்ததில் அவ்விடத்தில் உடற்பயிற்சி செய்யும் பொருட்கள் எதுவும் இல்லை, மேலும் அக்கட்டிடத்தின் அருகாமையில் வசித்து வரும் பொதுமக்களிடம் விசாரணை மேற்கொண்டதில் ஒரு வருட காலமாக உடற்பயிற்சிக் கூடம் இயங்காமல் காலியாக உள்ளது என தெரிவித்து கட்டிடத்தின் புகைப்படங்களை இணைத்து குறிப்பு சமர்ப்பித்துள்ளார்.

மேலும், மண்டலம் – 8ன் வார்டு குழு தீர்மான எண்.21, நாள். 09.11.2022ல் பூபதி நகர் பகுதியில் உள்ள உடற்பயிற்சி கூடத்தை நியாயவிலை அங்காடிக்கு ஒதுக்கீடு செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண்.573/2015, நாள்.30.09.2015-ன்படி இனிவரும் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்தும் மற்றும் சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் கட்டப்படும் கட்டிடங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் இயங்கும் அனைத்து நியாயவிலை கடைகளுக்கு மட்டும் ஒதுக்கீடு செய்யும்போது, தற்பொழுது நடைமுறையிலுள்ள

மன்றத் தீர்மானத்தின்படி, வாடகையின்றியும், முன்பணமின்றியும் கட்டிடம் ஒதுக்கீடு செய்வதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் - 8, பகுதி - 23, பழைய கோட்டம் - 104, புதிய கோட்டம் - 99ல் பூபதி நகர் பகுதியில் 72வது வார்டு உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்ட நிதியின்கீழ் கட்டப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 367.80 சதுர அடி கொண்ட உடற்பயிற்சி கூட கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் செயல்பட்டு வரும் கடை எண். 02DA046NC நியாயவிலைக் கடைக்கு "வாடகையின்றியும், வாடகை முன்பணம் இன்றி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும், கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன்"அவசர அவசியம் கருதி மண்டல வார்டு குழு பரிந்துரையின் அனுமதிக்குட்பட்டு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.307/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/3282/1993**

**முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 26.10.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:596/2022** **பொருள் எண்.28**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - பழைய மண்டலம்-10, பழைய வார்டு-119, கிண்டி வட்டம், தியாகராய நகர் கிராமம், புல எண்.4733, 4745 மற்றும் 4746 - பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 18.75 மனை பரப்பளவு நிலம் - கர்நாடக சங்க பள்ளிக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது - குத்தகை காலம் முடிவுற்றது - குத்தகை காலம் நீட்டிப்பு செய்து தருமாறு கோரியது - 14.10.2019 முதல் 13.10.2052 வரை உள்ள 33 ஆண்டுகளுக்கு குத்தகை நீட்டிப்பது - அரசாணை பெறுவதற்கு அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப அனுமதி.**

பழைய மண்டலம்-10, பழைய வார்டு-119, கிண்டி வட்டம், தியாகராயநகர் கிராமம், புல எண்.4733, 4745 மற்றும் 4746, அபிபுல்லா சாலையில் உள்ள 18.75 மனை (45000 சதுரடி) பரப்பளவுக் கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலம் கர்நாடக சங்கத்திற்கு கீழ்கண்டுள்ளவாறு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

| பரப்பளவு | குத்தகைக் காலம் | மாத வாடகை | அரசாணை / மன்றத் தீர்மான எண் |
|---|---|---|---|
| 18 மனைகள் மற்றும் 1800 சதுர அடி நிலம் (மொத்தம் 45000 சதுர அடிகள்) | 14.10.1953 முதல் 13.10.1986 (33 ஆண்டுகள்) | மனை ஒன்றுக்கு ரூ.1/- வீதம் ரூ.18.75/- | மன்றத் தீர்மான எண்.331/1953, நாள்.09.06.1953. |
| 17 மனைகள் மற்றும் 1269 சதுர அடி நிலம் (மொத்தம் 42069 சதுர அடிகள்) | 14.10.1986 முதல் 13.10.2019 (33 ஆண்டுகள்) | மனை ஒன்றுக்கு ரூ.100/- வீதம் | அரசாணை எண் 82, ந.நி.ம.கு.வ.து. நாள்.19.03.1991. |

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.331/1953, நாள்.09.06.1953-ன்படி மேற்குறிப்பிட்ட நிலமானது கர்நாடக சங்கத்திற்கு இலவச படிப்பகம், நூலகம் மற்றும் பள்ளிக்கூடம் நடத்துவதற்காக முதலில் 33 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது. அதில் மேற்படி சங்கம் கட்டிடங்கள் கட்டி, கோயில், பள்ளி, அரங்கம் மற்றும் இருப்பிடங்கள் அமைத்துக்கொண்டது.

முதலில் வழங்கப்பட்ட குத்தகை காலம் 13.10.1986 அன்று முடிவடைந்துவிட்டதால் மீண்டும் புதுப்பிக்க, மேற்படி சங்கத்திலிருந்து வேண்டுகோள் பெறப்பட்டது. இக்கல்வி நிறுவனத்தின் கோரிக்கை அடிப்படையில் மன்றத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு (சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.503/1989) அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்படி சங்கத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியாக 2931 சதுர அடி காலி நிலம் மாநகராட்சி மருந்தகம் கட்ட தேவைப்படுவதால் அதனை தவிர்த்து மீதமுள்ள 17 மனை 1269 சதுர அடி நிலத்தினை குத்தகைக்கு விட அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டது.

அரசாணை எண்.82, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.03.1991ன்படி மொழிவாரி சிறுபான்மையின பள்ளியான கர்நாடக சங்கம் நடத்தும் பள்ளிக்கு, சென்னை மாநகராட்சியின் 17 மனை மற்றும் 1269 சதுர அடி கொண்ட தனி நிலத்தினை மீண்டும் 33 ஆண்டுகளுக்கு, ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித் துறையின் அரசாணை எண் 730, நாள்.14.04.1976-ல் பிறப்பித்துள்ள தடையினை தளர்த்தி, மனை ஒன்றுக்கு ரூ.100/- வீதம் குத்தகை கட்டணம் நிர்ணயித்து ஆணை வெளியிட்டது. மேலும் அச்சங்கம் வசம் உள்ள 2931 சதுர அடி நிலத்தினை சென்னை மாநகராட்சி மருந்தக வசதிக்காக திரும்பவும் எடுத்துக்கொள்ள அரசாணை மூலம் அனுமதி அளித்திருந்தது. மேற்படி நிலத்திற்கு மனை ஒன்றுக்கு ரூ.100/- வீதம்

குத்தகை தொகை நிர்ணயம் செய்தும், 5 வருடங்களுக்கு ஒரு முறை ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்கள் இந்த குத்தகை தொகையை உயர்த்தவும், மேலும் 33 ஆண்டுகளுக்கு குத்தகை நீட்டித்தும் ஆணையிடப்பட்டுள்ளது. மாநகராட்சி மருந்தகம் அமைக்க *2931* சதுர அடி நிலம் திரும்பபெற ஆணை பெறப்பட்டதில், இந்நிலத்தின் அருகிலேயே மற்றொரு மாநகராட்சி மருந்தகம் செயல்பட்டுவருவதால், நிலம் மீளப்பெறாமல் கர்நாடக சங்கத்தின் பயன்பாட்டிலேயே இந்நாள்வரை உள்ளது.

அரசாணை நிலை *(Ms)* எண்.82, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.03.1991 ன்படி, கர்நாடக சங்கத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட 45000 ச.அடி நிலத்திற்கு மனை ஒன்றுக்கு ரூ.100 வீதம் 14.10.1986 முதல் 13.10.1991 வரையும், அடுத்த ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் மனை ஒன்றுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகையில் 25 % சதவீதம் உயர்வு செய்தும் 31.03.2018 வரை குத்தகை தொகை ரூ- *13,98,361/-* என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசாணை நிலை *(D)* எண்.389, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் *(MC-*1) துறை, நாள்.30.09.2019ன்படி, கர்நாடக சங்கத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட 45000 ச.அடி நிலத்தில், கர்நாடக சங்க பள்ளி 37037 ச.அடி (15.43 மனை) நிலத்தில் இயங்கி வருவதால் 01.04.2018 முதல் 13.10.2019 வரை வழிக்காட்டி மதிப்பு ரூ.10720/-ல் ஆண்டுக்கு 0.5 சதவீதம் குத்தகை தொகை என நிர்ணயம் செய்யப்பட்டு, குத்தகை தொகையாக ரூ.30,47,151/- என கணக்கீடு செய்யப்பட்டும், கர்நாடக சங்க நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி 7963 ச.அடி (3.32 மனை) நிலத்தில் இயங்கிவருவதால் 01.04.2018 முதல் 13.10.2019 வரை வழிக்காட்டி மதிப்பு ரூ.10720/-ல் ஆண்டுக்கு 1.5 சதவீதம் குத்தகை தொகை என நிர்ணயம் செய்யப்பட்டு, குத்தகை தொகையாக ரூ.19,65,418/- என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது, திருவாளர்கள். கர்நாடக சங்கம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ரூ.*1,02,44,336/-* தொகையினை செலுத்தியுள்ளார்கள். திருவாளர்கள். கர்நாடக சங்கம் குத்தகை காலமான 13.10.2019 வரை செலுத்தவேண்டிய மொத்த குத்தகை தொகை ரூ.64,10,930/- செலுத்தியும், கூடுதலாக ரூ.38,33,406/- தொகையினையும் செலுத்தியுள்ளார்கள். கூடுதலாக செலுத்தப்பட்ட தொகை 14.10.2019 முதல் வழங்கப்படவுள்ள குத்தகை காலத்திற்கு செலுத்தப்படவுள்ள குத்தகை தொகையில் நேர் செய்யப்படும்.

கர்நாடக சங்கத்தின் பள்ளிகள் அமைந்துள்ள நிலத்தின் குத்தகை காலம் *13.10.2019* அன்று முடிவுற்றதால் *14.10.2019* அன்று முதல் *33* ஆண்டு காலத்திற்கு குத்தகை காலம் நீட்டித்து தருமாறு இக்கல்வி நிறுவன தலைவர் *14.10.2019* நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

கர்நாடக சங்கம்அளித்துள்ள கோரிக்கை தொடர்பாக, தியாகராய நகர் கிராமம், புல எண்.*4733*, 4745 மற்றும் 4746, அபிபுல்லா சாலையில் உள்ள *18.75* மனை *(45000* சதுரடி*)* பரப்பளவுக் கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை குத்தகைக்கு வழங்கப்பட்டு, *14.10.1986* முதல் 13.10.2019 வரை 33 ஆண்டு காலத்திற்கு வழங்கப்பட்ட குத்தகை காலம் தற்போது முடிவுற்றதால், கர்நாடக சங்கம் நடத்தும் பள்ளிகள் அமைந்துள்ள நிலத்திற்கான குத்தகை காலத்தினை மேலும் *33* ஆண்டுகளுக்கு நீட்டித்து அளிக்க கோரப்பட்டுள்ள நிலையில், தனி வட்டாட்சியர்/நிமஉது அவர்கள் *14.08.2021*-அன்று புலத்தணிக்கை செய்து அளித்துள்ள அறிக்கையில், கர்நாடக சங்க பள்ளியானது அரங்கம், காலியாக உள்ள இடம் மற்றும் கர்நாடக சங்க மேல்நிலைப்பள்ளி ஆக சேர்ந்து மொத்தம் *37037* சதுரடி நிலத்திற்கு *(*13199+2931+20907*)* இவ்விடத்திற்கான வழிக்காட்டி மதிப்பிலிருந்து *0.5%* மற்றும் கர்நாடக சங்க பிரைமரி பள்ளி இயங்கி வரும் *7963* சதுரடி நிலத்திற்கு *14.10.2019* முதல் *13.10.2022* வரையிலான காலத்திற்கு வழிகாட்டி மதிப்பில் *1.5 %* என குத்தகை தொகை நிர்ணயம் செய்யலாம் என்பதனையும், மேற்படி தியாகராய நகர் கிராமம் ஹபிபுல்லா சாலைக்கு வழிகாட்டி மதிப்பின் படி ஒரு சதுர அடி ரூ.*10,720/-* ஆகும் என்ற விவரத்தினையும் தெரிவித்துள்ளார்.

மண்டல அலுவலர், மண்டலம்-*9* அவர்களின் கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை கர்நாடக சங்க பள்ளிக்கு மூன்று வருடங்களுக்கு குத்தகைக்கு விடுதல் தொடர்பாக, வார்டுகுழுவின் தீர்மானம் (தீர்மான எண்.*118/2022*, பொருள்

எண்.39) இயற்றப்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட கடிதத்துடன் வார்டுகுழு தீர்மானம் இவ்வலுவலகத்திற்கு 18.08.2022 அன்று பெறப்பட்டுள்ளது.

இந்நேர்வில், கர்நாடக சங்கம் பள்ளிகள் நடத்திட தியாகராயநகர் கிராமம், புல எண்.4733, 4745 மற்றும் 4746, அபிபுல்லா சாலையில் உள்ள 18.75 மனை (45000 சதுரடி) பரப்பளவுக் கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை குத்தகைக்கு வழங்கப்பட்டு, 14.10.1986 முதல் 13.10.2019 வரை 33 ஆண்டு காலத்திற்கு வழங்கப்பட்ட குத்தகை காலம் தற்போது முடிவுற்றதால், கர்நாடக சங்கம் நடத்தும் பள்ளிகள் அமைந்துள்ள நிலத்திற்கான குத்தகை காலத்தினை மேலும் 33 ஆண்டுகளுக்கு நீட்டித்து அளிக்க கோரப்பட்டுள்ள நிலையில், கர்நாடக சங்கம் 13.10.2019 வரையிலான தேதி வரை செலுத்த வேண்டிய குத்தகை தொகை முழுவதையும் செலுத்தியுள்ளனர். மேலும், தனி வட்டாட்சியர்/நிமஉது அவர்கள் 14.08.2021 அன்று புலத்தணிக்கை செய்து அளித்துள்ள அறிக்கையில், கர்நாடக சங்க பள்ளியானது அரங்கம், காலியாக உள்ள இடம் மற்றும் கர்நாடக சங்க மேல்நிலைப்பள்ளி ஆக சேர்ந்து மொத்தம் 37037 சதுரடி நிலத்திற்கு (13199+2931+20907) இவ்விடத்திற்கான வழிக்காட்டி மதிப்பிலிருந்து 0.5% மற்றும் கர்நாடக சங்க பிரைமரி பள்ளி இயங்கி வரும் 7963 சதுரடி நிலத்திற்கு வழிகாட்டி மதிப்பில் 1.5% என குத்தகை தொகை நிர்ணயம் செய்யலாம் என்பதனையும், மேற்படி தியாகராய நகர் கிராமம் ஹபிபுல்லா சாலைக்கு வழிகாட்டி மதிப்பின் படி ஒரு சதுர அடி ரூ.10,720/- ஆகும் என்ற விவரத்தினையும் தெரிவித்துள்ளார்.

கர்நாடக சங்கம் நடத்திவரும் பள்ளிகள் அமைந்துள்ள நிலத்திற்கான குத்தகை தொகையினை 14.10.1986 முதல் 13.10.2019 வரையிலான காலத்திற்கு செலுத்தியுள்ளதால், கர்நாடக சங்கத்தின் கோரிக்கையினையும் மற்றும் இப்பள்ளியில் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதியும், அரசாணை (எம்.எஸ்). எண். 730 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.04.1976-ன் பக்கம் 4 பத்தி 2ல்,

> *“Provided that the Government may, in special and extraordinary circumstances, sanction long lease, sale, mortage, exchange, and gift when the land, buildings, etc, or required for the following public purposes.*
>
> *a) For bonafide educational purposes*
> *b) For bonafide medical purposes*
> *c) For any bonafide charitable purposes*
> *d) Required by instituations engaged in bonafide social welfare activities*
> *e) Required by the linguistic minorities in the statefor their welfare in general.”*

ஆணையிட்டுள்ளவாறு, கர்நாடக சங்க பள்ளி அமைந்துள்ள பழைய மண்டலம்-10, பழைய வார்டு-119, தியாகராய நகர் கிராமம், புல எண்.4733, 4745 மற்றும் 4746, அபிபுல்லா சாலையில் உள்ள 18.75 மனை (45000 சதுரடி) பரப்பளவுக் கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை கர்நாடக சங்கத்தின் கோரிக்கையின்படி, 14.10.2019 முதல் 13.10.2052 வரையிலான 33 ஆண்டுகளுக்கு நீட்டித்து வழங்கவும்,

கர்நாடக சங்கம் நடத்திவரும் பள்ளி அமைந்துள்ள நிலத்திற்கு வழங்கப்படவுள்ள குத்தகை காலம் 14.10.2019 முதல் 13.10.2052 வரையுள்ள 33 ஆண்டுகளுக்கு, பெருநகர சென்னை மாநகராட்சி நிலங்களை, குத்தகை அடிப்படையில் கல்வி பயன்பாட்டிற்கு வழங்குவதற்கு பெறப்பட்ட அரசாணை (D) எண். 389, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.09.2019ன்படி, கர்நாடக சங்க மேல்நிலை பள்ளியின் 37037 சதுரடி நிலதிற்கு இவ்விடத்திற்கான வழிகாட்டி மதிப்பிலிருந்து 0.5% மற்றும் கர்நாடக சங்க பிரைமரி பள்ளி இயங்கி வரும் 7963 சதுரடி நிலத்திற்கு 1.5% என நிர்ணயம் செய்து பின்வருமாறு குத்தகை தொகை நிர்ணயம் செய்யவும்,

**அரசாணை நிலை (D) எண்.389, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC-1) துறை, நாள்.30.09.2019 -யின்படி, குத்தகை காலம் 14.10.2019 முதல் 31.03.2021 வரை (17 மாதங்கள் 18நாட்கள் )**

| கர்நாடக சங்க பள்ளி | | கர்நாடக சங்க பிரைமரிப்பள்ளி | |
|---|---|---|---|
| குத்தகை நிலம் | 37037 ச.அடி (அ)<br>15.43 மனைகள் | குத்தகை நிலம் | 7963 ச.அடி (அ)<br>3.32 மனைகள் |
| குத்தகை தொகை | வழிக்காட்டி மதிப்பில் 0.5% | குத்தகை தொகை | வழிக்காட்டி மதிப்பில் 1.5% |
| GLV சதுரஅடிக்கு | ரூ.10,720/- | நிலத்தின் GLV | ரூ.10,720/- |
| மாதத்திற்கு | ரூ.10720 *0.5% x 37037 / 12<br>= ரூ.1,65,432/- | மாதத்திற்கு | ரூ. 10720 x 1.5% x 7963 / 12<br>= ரூ.1,06,704/- |
| குத்தகை தொகை | =ரூ.1,65,432 * 17 மாதங்கள் 18 நாட்கள்<br>ரூ.29,08,401/- | குத்தகை தொகை | = ரூ.1,06,704* 18 நாட்கள் 17 மாதங்கள்<br>ரூ.18,75,925/- |
| **அரசாணை நிலை (D) எண்.389, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC-1) துறை, நாள்.30.09.2019 -யின்படி, மூன்றாண்டுகளுக்கு பின் மாத வாடகையில் 15% உயர்வு குத்தகை காலம் 01.04.2021 முதல் 13.10.2022 வரை (19 மாதங்கள் 13 நாட்கள்)** | | | |
| மாதத்திற்கு | ரூ.1,65,432 * 15 %<br>= ரூ.24,815 /-<br>ரூ.1,65,432 + ரூ.24,815<br>= ரூ.1,90,247/- | மாதத்திற்கு | ரூ. 1,06,704 * 15 %<br>= ரூ.16,006 /-<br>ரூ.1,06,704+ ரூ. 16,006<br>= ரூ.1,22,710/- |
| குத்தகை தொகை | = ரூ.1,90,247 * 19 மாதங்கள் 13 நாட்கள்<br>= ரூ.36,94,474/- | குத்தகை தொகை | = ரூ.1,22,710* 19 மாதங்கள் 13 நாட்கள்<br>= ரூ.23,82,949/- |

மேலும், குத்தகை தொகையினை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் உயர்வு செய்தும், மேற்படி அரசாணை பத்தி 6ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்றவும், அரசாணையின் பத்தி எண் 7ல் உள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றிடவும், உரிய அரசாணைகள் வழங்ககோரி அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப, நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “25.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் கர்நாடக சங்கத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட நிலத்தில் ஏற்கனவே அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு 2931 சதுர அடி நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் மீளப்பெற்று அவ்விடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாயினை உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் தீர்மான எண்.294/2022, நாள்.25.11.2022ன்படி இதனை நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**“இப் பொருள் ஒத்தி வைக்கப்படுகிறது.”.**

*** * * * * ***

<u>ம.க.கு.ந.க.எண். அ7/1482/2022</u>

<u>முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் *02.11.2022* நாளிட்ட குறிப்பு</u>

**தீர்மான எண்:597/2022** **பொருள் எண்.29**

<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - பொது வருங்கால வைப்பு நிதி (தமிழ் நாடு) 01.10.2022 முதல் 31.12.2022 வரை *(Q3)* உள்ள காலத்திற்கு வட்டி விகிதம் 7.1% என நிர்ணயித்து (ஏழு புள்ளி ஒன்று சதவீதமாக) அரசாணை வழங்கப்பட்டது - அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.</u>

அரசாணையில், தமிழ்நாடு பொது வருங்கால வைப்பு நிதிக்கு (2022-2023) 01.10.2022 முதல் 31.12.2022 வரை, உள்ள காலத்திற்கான வட்டி விகிதம் 7.1% என (ஏழு புள்ளி ஒன்று சதவீதமாக) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசாணையின் விபரம் கீழ்கண்டுள்ளவாறு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**FINANCE [Allowances] DEPARTMENT**

**<u>G.O.Ms.No.335, Dated 22nd October, 2022.</u>**

*(Subakiruthu, Aippasi-5, Thiruvalluvar Aandu 2053)*

**<u>ABSTRACT</u>**

**Provident Fund - General Provident Fund(Tamil Nadu) - Rate of interest for the Financial year 2022-2023—With effect from 1.10.2022 to 31.12.2022 - Orders - Issued**

***Read the following:-***

1. G.O Ms. No. 109, Finance (Allowances) Department, dated 19.04.2022.
2. G.O Ms. No. 227, Finance (Allowances) Department, dated 26.07.2022.
3. From the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs (Budget Division), New Delhi, Resolution No.F.No.5(4)-B(PD) / 2021, dated:03.10.2022.

-OOO-

**<u>ORDER:</u>**

In the Government Order first and second read above, orders were issued fixing he rate of interest on the accumulation at the credit of the subscribers of G.P.F. (TN) during the financial year-2022-2023 as detailed below:

| Sl.No. | Quarter | Period | Rate of Interest |
|---|---|---|---|
| 1 | I | 01-04-2022 to 30-06-2022 | 7. l% |
| 2 | II | 01-07-2022 to 30-09-2022 | 7. l% |

**2.** The Government of India, in its resolution third read above, announced that during the financial year 2022-2023, accumulations at the credit of subscribers to the General Provident Fund and other similar funds shall carry interest at the rate of 7.1% (Seven point one percent) with effect from 1st October -2022 to 31st December -2022(Q3).

**3.** The Government now direct that the rate of interest on the accumulation at the credit of the subscribers to General Provident Fund (Tamil Nadu) shall carry interest at the rate of **7.1%** (Seven point one percent) with effect from 1st October -2022 to 31st December -2022 (Q3).

**4.** The rate of interest on belated final payment of Provident Fund accumulation remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rates as ordered in para-3 above.

***(BY ORDER OF THE GOVERNOR)***

N. MURUGANANDAM
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

**எனவே, அரசாணை (நிலை)எண்.335, நிதி(ஊதியத்துறை) நாள்:22.10.2022-ஐ பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நடைமுறைபடுத்த, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

*"25.11.2022* **அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.295/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**நி.நி.பி.ந.க.எண்.பி1/2297/2022**
**முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 22.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:598/2022** **பொருள் எண்.30**

**பெருநகர சென்னை மாநகராட்சி – நிதி நிர்வாகப்பிரிவு - GST - 18.07.2022 முதல் கட்டுமான பணிகள் மற்றும் பணி ஒப்பந்தங்களுக்கான (Construction services and Works Contract) சரக்கு மற்றும் சேவை வரி (GST) 12%லிருந்து 18% (6%கூடுதல்) ஆக உயர்த்தப்பட்டது - சரக்கு மற்றும் சேவை வரி (GST) 6% கூடுதலாக உயர்த்தியதற்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறுவதில் காலதாமதத்தை தவிர்த்தல் - ஒருங்கிணைந்த திருத்திய நிர்வாக அனுமதிக்கும் மற்றும் இதற்கு தேவைப்படும் கூடுதல் தொகையை பெருநகர சென்னை மாநகராட்சி சொந்த நிதியிலிருந்து அனுமதித்துக் கொள்ள அனுமதி**

மத்திய அரசின் நிதி அமைச்சகத்தின் 47வது GST Council அறிவிப்பு எண்.3/2022 நாள்.13.07.2022ன்படி கட்டுமான பணிகள் மற்றும் பணி ஒப்பந்தங்களுக்கு (Construction services and Works contract) 18.07.2022 முதல் சரக்கு மற்றும் சேவை வரி (GST) 12%லிருந்து 18% (6%கூடுதல்) ஆக உயர்த்தப்பட்டது. இவ்வுயர்வை துணை ஆணையரின் (வ(ம)நி) செ.மு.ஆணை.எண்.FM.Unit.C.No.L&G-I/2297/2022, Dt.30.07.2022 (Revised GST) செயல்முறை ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் உடனடியாக நடைமுறைபடுத்த அறிவுறுத்தப்பட்டது.

2) மேற்கண்டுள்ள செயல்முறை ஆணையின் தொடர்ச்சியாக, நிதி நிர்வாக பிரிவின் FM.Unit.C.No.L&G-I/2297/2022, Dt.03.10.2022 சுற்றறிக்கையில் கீழ்கண்டுள்ள நிபந்தனைகளின்படி நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது:-

Consequent to the F.M.Unit Proceedings, Dated.30.07.2022, all Zonal Officers/Heads of Departments in GCC are hereby instructed to issue Revised Administrative Sanction (orders to be obtained at appropriate level, wherever necessary) for all their works which were already approved but bills are to be generated after the effect date (i.e.18th July 2022), so as to obtain additional funds for the above GST rate revision from 12% to 18% for Construction services and Works contract.

The additional funds for the above GST rate revision purpose will be sanctioned, only after obtaining approval and issue of Revised Administrative Sanction for the concerned work.

In respect of Government schemes that are being implemented by various Departments in GCC, HoD of concerned Department is requested to communicate the requirement of additional funds to be sanctioned by the Govt., as a result of GST rate revision from 12% to 18% in respect of construction works involved in it to the respective Administrative Department in Secretariat and to get Revised Administrative Sanction for the same.

3) மேற்கண்டுள்ள நிபந்தனைகளை குறிப்பிட்டு சுற்றறிக்கை வெளியிட்ட காரணத்தால், பெருநகர சென்னை மாநகராட்சியின் துறைகள் மற்றும் மண்டலங்களில் 18.07.2022 முதல் Construction services and Works contract பணிகளுக்காக உருவாக்கும் பட்டிகளை தேர்ச்சி செய்ய திருத்திய நிர்வாக அனுமதி பெறாத நிலையில், பகுதி கணக்கு குழுமத்தில் பட்டி அனுமதிக்கவும், ERP WORK MODULE-ல் மாற்றம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

4) மத்திய அரசால், சரக்கு மற்றும் சேவை வரி (GST) 12%லிருந்து 18% (6%கூடுதல்) ஆக உயர்த்தப்பட்டதற்கு திருத்திய நிர்வாக அனுமதி பெற வேண்டும் என்ற சுற்றறிக்கையின் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து தொடர் நடவடிக்கை எடுக்க துணை ஆணையர் (வ(ம)நி) அவர்களால் 15.10.2022 அன்று அனைத்து துறைகள் மற்றும் மண்டலங்களின் பொறியியல் பிரிவு அலுவலர்கள் மற்றும் பகுதி கணக்கு குழுமத்தின் கணக்கு அலுவலர்களுடன் கூட்டம் நடத்தப்பட்டு திருத்திய நிர்வாக அனுமதி பெறுவது குறித்து அறிவுறுத்தப்பட்டது.

*5)* இதன் தொடர்ச்சியாக, மீண்டும், துணை ஆணையர் (வ(ம)நி) மற்றும் துணை ஆணையர் (பணிகள்) ஆகியோரால் *16.11.2022* அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் நிதி ஆலோசகர், தலைமையிடத்து பொறியியல் துறை சார்ந்த கண்காணிப்பு பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டு விரிவாக ஆய்வு செய்யப்பட்டபோது, உயர்த்தப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரிக்கான *(GST) 6%* கூடுதல் தொகைக்கு, பெருநகர சென்னை மாநகராட்சியின் சொந்த நிதியில் *(Own funds of Greater Chennai Corporation)* மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு ஒவ்வொரு துறை/ மண்டலத்திலும் மிக அதிக எண்ணிக்கையில் கோப்புகள் இருப்பதால் இதற்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறுவதில் மிகுந்த காலதாமதம் மற்றும் பணிச்சுமை ஏற்படும் என்றும், மற்றும் அரசு நிதி உதவி/மான்யம் பெற்று செய்யப்படும் பணிகளுக்கு *(Schemes for which Grant/ Financial assistance is received from State Government)* அரசுக்கு உரிய கடிதம் எழுதி கூடுதல் தொகையை பெறுவதற்காக ஏற்படும் காலதாமதத்தாலும் பட்டி தீர்வு செய்வதில் சுணக்கம் ஏற்பட்டு ஒப்பந்ததாரர்கள் பாதிக்கப்படுகிறார்கள் எனவும், இதனால் கட்டுமான பணிகள் பாதிக்கப்படுவதாகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

*6)* எனவே, மேற்காணும் நிர்வாக நடவடிக்கைக்கு தீர்வு காணும் வகையில், அனைத்து துறைகள்/ மண்டலம்-*1* முதல் *15* வரையிலும், *18.07.2022*க்கு முன்னதாக பெருநகர சென்னை மாநகராட்சியின் சொந்த நிதியில் பணி ஆணை வழங்கி முடிக்கப்பட்ட பணிகள்/ நடந்துகொண்டு வரும் அனைத்து பணிகளுக்கும், *18.07.2022*க்கு பின்னர் உருவாக்கம் *(Bill Generate)* செய்யும் அனைத்து பட்டிகளுக்கும், சரக்கு மற்றும் சேவை வரி *(GST) 12%*லிருந்து *18% (6%*கூடுதல்*)* ஆக உயர்த்தப்பட்டதற்கு ஒவ்வொரு கோப்பிற்கும் தனித்தனியாக திருத்திய நிர்வாக அனுமதி பெறுவதற்கு உண்டாகும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, ஒருங்கிணைந்த திருத்திய நிர்வாக அனுமதியும் மற்றும் அரசு நிதியுதவி/மான்யம் பெற்று நடைபெறும் பணிகளுக்கும் கீழ்கண்டுள்ளவாறு நடைமுறைகளை பின்பற்றுவதற்கு ஆணைகள் பிறப்பிக்க மன்றத்தின் அனுமதி பெறலாம்:-

அ*)* மத்திய அரசின் நிதி அமைச்சகத்தின் *47*வது *GST Council* அறிவிப்பு எண்.*3/2022* நாள்.*13.07.2022*ன்படி கட்டுமான பணிகள் மற்றும் பணி ஒப்பந்தங்களுக்கு *(Construction services and Works contract) 18.07.2022* முதல் சரக்கு மற்றும் சேவை வரி *(GST) 12%*லிருந்து *18% (6%*கூடுதல்*)* ஆக உயர்த்தப்பட்டதற்கு *FM.Unit.C.No.L&G-I/2297/2022 Dt.30.07.2022*ன்படி வெளியிட்ட *(Revised GST)* செயல்முறை ஆணை மற்றும் நிதி நிர்வாக பிரிவின் சுற்றறிக்கை *FM.Unit.C.No. L&G-I/2297/2022 Dt.03.10.2022*யின்படி, அனைத்து துறைகள்/ *1* முதல் *15* வரை உள்ள மண்டலங்களில் செய்யப்பட்ட கட்டுமான பணிகள் மற்றும் பணி ஒப்பந்தங்களுக்கு *(Construction services and Works contract GST) 12%*லிருந்து *18% (6%*கூடுதல்*)*ஆக உயர்த்தப்பட்ட கூடுதல் தொகைக்கு ஒப்பந்த தொகை மதிப்பீட்டின் அடிப்படையில் அதிகார பகிர்வின்படி கண்காணிப்பு பொறியாளர்கள், தலைமை பொறியாளர்கள், துணை ஆணையாளர்கள், ஆணையாளர், நிலைக்குழுக்கள் மற்றும் மன்றத்தின் வழியாக தனித்தனியாக திருத்திய நிர்வாக அனுமதி ஆணை பெறுவதற்கு ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து (மூலதன நிதி/வருவாய் நிதி) மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனைத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் பெற்றபின் பொதுவான மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில், அனைத்து பணிகளுக்கும் *6%* கூடுதல் தொகைக்கு திருத்திய நிர்வாக அனுமதியும், வழங்கப்பட்டவாறு கருதுவதற்கும்,

ஆ*) 1.* பெருநகர சென்னை மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து ரூ.*10.00* கோடிக்கு மேல் செய்யப்படும் பணிகளுக்கு *18.07.2022*க்கு முன்னதாக, அரசின் நிர்வாக அனுமதி பெற்ற அனைத்து துறைகளில் உள்ள கோப்புகளுக்கும், *6% GST* உயர்வின் காரணமாக கூடுதலாக வரும் தொகைக்கு அரசுக்கு பிரேரணைகளை அனுப்பி ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன், திருத்திய நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி, அதற்கான பட்டியை பகுதி கணக்கு குழுமம் வழியாக அனுமதித்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளவும்:-

*2.* அரசு நிதியுதவி/ மான்யம் பெற்று நடைபெறும் அனைத்து பணிகளுக்கு, ஏற்கனவே அரசு அனுமதித்துள்ள தொகைக்கு *6% GST* உயர்வின் காரணமாக கூடுதலாக அரசிடமிருந்து, பெறவேண்டிய தொகையை பெருநகர சென்னை மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட துறையிலிருந்து உரிய பிரேரணைகளை மன்ற ஒப்புதல் பெற்று அனுப்பி வைக்க வேண்டும் எனவும்:-

*3.* அரசு நிதியுதவி/ மான்யம் பெற்று நடைபெறும் அனைத்து பணிகளுக்கும், *6% GST* உயர்வினால் ஏற்படும் கூடுதல் நிதி அரசிடமிருந்து பெறுவதற்கு காலதாமதம் ஏற்படும் என்பதாலும், அதனால் பட்டி அனுமதிப்பதில் சுணக்கமும், ஒப்பந்ததாரர்கள் பாதிக்கப்படுவதை தவிர்க்கும் பொருட்டும், அரசிடமிருந்து திருத்திய நிர்வாக அனுமதியும் மற்றும் அரசு நிதியுதவி/ மான்யம் பெற்று நடைபெறும் அனைத்து பணிகளுக்கும் அவ்வாறான கூடுதல் நிதியை அரசிடமிருந்து பெற வேண்டும் என்ற நிபந்தனையுடனும், மேலும், *6% GST* உயர்வினால் ஏற்படும் கூடுதல் தொகையை பெருநகர சென்னை மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து முதலில் அனுமதிக்கவும், பின்னர் இதற்கான பட்டியை பகுதி கணக்கு குழுமம் வழியாக அனுமதித்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள அனுமதியும்:-

*4.* அரசு நிதியுதவி/ மான்யம் பெற்று நடைபெறும் பணிகளுக்கு, *6% GST* உயர்வினால் ஏற்படும் கூடுதல் தொகையை அரசிடமிருந்து பெற்ற பின்னர் அத்தொகையை பெருநகர சென்னை மாநகராட்சியின் உரிய கணக்கு தலைப்பு/கணக்கு குறியீடுகளில் வரவு வைக்கவும்:-

*5.* அரசு நிதியுதவி/மான்யம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பங்கு விகிதாசாரம் அடிப்படையில் செய்யப்பட்ட பணிகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் பங்கு தொகைக்கு *6% GST* உயர்வினால் ஏற்படும் கூடுதல் நிதியை, பெருநகர சென்னை மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து அனுமதித்துக் கொள்ளவும்.

(மற்றும்)

இ) மேலே கண்டுள்ள "அ " மற்றும் "ஆ" வின் நடைமுறைகளை பின்பற்றி சரக்கு மற்றும் சேவை வரி *(GST) 12%*லிருந்து *18% (6%*கூடுதல்) ஆக உயர்த்தப்பட்டதின்படி *Online apporpriation/Bill pass* செய்ய ஏதுவாக, *18.07.22* முதல் உருவாக்கம் செய்யப்பட்ட மற்றும் செய்யப்படவுள்ள பட்டிகளுக்கு உரிய கணக்கு குறியீட்டில் *6% GST* உயர்வினால் ஏற்படும் கூடுதல் நிதி ஒதுக்கீட்டிற்கு மாற்றம் செய்ய, மன்றத் தீர்மானத்தின் மூலமாக பொதுவான திருத்திய நிர்வாக அனுமதி பெற்ற பின்னர் அதனடிப்படையில், *IT CELL* மூலமாக *E.R.P* தளத்தில் *Work Module*-ல் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும் எனவும், இதன்பின்னர், திருத்திய கூடுதல் தொகையின்படி பட்டி அனுமதித்துக் கொள்ளவும்;

மேற்கண்டுள்ள குறிப்பின் அடிப்படையில், அ" முதல் இ" வரை உள்ள இனங்கள் மீது நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"*25.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.320/2022, நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**க.து.ந.க.எண்.பி1/ 2273-1 /2022**

**முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 03.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:599/2022** **பொருள் எண்.31**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் 2021-2022ஆம் ஆண்டின் சென்னை மாநகராட்சி பள்ளிகளை புதுப்பிக்கும் பணி, புதியதாக கட்டும் பணிகள், எரிவாயு தகனமேடை கட்டும் பணிகள் மற்றும் இதர பராமரிப்புபணிகளுக்கு ஒப்பம் கோரப்பட்டுள்ளது - பணிகள் நடைபெற்று வருகிறது - மதிப்பீடுகளுக்கு திருத்திய பின்னேற்பு நிர்வாக அனுமதி.**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.61, நாள் 28.04.2022 மற்றும் அரசாணை எண்.13 நாள்.10.01.2022ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி கட்டடத்துறையின் மூலம் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகராட்சி பள்ளிகளை புதுப்பிக்கும் பணிகள், புதியதாக கட்டும் பணிகள், எரிவாயு தகனமேடை கட்டும் பணிகள் மற்றும் புதியதாக மீன் அங்காடி கட்டும் பணிகள் போன்ற பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற்று ஒப்பம் கோரப்பட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

மத்திய அரசு அலுவலகத்தின் 30.07.2022 நாளிட்ட அறிவிப்பின்படி 18.07.2022 முதல் அனைத்து கட்டுமான பணிகள் மற்றும் சேவை பணிகளுக்கு *GST Rate* 12 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி நிதி குழுமத்தின் 03.10.2022 நாளிட்ட சுற்றறிக்கையில் அனைத்து கட்டுமான பணிகள் மற்றும் சேவைபணிகளுக்கு *GST Rate* 12 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளதை தொடர்ந்து திருத்திய நிர்வாக அனுமதி பெறுவதற்கு சுற்றறிக்கையின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்டுள்ள பணிகளின் அவசியம் மற்றும் அவசரம் கருதி தொடர்ந்து நடைபெற்று வருகிறபடியினால் GST Rate 18 சதவிகிதத்தில் பட்டி தீர்வு செய்யப்பட்டுள்ளதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டுவது அவசியமாகிறது.

**சிங்கார சென்னை 2.0(412-*102-300*)**

| வ.எண். | பணியின் விவரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | *12% GST* சேர்த்து மதிப்பீடு தொகை ரூ. | பணியின் மதிப்பீடு ரூ. |
|---|---|---|---|---|
| **1** | சிங்கார சென்னை திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சி பள்ளிகளை புதுப்பிக்கும் பணிமற்றும் புதியதாக கட்டும் பணி (மண்டலம்-4,5,6,8,9 மற்றும் 13) | **24** | 506571348.9 | 434782427.50 |
| **2.** | சிங்கார சென்னை திட்டத்தின் கீழ் *LPG* எரிவாயு தகனமேடை கட்டும் மற்றும் இதர மேம்படுத்தும் பணி. (மண்டலம்-4,5, மற்றும் 13) (Proposed Construction of LPG Crematorium and Other Development Works at Various Places at Zone-4,5,13) | **3** | 46735000 | 40121120.79 |
| | | மொத்தம் | **553306348.9** | **474903548.29** |
| **GST 6%** | | | | **28494212.88** |

412-101-401 *Grant Infrastructure and Amenities Fund*

| வ.எண். | பணியின் விவரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | *12% GST* சேர்த்து மதிப்பீடு தொகை ரூ. | பணியின் மதிப்பீடு ரூ. |
|---|---|---|---|---|
| 1. | மண்டலம்-*9* கோட்டம்-*125* லூப் சாலையில் புதியதாக மீன் அங்காடி கட்டும் பணி. | 1 | 99700000 | 79770372.85 |
| GST 6% | | | | 4786222.00 |

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, கட்டடத்துறையின் மூலம் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் 2021-2022 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகராட்சி பள்ளிகளை புதுப்பிக்கும் பணிகள், புதியதாக கட்டும் பணிகள், எரிவாயு தகனமேடை கட்டும் பணிகள் மற்றும் புதியதாக மீன் அங்காடி கட்டும் பணிகள் போன்ற பணிகளுக்கு ஒப்பம் கோரப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மத்திய அரசு அலுவலகத்தின் 30.07.2022 நாளிட்ட அறிவிப்பின்படி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி நிதி குழுமத்தின் 03.10.2022 நாளிட்ட சுற்றறிக்கையில் GST Rate 12 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள பணிகளின் மதிப்பீடுகளுக்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

1. மத்திய அரசு அலுவலகத்தின் 30.07.2022 நாளிட்ட அறிவிப்பின்படி 18.07.2022 முதல் அனைத்து கட்டுமான பணிகள் மற்றும் சேவை பணிகளுக்கு GST Rate 12சதவிகிதத்திலிருந்து 18சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளதால் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் கோரப்பட்ட பணிகளுக்கு சிங்கார சென்னை மாநகராட்சி பள்ளிகளை புதுப்பிக்கும் பணிகள்மற்றும் புதியதாக கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் GST 12%லிருந்து GST 18% உயர்த்தப்பட்டுள்ளதால் மதிப்பீடுகளுக்கு ஏற்கனவே GST 12% வழங்கப்பட்டுள்ளதால் மீதமுள்ள GST 6%க்கு ரூ.**3,32,80,435.00(**ரூபாய் மூன்று கோடியே முப்பத்தி இரண்டு இலட்சத்து எண்பதாயிரத்து நானூற்றி முப்பத்தைந்து மட்டும்**)** வழங்குவதற்கு திருத்திய நிர்வாக அனுமதியும் இச்செலவீனத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ளவும்,
2. சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் கோரப்பட்ட பணிகளுக்கு பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நடைபெற்று வரும் மற்றும் முடிக்கப்பட்ட பணிகளுக்கு இதுவரை GST 18 சதவிகிதத்தில் கணக்கீடு செய்யப்பட்டு பட்டி தீர்வு செய்யப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

*"23.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு *(*பணிகள்*)* கூட்டத்தின் தீர்மான எண். *279/2022*, நாள். *23.11.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு *(*பணிகள்*)* பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.ம.நி*)* மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

*"25.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.312/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**ம.அ1. ந.க.எண்பி1/001864 /2022**

**முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:600/2022** **பொருள் எண்.32**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-1 பகுதி-1, 2 (ம) 3 - வார்டு 1 முதல் 14 வரை உள்ள கோட்டங்கள் மற்றும் மண்டல அலுவலகம் - பணிபுரியும்15 எண்ணிக்கையிலான புள்ளி விவர குறிப்பாளர்கள் – தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் ( 01.05.2022 முதல் 31..10.2022 வரை) பணிபுரிய நிர்வாக அனுமதி பெறப்பட்டது- 31.10.22ல் பணிக்காலம் முடிவடைகிறது - 01.11.2022 முதல் 30.04.2023 வரை தற்காலிக பணியாளர்கள் பணி அமர்த்தி தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள அனுமதி.**

மண்டலம் 1ல் வார்டு எண் 1 முதல் 14 வரையிலான கோட்டங்கள், பகுதி அலுவலகங்கள் 1,2,3 மற்றும் மண்டல அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் (உதவியாளர்கள்) பணியமர்த்தப்படாததால் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் *(NULM)* கீழ் தற்காலிக பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்போது 23.02.2021ல் *ENVRO Solution* தனியார் வசம் துப்புரவு பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் *(NULM)* கீழ் பணிபுரிந்து வந்த அனைத்து பணியாளர்களும் நிறுத்தி வைக்கப்பட்டதால் மீண்டும் இப்பணியாளர்களை பணியமர்த்தி அலுவலக பணிகள் தடையின்றி நடைபெற வேண்டியது அவசியமாகிறது.

மண்டலம்-1 கோட்டம் 1 முதல் 14 வரை உள்ள பகுதிகளில் ஒப்ப பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்தல், கணினியில் பதிவேற்றம் செய்தல், நகரமைப்பு பிரிவில் கட்டிடம் தொடர்பான பதிவுகள் *(Building plan permission)* மழை மற்றும் புயல் போன்ற பேரிடர் காலங்களில் தினசரி அறிக்கைகள் அனுப்புதல், ஆய்வு கூட்டங்களுக்கு அறிக்கை தயாரித்தல் மற்றும் கொரோனா தொற்று நோய் *(Covid*-19) தொடர்பான தடுப்பு பணிகள் கணினியில் பதிவேற்றம் செய்தல், புள்ளிவிவர குறிப்புகள் அனுப்புதல் போன்ற பணிகள் தொய்வு இல்லாமல் இப்பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மண்டல அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 26.05.2022 நாளிட்ட ஆணை பெறப்பட்டு, சிறப்பு அதிகாரி மன்ற தீர்மான எண்.883/2021, நாள் 06.12.2021 ஒப்புதல் பெறப்பட்டு மண்டலம்-*1* பகுதி-*1, 2* (ம) *3* , வார்டு *1* முதல் *14* வரை உள்ள கோட்டங்கள், மண்டல அலுவலகம் மற்றும் பகுதி அலுவலகத்தில் பணிபுரிய 15 எண்ணிக்கையிலான தற்காலிக புள்ளிவிவர குறிப்பாளர்கள் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் *(NULM)* கீழ் 01.05.2022 முதல் 31.10.2022 வரை ஆறு மாத காலத்திற்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.470/- வீதம் 184 நாட்களுக்கு *(Data Entry Operator)* (ரூ.470 *X 15 X 184 =* ரூ.1297200) ரூ1297200/-க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் தொடர்ந்து தொய்வில்லாமல் நடைபெற்று வருகிறது.

மேற்படி மண்டலம்-*1*, பகுதி-*1, 2* (ம) *3*, வார்டு *1* முதல் *14* வரை பணிபுரியும் தற்காலிக புள்ளிவிவர குறிப்பாளர்களின் பணிக்காலம் 31.10.2022 அன்று பணி முடிவடையும் நிலையில் 01.11.2022 முதல் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 06.06.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில் புள்ளிவிவர குறிப்பாளர்களுக்கு *(Data Entry Operator)* நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ 486/- என விலைவிவர பட்டியலின்படி (வ.எண் 85) நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்டல வார்டு குழு-1, 12.09.2022 நாளிட்ட அனுமதியின்படி மண்டலம்-*1*, பகுதி-*1, 2* (ம) *3*, வார்டு *1* முதல் *14* வரை பணிபுரியும் 15 தற்காலிக புள்ளிவிவர குறிப்பாளர்களின் பணிக்காலம் 31.10.2022 அன்று பணி முடிவடையும் நிலையில் உள்ளதால் 01.11.2022 முதல் 30.04.2023 வரை தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள பொருள் எண் 34, தீர்மான எண் 251ல் மண்டல வார்டு குழு1 ன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1 பகுதி அலுவலகங்கள் 1, 2 (ம) 3க்கு, மற்றும் மண்டல அலுவலகத்தில் பணிபுரிய 15 எண்ணிக்கையிலான தற்காலிக புள்ளி விவர குறிப்பாளர்கள் *(Data Entry Operators)* தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் *(NULM)* கீழ் 01.11.2022 முதல் 30.04.2023. வரை 6 மாத காலத்திற்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.486/- வீதம் (ரூ.486 X 15 X181=ரூ.1319490/-) ரூ.13,19,490/- (ரூபாய் பதிமூன்று இலட்சத்து பத்தொன்பதாயிரத்து நானூற்று தொண்ணூறு மட்டும்) பணி அமர்த்தி பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,

2) மண்டலம்-1க்கு 2022-23 ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் பிரிவு எண்20-21-06, கணக்கு குறியீட்டு எண்220-110-314ல்/- பட்டிகள் தீர்வு செய்திட ரூ.13,19,490/-ஐ நிதி ஆலோசகர் மூலம் நிதி ஒதுக்கீடு வேண்டியும்,

3) மண்டலம்- 1ல் மேற்குறிப்பிட்ட பணிக்கு 01.11.2022 முதல் 30.04.2023 வரை தற்காலிக புள்ளி விவர குறிப்பாளர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமாப்பிக்கப்படுகிறது.

“23.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 282/2022, நாள். 23.11.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“25.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.314/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

*** * * * * ***

<u>ம.அ.2நக.எண் சி1/3701/2022</u>

<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 03.11.2022 நாளிட்ட குறிப்பு</u>

**தீர்மான எண்:601/2022** **பொருள் எண்.33**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-2 (மணலி), வார்டு-15 முதல் 22 வரை உள்ள பகுதிகளில் உள்ள மக்காத குப்பைகள் தரம் பிரிக்கும் RRC மையத்திற்கு தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் பணிபுரியும் 18 NULM பணியாளர்களின் பணிக்காலம் 31.10.2022 அன்று முடிவடையவுள்ளது - இந்த பணியாளர்களின் பணிகாலத்தினை கூடுதலாக 01.11.2022 முதல் 31.10.2023 வரை பணிநீட்டிப்பு செய்ய நிர்வாக அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-2ல் (மணலி) பகுதி-4 மற்றும் 5, வார்டு-15 முதல் 22 வரை 43.93 சதுர கி.மீ பரப்பளவுள்ள 8 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 10 எண்ணிகையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1157 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகரமயமாக்குதலுக்கு பின்னர் நாளுக்கு நாள் இம்மண்டலத்தின் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது. மண்டலம்-2 (மணலி) வார்டு-15 முதல் 22 வரை உள்ள பகுதியில் தோராயமாக 60 மெட்ரிக் டன் குப்பைககள் தினந்தோறும் சேகரிக்கப்படுகிறது. வார்டு-15 முதல் 22 வரை 8 வார்டுகளில் துப்புரவு பணிகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு 232 பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டலம்-2, வார்டு-15 முதல் 22 வரை உள்ள 8 வார்டுகளில் 9 எண்ணிக்கை கொண்ட RRC மையங்கள் உள்ளன. இம்மையங்களில் தனியார் நிறுவனத்திடமிருந்து *(Chennai Enviro Solution Pvt. Ltd)* பெறப்படும் மக்காத குப்பைகளில் இருந்து துணி, செருப்பு, தர்மா கோல், பிளாஸ்டிக் கவர், மின்சாதன பொருட்கள் மற்றும் கைப்பை என தரம் பிரித்து அவற்றை மறு சுழற்சிக்காக *Incinerator plant*க்கு அனுப்பவும், தனியார் நிறுவனத்திடமிருந்து பெறப்படும் குப்பைகளின் அளவினை முறையாக கணக்கீடு செய்வதை கண்காணிக்கவும், அவ்வாறான கணக்கினை சரியாக பதிவேட்டில் பதிவு செய்யவும் மற்றும் சுகாதார கேடு ஏற்படாத வகையில் மையத்தினை தூய்மையாக பராமரிக்கவும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக பணியாளர்கள் எவரும் இல்லாததால், பணிகளில் தேக்க நிலை ஏற்படும் நிலை உள்ளது. எனவே, ஒரு RRC மையத்திற்கு தலா 2 நபர்கள் வீதம் 9 மையத்திற்கு 18 நபர்கள் தேவைப்படுகிறார்கள்.

வார்டு-15 முதல் 22 வரை வார்டுகளில் உள்ள RRC மையங்கள் விவரம் அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வார்டு எண் | குப்பை தரம் பிரிக்கும் மையம் | குப்பை தரம் பிரிக்க தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 15 | மணலி புது நகர் 150 அடி சாலை *(Burial Ground)* | 2 |
| 16 | MRB நகர் | 2 |
| 17 | கத்தாகுழி | 2 |
| 18 | பாரதியார் தெரு | 2 |
| 19 | கொசப்பூர் *(Near 100 bed hospital)* | 2 |
| 20 | முல்லை கார்டன் | 2 |
| 21 | சபாபதி கார்டன் | 2 |
| 22 | கருணாநிதி தெரு | 2 |
| 22 | வேலு தெரு | 2 |
| | மொத்தம் | 18 |

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின், 06.06.2022 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி துப்புரவு பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.424/- என வரிசை எண்-64ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் 01.11.2022 முதல் 31.10.2023 வரை ரூ.27,85,680/- (ரூபாய் இருபத்து ஏழு இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரத்து அறுநூற்று எண்பது மட்டும்) (18நபர்கள்Xரூ.424X365நாட்கள்) ஆகும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலகம்-2 வார்டு குழுவின் 4வது சாதாரண கூட்டத்தில் மேற்கண்ட *RRC NULM* பணியாளர்களின் பணிக்காலத்தை 01.11.2022 முதல் 31.10.2023 வரை பணிநீட்டிப்பு செய்ய தீர்மான எண் 257, நாள்10.08.2022 நிறைவேற்றப்பட்டுள்ளது,

எனவே,

1. மண்டலம்-2 (மணலி), வார்டு-15 முதல் 22 வரைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள *RRC* மையத்திற்கு, 18 பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் *(National Urban Livelihood Mission - NULM)* குழுக்கள் அமைத்து அதன் மூலமாக பணியமர்த்த நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட பணிக்காக ஆகும் செலவு தொகை ரூ.27,85,680/- (ரூபாய் இருபத்து ஏழு இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரத்து அறுநூற்று எண்பது மட்டும்) (18நபர்கள்Xரூ.424X365நாட்கள்) நிதிஆலோசகர் மூலம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு பெற நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. இப்பணிக்கான தொகையை கணக்கு குறியீட்டு எண் 40-41-03, கணக்கு தலைப்பு எண் 210-100-601ன் கீழ் மேற்கொள்ளவும்,
4. மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.424/- என்பது 2022–2023ஆம் ஆண்டு அரசினால் நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம், எதிர்வரும் காலங்களில் 2023-2024 ஆம் ஆண்டிற்கான தினக்கூலி ஊதியம் உயர்த்தி அரசினால் நிர்ணயம் செய்யப்படின் உயர்த்தி வழங்கிய தினக்கூலி ஊதியத்தை நிர்ணயம் செய்து வழங்க சிறப்பு அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பொது சுகாதாரம்) நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான.எண்.087/2022, நாள்.21.11.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"25.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.296/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**ம.அ.5நக.எண்.சி2/15600/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:602/2022** **பொருள் எண்.34**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5, பகுதி-12, 13 மற்றும் 14, கோட்டம்-49 முதல் 63 வரை துப்புரவு பணி மேற்கொள்ள நிரந்தர பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக 01.11.2022 முதல் 30.04.2023 வரை 6 மாதங்களுக்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 965 எண்ணிக்கையிலான தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-12, 13 மற்றும் 14, கோட்டம்-49 முதல் 63 வரை உள்ள பகுதிகளில் துப்புரவு பணிகளான தெருக்களில் கூட்டுவது, குப்பைகளை அகற்றுவது மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கு 2176 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர். சிறப்பு அதிகாரி மற்றும் முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின், 16.02.2022 நாளிட்ட ஆணையின் படி மேற்கண்ட பணியாளர்களில் உள்ள காலிப்பணியிடங்களை 864 எண்ணிக்கையிலான தற்காலிக துப்புரவு பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் நியமனம் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டு, சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.156/2022, நாள்.17.02.2022 பெறப்பட்டு 864 எண்ணிக்கையிலான தற்காலிக NULM துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி நடைபெற்று வருகிறது. தற்போது மேற்கண்ட மன்ற தீர்மானத்திற்கான பணிக்காலமானது 31.10.2022 அன்றுடன் முடிவடைந்துள்ளது.

மண்டலம்-5 ஐ சார்ந்த பகுதிகளில் சென்னையில் முக்கிய பழமை வாய்ந்த இராயபுரம், பிராட்வே, எம்.சி ரோடு, வண்ணாரப்பேட்டை, எழும்பூர் போன்ற பகுதிகள் உள்ளடக்கியதாகும். மேலும், கடற்கரை சாலைகள் தலைமைச் செயலகம், நேவல் கேஸ், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் ரிப்பன் கட்டிட வளாகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களை கொண்டு தனியாக தினமும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தவிர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5க்கு உட்பட்ட பகுதிகளில் அரசு ஸ்டான்லி மருத்துவமனை, அரசு பல் மருத்துவமனை, அரசு கண் மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் மற்றும் மகப்பேறு மருத்துவமனை, சென்னை தீவுத் திடல், சென்ட்ரல் இரயில் நிலையம், எழும்பூர் ரயில் நிலையம், பிராட்வே பேருந்து நிலையம், மூலக்கொத்தளம் இடுகாடு, சென்னை பெருநகர் குற்றவியல் நீதிமன்றம், அல்லிக்குள வளாகம் மற்றும் நீதிமன்றம், பீச் ஸ்டேஷன் இரயில் நிலையம், பழமை வாய்ந்த இந்து கோவில்கள், பழமை வாய்ந்த மசூதிகள், அரண்மனைக்கார தெரு, கிருஸ்துவ ஆலயம், சென்னை துறைமுகம், சென்னை எழும்பூர் அருங்காட்சியகம், பூங்காக்கள், விளையாட்டு திடல், ஓட்டல்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் ஆகியன உள்ளன மேற்கண்ட பகுதிகளில் பொதுமக்கள் அதிகமாக வந்து செல்வதால் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டி உள்ளது. இந்நிலையில் மேற்கண்ட மன்ற தீர்மானத்தின் பணிக்காலமானது 31.10.2022 அன்று முடிவடைந்துள்ளதால், தற்போது கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு காலிபணியிடங்களுக்கு தற்காலிக துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்து துப்பரவு பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

துப்புரவு பணியாளர் தேவைப் பட்டியல் கணக்கீடு:

| பகுதி எண் | வார்டு எண் | ஒப்பளிக்கப்பட்ட நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | 31.10.2022 அன்று பணிபுரியும் நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | 31.10.2022 அன்று காலி பணியிடம் | தற்போது கோட்டம் வாரியாக குழுக்களில் பணிபுரியும் NULM துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 01.11.2022 முதல் 30.04.2023 வரை நாள் ஒன்றுக்கு பணியமர்த்தப்படும் NULM பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 12 | 49 | 102 | 59 | 43 | 36 | 36 |
| | 50 | 130 | 54 | 76 | 60 | 60 |
| | 51 | 80 | 59 | 21 | 36 | 36 |
| | 52 | 124 | 57 | 67 | 50 | 50 |
| | 53 | 165 | 71 | 94 | 87 | 87 |
| | TPF | 34 | 22 | 12 | 20 | 20 |
| 13 | 54 | 109 | 64 | 45 | 43 | 43 |
| | 55 | 87 | 54 | 33 | 31 | 31 |
| | 56 | 101 | 56 | 45 | 35 | 35 |
| | 57 | 188 | 76 | 112 | 103 | 103 |
| | 60 | 187 | 75 | 112 | 98 | 98 |
| | LFZ | 42 | 20 | 22 | 38 | 38 |
| 14 | 58 | 158 | 96 | 62 | 82 | 82 |
| | 59 | 170 | 118 | 52 | 84 | 84 |
| | 61 | 169 | 99 | 70 | 63 | 63 |
| | 62 | 120 | 69 | 51 | 52 | 52 |
| | 63 | 117 | 84 | 33 | 44 | 44 |
| | TASK FORCE | 23 | 8 | 15 | 0 | 3 |
| மொத்தம் | | 2106 | 1141 | 965 | 962 | 965 |

மேற்கண்ட அட்டவணைப்படி மண்டலம்–5, வார்டு-49 முதல் 63 வரை, TPF, LFZ, SRB மற்றும் TASK FORCE ஆகிய வார்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 2176 ஆகும்.

இதில் கடந்த 1.2.2022 முதல் 31.10.2022 வரை சுமார் 864 பணியிடங்களுக்கு (SRB, TASK FORCE தவிர்த்து) அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த இடைப்பட்ட காலத்தில் வயது முதிர்வு/தன்விருப்ப ஓய்வு மற்றும் இறப்பு காரணங்களால் கூடுதலாக 86 பணியிடங்கள், (TASK FORCE தவிர்த்து) காலியாக உள்ளது. தற்போது கோட்டம் 49 முதல் 63 வரை, TPF, LFZ, TASK FORCE ஒதுக்கப்பட்டுள்ள 2106 பணியாளர்களில் 1141 பணியாளர்கள் பணிபுரிந்து வருவதால் 965 காலிப்பணியிடங்களாக உள்ளது.

மண்டலம்–5ல் 50 குழுக்கள் மூலமாக சுமார் 1004 பணியாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் பணிக்கு வராத பணியாளர்கள் தவிர்த்து தற்போது 962 பணியாளர்கள் உள்ளனர். ஏற்கனவே பெறப்பட்ட மன்றத்தீர்மானத்தின்படி 864 பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் குழுவில் உள்ள 962 NULM துப்புரவு பணியாளர்கள் பயன்படும் வகையில் சுழற்சி முறையில் நாள் ஒன்றுக்கு 864 பணியாளர்கள் மட்டும் பணிக்கப்பட்டனர்.

தற்போது அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி 965 காலிபணியிடங்களுக்கு ஏற்ப பணியாளர்கள் நிரப்பும் போது தினமும் பணிபுரியும் பணியாளர்களின் வருகை அதிகரிக்கும்

கோட்டம் 54, 55, 57 மற்றும் 59 க்கு உட்பட்ட பகுதிகளான WALL TAX சாலை மற்றும் அண்ணா சாலைகளை தூய்மை பகுதியாக மாற்ற அறிவுறுத்தியதன் அடிப்படையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் துப்புரவு பணி போதுமானதாக இல்லை. இப்பகுதி வணிக வர்த்தகங்கள் உள்ள பகுதி என்பதால் காலை, மாலை மற்றும் இரவு ஆகிய நேரங்களில் தலா இரண்டு முறை சுத்தம் செய்யப்படவேண்டும். எனவே, TASK FORCE ல் உள்ள காலி பணியிடங்களுக்கு குழுக்கள் மூலம் NULM பணியாளர்கள் நியமனம் செய்து மேற்குறிப்பிட்டுள்ள சாலைகளுக்கு சுத்தம் செய்ய பயன்படுத்தப்படுவார்கள் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

திடக்கழிவு மேலாண்மைத்துறையின், 06.06.2022 நாளிட்ட சுற்றறிக்கையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக தற்காலிக பணியாளர்களின் ஊதிய விகிதத்தின் படி நாள் ஒன்றுக்கு ரூ.424/- என வழங்க குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, 965 பணியாளர்களுக்கு 01.11.2022 முதல் 30.04.2023 வரை 181 நாட்களுக்கு ரூ.424 x 965 x 181 = ரூ.7,40,57,960/- (ரூபாய் ஏழு கோடியே நாற்பது இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) தேவைப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இப்பணிக்காக கணக்கு குறியீட்டு எண் 40-41-03, கணக்கு தலைப்பு எண் 210-100-601ன் கீழ் தீர்வு செய்ய வேண்டி உள்ளது

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, பகுதி 12,13 மற்றும் 14 ஆகிய பகுதிகளில் 965 பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 01.11.2022 முதல் 30.04.2023 வரை 6 மாதங்களுக்கு தற்காலிக துப்புரவு பணியாளர்களை அவசரம் அவசியம் கருதி கோட்டங்களில் உள்ள பணியின் தன்மைக்கு ஏற்றவாறு அட்டவணையில் கலம் 7ல் குறிப்பிட்டுள்ளவாறு நியமிக்கவும், 01.11.2022 முதல் ஊதியம் வழங்க அனுமதி வேண்டியும்,
2) எதிர் வரும் காலத்தில் மண்டலம்-5 துப்புரவு பணியானது தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் இப்பணியினை மேற்கொள்ளும் பட்சத்தில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் மூலம் மேற்கொள்ளப்படும் இப்பணியாணையினை ரத்து செய்ய அனுமதி வேண்டியும்,
3) எதிர் வரும் நாட்களில் அவசியம் இருப்பின் கோட்டங்களின் தன்மைக்கு ஏற்றவாறு தற்காலிக துப்புரவு பணியாளர்களை மண்டல அலுவலர் – 5 அவர்களின் அளவிலேயே கோட்டங்களுக்கு இடையே மாற்றி அமைத்துக்கொள்ள அனுமதி வேண்டியும்,
4) கூடுதலாக தேவைப்படும் 3 துப்புரவு பணியாளர்களை சுய உதவிக் குழுக்கள் மூலமாக பணியமர்த்திக்கொள்ளவும்,
5) தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பணியாளர்கள் தொடர்ந்து முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை என்றால் அவர்களை பணி மற்றும் குழுவிலிருந்து நீக்கம் செய்திடவும் அவர்களுக்கு பதிலாக வேறு பணியாளர்கள் நியமிக்க அனுமதி வேண்டியும்,
6) மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.424/- வீதம் 965 பணியாளர்களுக்கு 01.11.2022 முதல் 30.04.2023 வரை 181 நாட்களுக்கு ஆகும் செலவு தொகை ரூ. 424 x 965 x 181 =ரூ.7,40,57,960/- (ரூபாய் ஏழு கோடியே நாற்பது இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) ஆகும். மேலும் எதிர்வரும் காலங்களில் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் தமிழக அரசால் உயர்த்தி நிர்ணயிக்கப்படின் நிர்ணயிக்கப்படும் ஊதியத்தை வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,
7) மேற்படி பணிகளுக்கான செலவு தொகையை கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண் 210-100-601ன் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.92/2022, நாள்.21.11.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

*"25.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.300/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**ம.அ7ந.க.எண்.எஸ்2/ 001495 /2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:603/2022** **பொருள் எண்.35**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி-18, விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 15.10.2022 உடன் முடிவடைகிறது - 413 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 16.10.2022 முதல் 15.04.2023 வரை 182 நாட்களுக்கு பணியினை மேற்கொள்ள NULM கீழ் பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி-18, வார்டு-79 முதல் வார்டு-83 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.08 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 14 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1638 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி-18ன்கீழ் உள்ள 79 முதல் 83 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2018 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,56,255 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-18, 19, 20 ல் 79 முதல் 93 வரையிலான 15 வார்டுகளில் தோராயமாக 335 மெ.டன் குப்பைகள் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி-18ல் (வார்டு-79 முதல் 81 வரை) தற்போது உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது,

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத்துறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution Private Limited அவர்களுக்கு ஒப்பம் கோரப்பட்டு, வார்டு-82, 83 மற்றும் 85ல் பணி ஆணை வழங்கப்பட்டது. இதில் மேற்கண்ட நிறுவனம் மூலம் பகுதி-18, வார்டுகள்-82&83ல் மட்டும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, மீதமுள்ள 3 வார்டுகளில் துப்புரவு பணிகளை தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்க்கண்ட பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | பகுதி – 18 ல் உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | - | 148 |
| 2) | பகுதி –18 ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை | - | 413 |
| | மொத்தம் | - | 561 |

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்ற தீர்மான எண்.91/2022, நாள்.30.05.2022ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் வார்டு 79, 80, 81இல் 413 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 16.04.2022 முதல் 15.10.2022 வரை 182 நாட்களுக்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 15.10.2022-ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி-18ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது

இக்கருத்துக்களின் அடிப்படையில் 561 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும், தற்பொழுதுள்ள 148 நிரந்தர துப்புரவு பணியாளர்களை தவிர்த்து மீதமுள்ள 413 எண்ணிக்கை கொண்ட தற்காலிக துப்புரவு பணியாளர்கள் மண்டலம்-7, பகுதி-18க்கு தேவை என கணக்கிட்டு அவசியம் கருதி 16.10.2022 முதல் 15.04.2023 வரையில் ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பகுதி எண் | NULM துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 18 | 413 | ரூ.424x413x182(நாட்கள்) = ரூ.3,18,70,384/- |
| மொத்தம் | | | ரூ.3,18,70,384/- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர் கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின், 08.06.2022 நாளிட்ட திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான சுற்றறிக்கையின் படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.424/- வீதம் 413 பணியாளர்களுக்கு ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவு ரூ.3,18,70,384/- (ரூபாய் மூன்று கோடியே பதினெட்டு இலட்சத்து எழுபதாயிரத்து முந்நூற்று எண்பத்து நான்கு மட்டும்) என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7 அம்பத்தூர், பகுதி-18ல் 16.10.2022 முதல் 15.04.2023 வரை 6 மாதங்கள் அல்லது Chennai Enviro Solution Private Limited என்கிற நிறுவனம் மூலம் மீதமுள்ள 3 வார்டுகளை எடுத்து (Take Over) துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை எது முன்னர் வருகிறதோ (Whichever is Earlier) என்ற அடிப்படையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் அதே 413 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,
2. மேற்கண்ட 413 தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.424/- வீதம், ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவு ரூ.3,18,70,384/-(ரூபாய் மூன்று கோடியே பதினெட்டு இலட்சத்து எழுபதாயிரத்து முந்நூற்று எண்பத்து நான்கு மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண். 40-41-03, கணக்கு தலைப்பு எண். 210-10-06-01 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "21.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.89/2022, நாள்.21.11.2022-ன்படி 60 வயதுக்கு மேற்பட்ட NULM பணியாளர்களை பணியிலிருந்து விடுவிக்கவும், அவர்களுக்கு பதிலாக புதியதாக NULM பணியாளர்களை பணியமர்த்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

*“25.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.297/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*”.*

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”.**

*** * * * * ***

**ம.அ7நக.எண்.எஸ்2/001466/2022**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:604/2022** **பொருள் எண்.36**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி– 19, விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 15.10.2022 உடன் முடிவடைகிறது - 481 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 16.10.2022 முதல் 15.04.2023 வரை (182 நாட்களுக்கு) பணியினை மேற்கொள்ள NULM கீழ் பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி-19, வார்டு–84 முதல் வார்டு–88 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 13.79 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 5 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 917 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி-19ன்கீழ் உள்ள 84 முதல் 88 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2018 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,90,760 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-19ல் 84 முதல் 88 வரையிலான 5 வார்டுகளில் தோராயமாக 94.190 மெ.டன் குப்பைகள் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

மேலும், வார்டு மறு சீரமைப்பின் படி கோட்டம்-88ல் புதியதாக சேர்க்கப்பட்ட இடங்களில் பணிப்புரிந்து வந்த 90வது கோட்டத்தை சார்ந்த 6 பணியாளர்கள் 88வது கோட்டத்தில் பணியமர்த்தப்பட்டு பணிப்புரிந்து வருவதனை தொடர்ந்து ஏற்கனவே பணிபுரியும் 87 பணியாளர்களுடன் ஒட்டு மொத்தம் 93 பணியாளர்களுக்கும் 88வது கோட்டத்திலேயே ஊதியம் வழங்கப்பட்டு வருவதனை தொடர்ந்து, இக்கருத்துக்களின் அடிப்படையில் 475 எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கு பதிலாக 481 எண்ணிக்கையில் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

எனவே, தற்போது பகுதி-19ல் (வார்டு–84 முதல் 88–வரை) தற்போது உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைதுறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution Private Limited அவர்களுக்கு ஒப்பம் கோரப்பட்டு வார்டு 82, 83 & 85ல் பணி ஆணை வழங்கப்பட்டது. இதில் மேற்கண்ட நிறுவனம் மூலம் பகுதி-19ல், வார்டு-85ல் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள 4 வார்டுகளில் துப்புரவு பணிகளை தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்க்கண்ட பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | பகுதி–19ல் உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | - | 82 |
| 2) | பகுதி–19ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை | - | 481 |
| | மொத்தம் | - | 563 |

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்ற தீர்மான எண்.92/2022, நாள்.30.05.2022ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் வார்டு-84, 86, 87 மற்றும் 88ல் 475 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 16.04.2022 முதல் 15.10.2022 வரை 182 நாட்களுக்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 15.10.2022ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி-19ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 563 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும், தற்பொழுதுள்ள 82 நிரந்தர துப்புரவு பணியாளர்களை தவிர்த்து மீதமுள்ள 481 எண்ணிக்கை கொண்ட தற்காலிக துப்புரவு பணியாளர்கள் மண்டலம்-7, பகுதி-19க்கு தேவை என கணக்கிட்டு 16.10.2022 முதல் 15.04.2023 வரையில் ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பகுதி எண் | NULM துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 19 | 481 | ரூ.424x481x182 (நாட்கள்) = ரூ.3,71,17,808/- |
| மொத்தம் | | | ரூ.3,71,17,808/- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர் கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின், 08.06.2022 நாளிட்ட திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான சுற்றறிக்கையின் படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.424/- வீதம் 481 பணியாளர்களுக்கு ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவு ரூ.3,71,17,808/- (ரூபாய் மூன்று கோடியே எழுபத்திஒரு இலட்சத்து பதினேழாயிரத்து எண்ணூற்று எட்டு மட்டும்) என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-19ல் 16.10.2022 முதல் 15.04.2023 வரை 6 மாதங்கள் அல்லது Chennai Enviro Solution Private Limited என்கிற நிறுவனம் மூலம் மீதமுள்ள 4 வார்டுகளை எடுத்து (Take Over) துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை எது முன்னர் வருகிறதோ (Whichever is Earlier) என்ற அடிப்படையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் 481 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,
2. மேற்கண்ட 481 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.424/- வீதம், ஆறு மாத காலத்திற்கு ஆகும்தோராய செலவு ரூ.3,71,17,808/- (ரூபாய் மூன்று கோடியே எழுபத்தி ஒரு இலட்சத்து பதினேழாயிரத்து எண்ணூற்று எட்டு மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,

3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40- 41-03 கணக்கு தலைப்பு எண். 210-10-06-01 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"21.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.90/2022, நாள்.21.11.2022-ன்படி 60 வயதுக்கு மேற்பட்ட NULM பணியாளர்களை பணியிலிருந்து விடுவிக்கவும், அவர்களுக்கு பதிலாக புதியதாக NULM பணியாளர்களை பணியமர்த்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"25.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.298/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**ம.அ.7ந.க.எண்.எஸ்1/001185/2022**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:605/2022** **பொருள் எண்.37**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-20 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 15..10.2022 உடன் முடிவடைகிறது - 563 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை கொண்டு 16.10.2022 முதல் 15.04.2023 வரை (182 நாட்கள்) பணியினை மேற்கொள்ள NULM கீழ் பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி–20, வார்டு 89 முதல் வார்டு-93 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.03 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 26 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 260 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,59,438 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 335 மெட்ரிக் டன் குப்பைகள் வார்டு-79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால், தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி–20ல் (வார்டு–89 முதல் 93–வரை) நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும், இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் NULM பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், வார்டு மறு சீரமைப்பின்படி கோட்டம்–90லிருந்து கோட்டம்–88க்கு 6 பணியாளர்களையும், கோட்டம்–89க்கு 2 பணியாளர்களையும் பணியமர்த்தியதை தொடர்ந்து வார்டு–90ல் ஏற்கனவே பணிபுரிந்த 116 பணியாளர்களில் இந்த 8 பணியாளர்கள் தவிர்த்து, தற்போது பணிபுரியும் 108 பணியாளர்களுக்கு கோட்டம்–90லேயே ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதுபோல, கோட்டம்–89ல் ஏற்கனவே பணிபுரிந்த 113 பணியாளர்களுடன் கோட்டம்–90லிருந்து பெறப்பட்ட 2 பணியாளர்களையும் சேர்த்து தற்போது கோட்டம் – 89ல் 115 பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் நியமிக்கப்பட்ட *Chennai Enviro Solution Private Limited* அவர்களுக்கு வார்டு 82, 83 மற்றும் 85ல் பணியாணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பகுதி–20ல் (வார்டு–89 முதல் 93 வரை) துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட NULM பணியாளர்களை 16.10.2022 முதல் 15.04.2023 வரை (182 நாட்களுக்கு) பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

பகுதி–**20** ல் **NULM** திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை -563.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக *NULM* பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்ற தீர்மான எண்.93/2022, நாள்.30.05.2022ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் *(NULM)* கீழ் *569* பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள *16.04.2022* முதல் *15.10.2022* வரை ஆறு மாத காலத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது *15.10.2022*-ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி-*20*ல் *NULM* திட்டத்தின் மூலம் தொடர்ந்து *182* நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் *563* துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-20க்கு, தேவை என கணக்கிட்டு *16.10.2022* முதல் 15.*04.2023* வரை *(182* நாட்களுக்கு*)* ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பகுதி எண் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| *1* | *20* | *563* | ரூ.*424 x 563 x 182* (நாட்கள்)= ரூ. *4,34,45,584/-* |
| **மொத்தம்** | | | **ரூ. *4,34,45,584 /-*** |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின், 08.06.2022 நாளிட்ட திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.*424/-* வீதம் *563* பணியாளர்களுக்கு *16.10.2022* முதல் 15.*04.2023* வரை *(182* நாட்களுக்கு*)* ஆகும் செலவு ரூ.*4,34,45,584/-* (ரூபாய் நான்கு கோடியே முப்பத்தி நான்கு இலட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து ஐந்நூற்று எண்பத்தி நான்கு மட்டும்*)* என ஆறு மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

*1* *16.10.2022* முதல் 15.*04.2023* வரை *(182* நாட்களுக்கு*)* அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம்-7ல் குப்பைகளை அகற்ற *Chennai Enviro Solution private Limited* மூலம் *5* வார்டுகளை எடுத்து *(Takeover)* துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை, எது முன்னர் வருகிறதோ *(Whichever be earlier)* என்ற அடிப்படையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் *(NULM)* கீழ் *563* எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,

*2* மேற்கண்ட *563* தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.*424/-* வீதம், *16.10.2022* முதல் 15.*04.2023* வரை *182* நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.*4,34,45,584/-* (ரூபாய் நான்கு கோடியே முப்பத்தி நான்கு இலட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து ஐந்நூற்று எண்பத்தி நான்கு மட்டும்*)* நிர்வாக அனுமதி வேண்டியும்,

3 இப்பணியை கணக்கு குறியீட்டு எண் *40-41-03*, கணக்கு தலைப்பு எண். *210-10-06-01* கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"*21.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.91/2022, நாள்.21.11.2022-ன்படி 60 வயதுக்கு மேற்பட்ட *NULM* பணியாளர்களை பணியிலிருந்து விடுவிக்கவும், அவர்களுக்கு பதிலாக புதியதாக *NULM* பணியாளர்களை பணியமர்த்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"*25.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.299/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**ம.அ.6வதுந.க.எண்.ஆர்1/2382/2022**

**முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:606/2022** **பொருள் எண்.38**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -6 - வருவாய் துறை - பழைய வார்டு 68, புதிய வார்டு 67 - ஜெய்பீம் நகர் சமுதாய நல கூடத்தை காவல் நிலைய பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்ய அனுமதி.**

காவல் ஆய்வாளர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) K9, திரு.வி.க நகர் காவல் நிலையம் அவர்களின் 03-10-2022 நாளிட்ட கடிதத்தில் புளியந்தோப்பு மாவட்டத்தின் கீழ் இயங்கி வரும் K9, திரு.வி.க நகர் காவல் நிலையம் கதவு எண். 25/12, சத்திய நாராயணன் தெரு, பெரம்பூர், சென்னை – 600 011ல் தனியார் கட்டிடத்தில் இயங்கி வருவதாக தெரிவித்து திரு.வி.க.நகர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஜெய்பீம் நகர் சமுதாய நல கூடத்தை காவல் நிலைய பயன்பாட்டிற்கு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

காவல் துணை ஆணையர் அவர்களின் 20/10/2022 நாளிட்ட கடிதத்தில், தற்போது காவல் நிலையம் இயங்கி வரும் தனியார் கட்டிடம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவலர்கள் அதிகாரிகள் உட்பட 90 பேர் மற்றும் குற்றப்பிரிவு காவலர்கள் அதிகாரிகள் உட்பட 30 பேர் பணியாற்றும் வகையில் போதுமானதாக இல்லை எனவும், மகளிர் காவலர்களுக்கும் பொதுமக்களுக்கும் உரிய வசதி இன்றி உள்ளதாலும் ஜெய்பீம் நகர் சமுதாய நல கூடத்தை காவல் நிலைய பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்து தருமாறு கோரப்பட்டுள்ளது.

ஜெய்பீம் நகர் மற்றும் வ.உ.சி நகர் பகுதி வாழ் மக்கள் மாண்புமிகு முதல்வர் அலுவலகத்தில் அளித்த மனுவில் இப்பகுதி வாழ் ஏழை மக்கள் குடும்ப சுப மங்கள நிகழ்ச்சிகளான மஞ்சள் நீராட்டு விழா, காது குத்து விழா, பிறந்த நாள் விழா ஆகியவைகளை குறைந்த வாடகையில் எளிய முறையில் மேற்கண்ட சமுதாய நல கூடத்தில் நடத்துவதாக தெரிவித்து மேற்கண்ட சமுதாய நல கூட பயன்பாட்டை மாற்றாமல் சமூக நல கூடமாகவே பயன்படுத்த வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மாநகர வருவாய் அலுவலரின் 07/10/2022 நாளிட்ட சுற்றறிக்கையில் குறைந்த அளவு நிகழ்ச்சிகள் நடைபெறும் சமுதாய நல கூடங்களை வேறு பயன்பாட்டிற்கு மாற்றுவது குறித்து உரிய செயற்குறிப்புகள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. சமுதாய நல கூடங்களில் முன்பதிவு செய்யும் பணி 21/01/2022 முதல் மண்டலங்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது. 21/01/2022 முதல் இதுநாள் வரை இந்த சமுதாய நல கூடத்தில் 28 நிகழ்ச்சிகள் மட்டுமே நடைபெற்றுள்ளன.

இந்த சமுதாய நல கூடம் பெரம்பூர் கிராமம், பிளாக் எண். 18, சர்வே எண். 118ல் அமைந்துள்ளது. இதன் மொத்த பரப்பளவு 438 சதுர மீட்டர் ஆகும். தரைதளம் மட்டுமே உள்ள கட்டுமானத்தின் பரப்பளவு 250 சதுர மீட்டர் ஆகும். பொது மக்களின் பாதுகாப்பினை கருதி இந்த சமுதாய நல கூடத்தினை காவல் நிலைய பயன்பாட்டிற்கு அரசு நிலங்கள் / கட்டிடங்கள் வாடகை நிர்ணயம் விலைப்பட்டியல் வழிகாட்டுதல் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்தும் மற்றும் அரசு ஒதுக்கீடு தொடர்பான நிபந்தனைகளுக்குட்பட்டு ஒதுக்கீடு செய்யலாம்.

6வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 285 /2022, நாள்.17/11/2022ல் பழைய வார்டு 68, புதிய வார்டு 67, ஜெய்பீம் நகர் சமுதாய நல கூடத்தினை திரு.வி.க நகர் காவல் நிலையத்தின் தற்காலிக பயன்பாட்டிற்கு நிலம் மற்றும் உடைமை துறையின் மூலமாக குறைந்த பட்ச அரசு விலைக்கு நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே,

1. மண்டலம்-6, பழைய வார்டு-68, புதிய வார்டு-67, பெரம்பூர், செம்பியம், ஜெய்பீம் நகரில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக் கூடத்தினை, K9 திரு. வி. க நகர் காவல் நிலைய பயன்பாட்டிற்கு தற்காலிகமாக ஒதுக்கீடு செய்யலாம்.
2. வாடகை நிர்ணயம் செய்து பின்னர் தெரிவிக்கப்படும். தற்போது மேற்படி கட்டடத்தை காவல் நிலையம் இயங்க காவல்துறைக்கு வழங்க அனுமதிக்கலாம் *"(Rate may be fixed and communicated later. We may allow Police Department to take possession to function Police Station as of now)".*
3. பெருநகர சென்னை மாநகராட்சியினால் நிர்ணயம் செய்யப்படும் வாடகைத் தொகையினை தவறாது மாதம்தோறும் செலுத்தப்பட வேண்டும்.
4. தற்காலிகமாக ஒதுக்கீடு நாளிலிருந்து, அச்சமுதாய நலக் கூடத்தில் பயன்படுத்தப்படும் மின்சாதனங்களுக்கான மின்சாரக்கட்டணத்தினை K9 திரு. வி. க நகர் காவல் நிலையத்திலிருந்தே செலுத்தப்பட வேண்டும்.
5. K9 திரு. வி. க நகர் காவல் நிலையம், சமுதாய நலக் கூடத்தில் இயங்கிய காலத்திற்கு பின், மாற்று கட்டடத்திற்கு சென்ற பின் உடனடியாக சமுதாய நலக் கூடத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
6. மேற்கண்ட சமுதாய நலக் கூடத்தில் மாற்றங்கள் ஏதேனும் செய்வதாயின் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒப்புதல் பெற்ற பின்னரே மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். கட்டடத்திற்கு எந்தவொரு சேதாரமுமின்றி பயன்பாட்டு காலத்திற்கு பின்னர் பெருநகர சென்னை மாநகராட்சியின் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
7. துணை ஆணையர் (வமநி) அவர்களின் மேற்குறிப்பில் *"The place should be vacated immediately after new Police Station is completed"* என தெரிவித்துள்ளதை நடைமுறைப்படுத்தவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரையிலான நிபந்தனைகளுக்குட்பட்டு K9 திரு. வி. க நகர் காவல் நிலையம் தற்போது இயங்கிவரும் கட்டடத்தில், இடவசதி மிக குறைவாக இருப்பதால், ஜெய்பீம் நகரில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக் கூடத்தினை மாத வாடகை அடிப்படையில், வாடகையினை நிர்ணயம் செய்து, தற்காலிகமாக ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.321/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

* * * * * *

**ம.அ.8.வ.து.ந.க.எண் ஆர்1/ 104 /2022**

**முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் *19.11.2022* நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:607/2022** **பொருள் எண்.39**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 8 -வருவாய் பிரிவு- 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் தேதி முதல் வடகிழக்கு பருவமழை பெய்த காரணத்தினால் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உணவு தயார் செய்ய சென்னை மாநகராட்சி கருவூலத்தில் ரூ.1,49,60,000/-பெறப்பட்டு உணவு தயாரித்து விநியோகம் செய்யப்பட்டது - பெறப்பட்ட தொகையைவிட கூடுதலாக ரூ,12,59,549/- செலவு செய்யப்பட்டது - மொத்த பட்டி தொகை ரூ,1,62,19,549/-க்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8, வருவாய் பிரிவு, 2021, நவம்பர் மாதம் 6 ஆம் தேதி முதல் வடகிழக்கு பருவமழை காரணமாக மண்டலம் 8க்குட்பட்ட கோட்டம் - *94* முதல் 108 வரை உள்ள தெருக்களில் வெள்ளம் சூழ்ந்து பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாயினர். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உடனுக்குடன் பாதுகாப்பு நிவாரணம் மற்றும் உணவு வழங்கிட பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்களின் உத்தரவின்படி மூன்று வேளையும் 07.11.2021 முதல் உணவு தயார் செய்து அவர்களின் இடத்திற்கு வாடகை வாகனம் மூலம் சென்று உணவு வழங்க பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் கீழ்கண்ட நாட்களில் பணமாக பெறப்பட்டது.

அதன் விவரம் பின்வருமாறு

| வ.எண் | பண வழங்கப்பட்ட நாட்கள் | பெறப்பட்ட தொகை |
|---|---|---|
| *1* | 08.11.2021 அன்று கருவூலத்தில் இருந்து பெறப்பட்ட தொகை | ரூ.*20,00,000* |
| *2* | 09.11.2021 அன்று கருவூலத்தில் இருந்து பெறப்பட்ட தொகை | ரூ.*50,00,000* |
| *3* | 10.11.2021 அன்று கருவூலத்தில் இருந்து பெறப்பட்ட தொகை | ரூ.*15,00,000* |
| *4* | 13.11.2021 அன்று கருவூலத்தில் இருந்து பெறப்பட்ட தொகை | ரூ.*15,00,000* |
| *5* | *13.11.2021* (வெளி மாவட்டங்களில் இருந்து மண்டலம் *10*ல் வந்து தூய்மை பணி செய்தவர்களுக்கு உணவு வழங்க) | ரூ.*4,60,000* |
| *6* | 17.11.2021 அன்று கருவூலத்தில் இருந்து பெறப்பட்ட தொகை | ரூ.*25,00,000* |
| *7* | 29.11.2021 அன்று கருவூலத்தில் இருந்து பெறப்பட்ட தொகை | ரூ.*20,00,000* |
| | பெறப்பட்ட மொத்த முன்பணத்தொகை | ரூ.*1,49,60,000* |

1. மேற்கண்ட முன்பணத் தொகையில் மண்டலம்-8க்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு 07.11.2021 முதல் 30.11.2021 வரை உணவு தயாரித்து வழங்க வெளி நிறுவனங்களிடமிருந்து மளிகை பொருட்கள், காய்கறிகள் , கேஸ் சிலிண்டர்கள் வாட்டர் கேன்கள், சமைப்பதற்கான பாத்திரங்கள் வாடகை எடுத்தல், பாத்திரங்களை மூன்று வேளையும் சுத்தம் செய்ய பணியாளர்கள் அமர்த்தப்பட்டது. உணவு விநியோகம் செய்ய வாடகை வாகனங்கள் அமர்த்தப்பட்டன. தனியார் நிறுவனங்களிடமிருந்து பிரட் வாங்கி விநியோகம் செய்யப்பட்டது.

2.. மண்டலம்-8ல் மழை பெய்வது நின்றபோதும் வீடுகளில் தண்ணீர் தேங்கியிருந்த நிலையில் 15.11.2021 முதல் 08.12.2021 வரை, கோட்டம் 94, கே.ஆர்.எம்.பள்ளிக் கூடத்திலும், 01.12.2021 முதல் 08.12.2021 வரை கோட்டம்-100ல் கமலம்மாள் கல்யாண மண்டபத்திலும், மற்றும் கோட்டம்-99ல் சத்திய சாய் நகர் கோயில் ஆகிய மூன்று நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்ட மக்களுக்கு மொத்தம் 2,95,517 நபர்களுக்கு மூன்று வேளை உணவு தயார் செய்து வெளிவாகனங்கள் மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

மேலும், மண்டலம்-8க்குட்பட்ட கோட்டம் 94 முதல் 108 வரை உள்ள பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கும் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து மண்டலம்-8ல் பணிபுரிந்த தூய்மை பணியாளர்களுக்கும் மற்றும் வீடுகளில் தண்ணீர் தேங்கியிருந்த நிலையில் நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்ட பொது மக்களுக்கு மூன்று வேளை உணவு தயார் செய்து வழங்கப்பட்டதன் காரணமாக செலவிடப்பட்ட தொகை மொத்தம் ரூ. 1,62,19,549/- செலவு மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட வகையில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.*1,62,19,549/-* ல் முன்பணமாக பெறப்பட்ட தொகை ரூ. 1,49,60,000/- நேர் செய்யப்பட்டது. மீதமுள்ள தொகை ரூ,12,59,549/- க்கு நிதி ஒதுக்கீடு செய்து காசோலையாக வழங்கிட, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"25.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.306/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**SWM.C.No.A7/6200/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:608/2022** **பொருள் எண்.40**

**Greater Chennai Corporation – Solid Waste Management Department– Reclamation of Kodungaiyur Dumping Ground through Bio-mining Technology – Detailed Feasibility Report submitted to TNUIFSL – to accord for Administrative Sanction from the Government requested – For Ratification orders.**

The Greater Chennai Corporation intends to reclaim the Kodungaiyur dump site in compliance with SWM Rules 2016 and as per the directions of Hon'ble National Green Tribunal.

Greater Chennai Corporation has already implemented the biomining project at Perungudi dump site in order to reclaim 200 acres of land in Perungudi dump site. The proposed Biomining site at Kodungaiyur Dump site with an extent of about 342.91 acres is vested with Greater Chennai Corporation. Out of the 342.91 acres, around 252.00 acres is covered with legacy waste. The dumping of waste by Greater Chennai Corporation has been taken up since early 1980s. At present it was estimated that 66.52 Lakh Metric tons of solid legacy waste is present at the dumpsite, which are generated from Zones 1 to 8. The proposal of reclamation of site through Bio-mining technology is taken up in compliance to the SWM Rules, 2016 and also as per the time bound directions of the Hon'ble National Green Tribunal, by which 252.00 acres of land will be reclaimed.

In continuation to the above, the Principal Secretary / Commissioner, Greater Chennai Corporation had requested TNUIFSL to appoint consultant for preparation of Detailed Feasibility Report and providing transaction advisory services for the Reclamation of Kodungaiyur Dumping Ground vide letter dated 03.07.2021.

Based on the letter received from Greater Chennai Corporation, TNUIFSL initiated the process of appointment of consultants for the same and appointed the consultant M/s.Sandhya Strategic Investment and Advisory in consortium with M/s.Pollucare Engineers India Private Limited and issued Letter of Intent on 10.01.2022.

Based on the above, the Consultant submitted the Inception Report for Reclamation of Kodungaiyur dump site on 14.02.2022. On submission of Inception report, Greater Chennai Corporation convened a meeting under the Chairmanship of Principal Secretary / Commissioner, Greater Chennai Corporation along with the Experts from Anna University, IIT Chennai, TNPCB and TNUIFSL.

During the meeting it was decided by the Committee to reclaim the Kodungaiyur dump site by process of biomining and requested the consultants to submit the Draft DFR to reclaim the Kodungaiyur dumpsite through Biomining vide Minutes of Expert Committee Meeting dated 28.03.2022. Accordingly the Consultant submitted the Draft DFR on 26.10.2022.

In this regard, GCC again convened the Expert Committee meeting on 31.10.2022 consisting members Dr.Kurian Joseph, Professor, Centre for Environmental studies, Anna University, Dr.Indhumathi Nambi, Indian Institute of Technology, Dr.S.Kanmani, Director, Centre for Environmental studies, Anna University, Joint Commissioner (Health), Chief Engineer(SWM),Superintending Engineer (SWM), other Engineers and Mr.D.Selva Pandian, Vice President of TNUIFSL to review the Draft DFR submitted by the Consultant vide in ref(4) for finalization of biomining process methodology and to arrive the cost for Biomining project. Further, the committee deliberated on the biomining process in detail i.e, the methodology that has to be followed during excavation,

screening, storage, during Bio-mining operation along with safe disposal of Bio Mined products and cost estimation for the same and recommended the proposal which works out to an average biomining cost of Rs.963.29 per metric ton for implementation with due procedures vide Minutes of Expert Committee meeting dated 31.10.2022. Further the quantity of the legacy waste at KDG based on the output of drone survey at site (73.91 lakhs cubic meter assessed by the consultant) was also vetted by the Anna University & IIT experts during the meeting based on density of 900kg/Cu.m of legacy waste which amounts to 66.52 MT of legacy waste to be biomined. The above Expert committee in the meeting held on 31.10.2022 has approved the Estimated Biomining project cost of Rs.640.83 crores at the rate of Rs.963.29/MT.

Further, the project proposal was placed in 4th State level Technical committee held on 08.11.2022 and the State level Technical committee has approved the quantity of the legacy waste and Estimated Biomining project cost of Rs.640.83 crores at the rate of Rs.963.29/MT, based on the justification as mentioned in the SHPC Minutes of Meeting.

Further, the 4th State High Powered Committee meeting for SBM 2.0 chaired by Honorable Chief Secretary to Government of Tamil Nadu, along with Additional Chief Secretaries to Government, Municipal Administration and Water Supply Department & Finance Department had also approved the quantity of the legacy waste and Biomining project Estimated for Rs.640.83 Crores at the rate of Rs.963.29/MT vide Minutes of 4th State level technical Committee Meeting under Swachh Bharat Mission (2.0) dated 08.11.2022.

The Detailed Feasibility Report of this project is prepared in the form of six biomining packages for operational convenience and also based on the proposed Integrated Waste Processing facilities.

The details of the packages are tabulated below:

| S. No. | Proposed Packages at Kodungaiyur Dump Site | Waste Volume (cubic metres) | Waste Quantity (MT) @ density of 900 kg/cubic meter | Area (Acres) | Cost of each package @ 963.29 Rs/MT in Rs Crs |
|---|---|---|---|---|---|
| 1 | Package 1 | 23,55,656.40 | 21,20,090.76 | 60.31 | 204.23 |
| 2 | Package 2 | 4,60,236.76 | 4,14,213.08 | 17.99 | 39.90 |
| 3 | Package 3 | 12,61,529.50 | 11,35,376.55 | 44.04 | 109.37 |
| 4 | Package 4 | 4,90,225.50 | 4,41,202.95 | 30.09 | 42.50 |
| 5 | Package 5 | 20,39,115.76 | 18,35,204.18 | 78.15 | 176.78 |
| 6 | Package 6 | 7,84,909.06 | 7,06,418.15 | 21.32 | 68.05 |
| | **Total** | **73,91,672.98** | **66,52,505.68** | **251.9** | **640.83** |

The High Power committee chaired by the Chief Secretary to Government has sanctioned the above Biomining project estimate of Rs 640.83 crores under SBM 2.0 as follows:-

**As per the SBM 2.0 guidelines million plus cities will get funds under SBM 2.0 is tabulated below:**

| S.no | Description | Funding percentage | Amount in Crores |
|---|---|---|---|
| 1 | Govt of India | 25% | 160.21 |
| 2 | State Government | 16% | 102.53 |
| 3 | Greater Chennai Corporation (ULB) | 59% | 378.09 |
| | Total Cost of Biomining | | 640.83 |

Further, the Project also incurs Social and Environmental cost which come out to be Rs.1.95 crores and Rs.5.60 crores respectively, (in total of Rs 7.55 crores) to comply with Pollution Control Board norms. Hence, the overall Project cost is Rs.648.38 crores.

| S.No. | Cost Head | Value in Rs. Crores |
|---|---|---|
| 1. | Total Biomining Project Cost (A) | **640.83** |
| 2. | Environmental Cost (B) | **5.60** |
| 3. | Social Cost (IEC Activities) (C) | **1.95** |
| | **Total Project Cost** | **648.38** |

The Cost for the Environmental and social component estimated for Rs.7.55 crores will also have to be met out by Greater Chennai Corporation.

Accordingly Greater Chennai Corporation will be meeting out the expenditure of Rs.385.64 crores (Rs.378.09crs + Rs.7.55crs) with its own revenue and with external funding permissible in this regard for the 2 years of project period.

The project shall be executed through PMC (Anna University) for overall supervision, monitoring and certification of various activities to be carried out by the Contractor including verification and certification of payment invoices and this cost of engaging PMC also will be met by Greater Chennai Corporation.

Hence, proposal to Government to accord the Administrative sanction from Government of Tamil Nadu based on the Detailed Feasibility Report and approval of 4th State High Power Committee for the Reclamation of land by Biomining at Kodungaiyur Dumping Ground in 6 packages at Overall Estimated cost of Rs.648.38 crores. Ratification orders of the Council is requested through Standing Committee (Public Health), Standing Committee (Taxation and Finance).

*“21.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.93/2022, நாள்.21.11.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

*“25.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.301/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”.**

*** * * * * ***

**திகமேதுநகஎண்அ7/5000/2022**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:609/2022** **பொருள் எண்.41**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மண்டலம்-2 (மணலி)- மண்டலம்-1 முதல் 8 வரையில் உள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் (Phase-1) - ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணி (Operating and Maintenance (O&M) Contract) - மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை, மண்டலம்-2 (மணலி)ல் மண்டலம்-1 முதல் 8 வரையிலுள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் (Phase-1) அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அளிக்கும் பணியினை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

மேற்கண்டவாறு, 50 மெட்ரிக்டன் திறன் கொண்ட மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையத்திற்கு (Phase-1) செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள் ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.ரெயின்போ எண்டர்பிரைசஸ் அவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிக்கான ஒப்பந்த பணிக்காலம் வரும் 20.11.2022 அன்றுடன் முடிவடைவதால், பணிகள் தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக இப்பணிக்கு மேலும் ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மின்னணு ஒப்பங்கள் (Online e-Tender) கோரி ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. மேலும், ஒப்பந்ததாரர் மக்கும் கழிவுகளை உள்ளீடு செய்யும் அளவினை பொறுத்து கட்டணம் வழங்கப்பட்டு வருகிறது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் அவர்களின், 06.06.2022 நாளிட்ட செயல்முறை ஆணை மற்றும் துணை ஆணையர்(வ(ம)நி) அவர்களின், 11.10.2022 நாளிட்ட சுற்றறிக்கை விலைவிகிதத்தின் அடிப்படையில், ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணிக்கான (Operating and Maintenance (O&M) Contract) மதிப்பீடு கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது மற்றும் கடந்த ஆண்டு 38 எண்ணிக்கை பணியாளர்கள், டிராக்டர், டிரெய்லர் மற்றும் ஜே.சி.பி. இயந்திரங்கள் பயன்படுத்தியதற்கு மாற்றாக பணியின் சூழலுக்கு ஏற்ப தற்போது 32 எண்ணிக்கை பணியாளர்கள், சிறிய டிரக் மற்றும் ஸ்கிட் ஸ்டியர் லோடர் போன்ற இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளது.

| மதிப்பீட்டுத் தொகை - சுருக்கம் | | |
|---|---|---|
| அ) | 32 - எண்ணிக்கை பணியாளர்கள் செலவின தொகை | ரூ. 74,86,000/- |
| ஆ) | Mini Truck (1 No.) – வாடகை கட்டணம் | ரூ. 9,51,552/- |
| இ) | Skid Steer Loader (2 Nos.) - வாடகை கட்டணம் | ரூ. 50,97,600/- |
| ஈ) | உபகரணங்கள் மற்றும் பணியாளர்கள் நலபொருட்கள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் | ரூ. 2,13,000/- |
| உ) | Supply of EM Solution | ரூ. 22,50,000/- |
| ஊ) | Other expenses | ரூ. 2,00,000/- |
| Total Estimate Cost including GST (அ+ஆ+இ+ஈ+உ+ஊ) | | ரூ. 1,61,98,152/- |
| Rounded off to Rs.1,62,00,000/-<br>(Rupees One Crore Sixty Two Lakhs Only) | | |

எனவே,

1) மண்டலம்-2, (மணலி)ல் மண்டலம்-1 முதல் 8 வரையிலுள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் *(Phase-1)* ஒரு வருட காலத்திற்கு *(Operating and Maintenance (O&M) Contract)* செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணியை ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.1,**62,00,000/-**க்கு (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து இரண்டு இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதியும்,

2) இப்பணிக்கான செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை துறையின் வருவாய் நிதி கணக்கு தலைப்பு எண் *230-80-06-00 – Other operating and Maintenance Expenses – Other Expenses*-ல் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.94/2022, நாள்.21.11.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"25.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.302/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**<u>தி.க.மே.து.ந.க.எண்.அ7/5001/2022</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 16.11.2022 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண்:610/2022** **பொருள் எண்.42**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மண்டலம்-2 (மணலி) - மண்டலம்-1 முதல் 8 வரையில் உள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் (Phase-2) ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணி (Operating and Maintenance (O&M) Contract) - மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை, மண்டலம்-2 (மணலி)ல் மண்டலம்-1 முதல் 8 வரையிலுள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் (Phase-2) அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அளிக்கும் பணியினை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

மேற்கண்டவாறு, 50 மெட்ரிக்டன் திறன் கொண்ட மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையத்திற்கு (Phase-2) செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள் ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.ரெயின்போ எண்டர்பிரைசஸ் அவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிக்கான ஒப்பந்த பணிக்காலம் வரும் 20.11.2022 அன்றுடன் முடிவடைவதால், பணிகள் தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக இப்பணிக்கு மேலும் ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மின்னனு ஒப்பங்கள் (Online e-Tender) கோரி ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. மேலும், ஒப்பந்ததாரர் மக்கும் கழிவுகளை உள்ளீடு செய்யும் அளவினை பொறுத்து கட்டணம் வழங்கப்பட்டு வருகிறது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் அவர்களின், 06.06.2022 நாளிட்ட செயல்முறை ஆணை மற்றும் துணை ஆணையர்(வ(ம)நி) அவர்களின், 11.10.2022 நாளிட்ட சுற்றறிக்கை விலைவிகிதத்தின் அடிப்படையில், ஒரு வருட காலத்திற்கு செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணிக்கான (Operating and Maintenance (O&M) Contract) மதிப்பீடு கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது மற்றும் கடந்த ஆண்டு 38 எண்ணிக்கை பணியாளர்கள், டிராக்டர், டிரெய்லர் மற்றும் ஜே.சி.பி. இயந்திரங்கள் பயன்படுத்தியதற்கு மாற்றாக பணியின் சூழலுக்கு ஏற்ப தற்போது 32 எண்ணிக்கை பணியாளர்கள், சிறிய டிரக் மற்றும் ஸ்கிட் ஸ்டியர் லோடர் போன்ற இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளது.

| மதிப்பீட்டுத் தொகை - சுருக்கம் | | |
|---|---|---|
| அ) | 32 - எண்ணிக்கை பணியாளர்கள் செலவின தொகை | ரூ. 74,86,000/- |
| ஆ) | Mini Truck (1 No.) – வாடகை கட்டணம் | ரூ. 9,51,552/- |
| இ) | Skid Steer Loader (2 Nos.) - வாடகை கட்டணம் | ரூ. 50,97,600/- |
| ஈ) | உபகரணங்கள் மற்றும் பணியாளர்கள் நலபொருட்கள் மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் | ரூ. 2,13,000/- |
| உ) | Supply of EM Solution | ரூ. 22,50,000/- |
| ஊ) | Other expenses | ரூ. 2,00,000/- |
| Total Estimate Cost including GST (அ+ஆ+இ+ஈ+உ+ஊ) | | ரூ. 1,61,98,152/- |
| Rounded off to Rs.1,62,00,000/-<br>(Rupees One Crore Sixty Two Lakhs Only) | | |

எனவே,

1) மண்டலம்-2, (மணலி)ல் மண்டலம்-1 முதல் 8 வரையிலுள்ள மண்டலங்களிலிருந்து தினசரி சேகரிக்கப்படும் 50 மெட்ரிக்டன் மக்கும் கழிவுகளை காற்றுபுகும் வகையில் பதனம் செய்து உரம் தயாரிக்கும் நிலையம் *(Phase-2)* ஒரு வருட காலத்திற்கு *(Operating and Maintenance (O&M) Contract)* செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணியை ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.1,62,00,000/-க்கு (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து இரண்டு இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதியும்,

2) இப்பணிக்கான செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை துறையின் வருவாய் நிதி கணக்கு தலைப்பு எண் *230-80-06-00 – Other operating and Maintenance Expenses – Other Expenses*-ல் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு(பொதுசுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.95/2022, நாள்.21.11.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"25.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.303/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

<u>வ.து.ந.க.எண்.ஜி1/ 6743 /2008</u>

<u>முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 22.11.2022 நாளிட்ட குறிப்பு</u>

**தீர்மான எண்:611/2022** **பொருள் எண்.43**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி – வருவாய் துறை - பொது சீராய்வு – சொத்துவரி பொது சீராய்வு – அரசாணை வெளியிடப்பட்டது -- 1/2022-23 சீராய்வின்படி நிர்ணயிக்கப்பட்ட சொத்துவரியினை செலுத்தாத இனங்கள் – 2/2022-23 அரையாண்டில் குறிப்பிட்ட காலம் (முதல் 15 தினங்களுக்கு) கடந்து செலுத்தும் இனங்களுக்கும் - சிறப்பு நிகழ்வாக - தனிவட்டி விதிப்பு விலக்கினை 16.11.2022 தேதி முதல் 15.12.2022 தேதி வரை நீட்டித்தமைக்கு பின்னேற்பு அனுமதி.</u>**

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்,1919, பிரிவு-104ன்படி, அரையாண்டு துவக்கத்தின் முதல் 15 தினங்களுக்குள் சொத்துவரி செலுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம்,1919, பிரிவு-138, விதி -29Dல் - குறிப்பிட்ட காலம் (அரையாண்டு துவக்கத்தின் முதல் 15 தினங்கள்) கடந்து, <u>தாமதமாக சொத்துவரி செலுத்தும் சொத்து உரிமையாளர்கள் செலுத்த வேண்டிய தொகையுடன், கூடுதலாக 2 சதவீதத்திற்கு மிகாமல் தனிவட்டி (Simple Interest) சேர்த்து செலுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது</u>

மன்றத் தீர்மான எண்.494/2022, நாள்: 29.09.2022ல், மன்றத் தீர்மான எண்.63/2022, நாள்:30.05.2022ன்படி, 1/2022-23 அரையாண்டு முதல் மேற்கொள்ளப்பட்டுள்ள சொத்துவரி சீராய்வில், சொத்துவரி மதிப்பீடுகளுக்கு உயர்த்தப்பட்ட சொத்துவரியினை, 30.09.2022க்குள் செலுத்தாத சொத்து உரிமையாளர்களுக்கு **ஒரு முறை சிறப்பு நிகழ்வாக,** சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி -29Dன்படி, தனிவட்டி 2 சதவீதம் விதிப்பதற்கு, பதிலாக 0 சதவீதம் எனக் குறிப்பிட்டு, மேற்படி 2 சதவீதம் தனிவட்டி விதிப்பிலிருந்து (01.10.2022 முதல்) தளர்வு அளிக்க தீர்மானித்து, அதன்படி, உயர்த்தப்பட்ட சொத்துவரி தனிவட்டி இல்லாமல் வசூலிக்கப்பட்டு வருகிறது.

மன்றத் தீர்மான எண்.545/2022, நாள்:28.10.2022ல், சொத்துவரி சீராய்வினை எதிர்த்து, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் பல்வேறு தரப்பினரால் தொடுக்கப்பட்ட வழக்குகள் (**WP.Nos.18534, 19392, 22595 of 2022**), மீதான இறுதி தீர்ப்பு எதிர்நோக்கப்படுவதாலும், மன்றத் தீர்மான எண்.494/2022, நாள்: 29.09.2022ன் தொடர்ச்சியாகவும், உயர்த்தப்பட்ட சொத்துவரியினை, நடப்பு இரண்டாம் அரையாண்டில் (2/2022-23) குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக (15.10.2022) செலுத்தாத சொத்து உரிமையாளர்களுக்கு, **சிறப்பு நிகழ்வாக,** 2 சதவீதம் தனிவட்டி விதிப்பிலிருந்து தளர்வு அளித்து, உயர்த்தப்பட்ட சொத்துவரியினை தனிவட்டி இல்லாமல் செலுத்த, 15ம் தேதி நவம்பர் 2022 வரை நீட்டித்தமைக்கு (16.10.2022 முதல் 15.11.2022 வரை) மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கியது. அதன்படி, உயர்த்தப்பட்ட சொத்துவரியினை இதுநாள்வரை (14.11.2022) செலுத்தாத சொத்து உரிமையாளர்களுக்கு தனிவட்டி விதிக்கப்படவில்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி சீராய்வினை எதிர்த்து, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் பல்வேறு தரப்பினரால் தொடுக்கப்பட்ட வழக்குகளின் (**WP.Nos.18534, 19392,22595 of 2022**) மீதான விசாரணை கடந்த 26.09.2022 அன்று நிறைவடைந்துள்ள நிலையில், மேற்படி வழக்குகளின் மீதான மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பு எதிர்நோக்கப்படுவதன் காரணமாகவும், மன்றத் தீர்மான எண்.494/2022, நாள்: 29.09.2022 மற்றும் மன்றத் தீர்மான எண்.545/2022, நாள் 28.10.2022ன் தொடர்ச்சியாகவும், உயர்த்தப்பட்ட சொத்துவரியினை இதுநாள்வரை செலுத்தாத சொத்து உரிமையாளர்களுக்கு, தனிவட்டி இல்லாமல் சொத்துவரி செலுத்த, மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு, மேலும் கால அவகாசம் 16.11.2022 முதல் 15.12.2022 வரை நீட்டிக்கவும்,

கீழ்கண்ட இனம்-*1* மற்றும் இனம்-*2*ன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களால் *15.11.2022* நாளிட்ட ஆணையில் அனுமதிக்கப்பட்டது.

*1)* மன்றத் தீர்மான எண்.*494/2022*, நாள்: *29.09.2022* மற்றும் மன்றத் தீர்மான எண்.*545/2022*, நாள் *28.10.2022*ன் தொடர்ச்சியாக, உயர்த்தப்பட்ட சொத்துவரியினை இதுநாள்வரை செலுத்தாத சொத்து உரிமையாளர்களுக்கு, சிறப்பு நிகழ்வாக மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு, தனிவட்டி இல்லாமல் சொத்துவரி செலுத்த, மேலும் கால அவகாசம் *16.11.2022* முதல் *15.12.2022* வரை நீட்டிக்கவும்,

*2)* மேற்படி இனம்-*1*ன்படி, உயர்த்தப்பட்ட சொத்துவரியினை செலுத்தாத சொத்துவரி மதிப்பீடுகளுக்கு மட்டும், *16.11.2022* முதல் *15.12.2022* வரை தனிவட்டி *0%* சதவீதம் எனக் குறிப்பிட தகவல் தொழில் நுட்ப மையம் *(I T Cell - ERP Application)* மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும்,

எனவே, மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு, மேற்கண்ட இனம்-*1* மற்றும் இனம்-*2*ல் குறிப்பிட்டுள்ளதன் தொடர்ச்சியாக, உயர்த்தப்பட்ட சொத்துவரியினை, சொத்து உரிமையாளர்கள் தனிவட்டி இல்லமால் செலுத்த, மேலும் கால அவகாசம் *16.11.2022* முதல் *15.12.2022* வரை *(Upto 15/12/2022)* நீட்டித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டற்கு, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"25.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.305/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

**"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**பே.சா.து.ந.க.எண்.பி3/0530 /2012**

**முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.10.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:612/2022** **பொருள் எண்.44**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை- கட்டுதல், இயக்குதல் மற்றும் உரிமை மாற்றுதல் (Build, Operate and Transfer - BOT) என்ற அடிப்படையில் பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணி - சிப்பம் Bக்கு 84 பேருந்து நிழற்குடைகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது - தேசிய பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் ஊரடங்கு 25.03.2020 முதல் அமல்படுத்தப்பட்டது- ஒப்பந்ததாரர் அவர்களின் கடிதத்தில் ஊரடங்கு காலத்தில் வணிகம் பாதிக்கப்பட்டதால் 2020-21 ஆம் ஆண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகை/ சலுகை (concessionaire fees) தொகையினை தள்ளுபடி செய்து வழங்க கோரப்பட்டுள்ளது - பெருநகர சென்னை மாநகராட்சியில் மூன்று நிறுவனங்களுக்கு ஏற்கனவே சலுகைத்தொகை தள்ளுபடி செய்து வழங்கப்பட்டுள்ளது - பல்வேறு மாநில அரசு துறை மற்றும் அரசு நிறுவனங்கள் தங்களது நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சலுகை கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது - திருவாளர்கள். லக்ஷயா மீடியா லிமிடெட் சிப்பம் B க்கு சலுகைத்தொகை கட்டணத்தில் 2020-2021 நிதியாண்டு காலத்திற்கு தள்ளுபடி வழங்க அனுமதி.**

மன்றத்தீர்மான எண் 176/2014 19.06.2014 மன்றத்தீர்மானத்தின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பேருந்து நிறுத்தங்கள் பல்வேறு வகையான பேருந்து நிழற்குடைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 237 பேருந்து நிழற்குடைகள் கட்டுதல், இயக்குதல் மற்றும் உரிமை மாற்றுதல் (BOT) என்ற முறையில் சென்னை மாநகர் முழுவதும் நவீன முறையில் அமைத்திட சிப்பம் Bக்கு 84 பேருந்து நிழற்குடைகள் அமைப்பதற்கு ஒப்பம் கோரப்பட்டுள்ளது. 20.02.2014 அன்று ஒப்பந்ததாரர் திருவாளர்கள். லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு சிப்பம் Bக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. ஒப்பந்த விதிகளின்படி, (Article of 11.1) முதல் கட்ட வாடகை / சலுகை (Concessionaire Fees) முதல் 10 வருடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சலுகை தொகையில் ஒவ்வொரு ஆண்டிற்கும் 5 சதவீதம் உயர்த்தி தரவும் 10 வருடங்கள் முடிந்த பிறகு ஒப்பந்ததாரர் பணியில் திருப்தி எற்படின் அடுத்த 5 வருடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட சலுகை தொகையிலிருந்து ஒவ்வொரு ஆண்டிற்கும் 15% உயர்த்தி தரவும் ஒப்ப உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

| சிப்பம் | நிழற்குடைகள் எண்ணிக்கை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒரு பேருந்து நிழற்குடையின் சலுகைத் தொகை முதல் வருடம் |
|---|---|---|---|
| B | 84 | திருவாளர்கள். லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் | 143757 |

ஒப்பந்ததாரர் 2016ம் ஆண்டிலிருந்து தங்களுடைய வாடகை / சலுகை தொகையினை (Concessionaire Fees) வருடந்தோரும் முன்பணமாகவே செலுத்தி வருகிறார்கள். உலக சகாதார நிறுவனம் கொரோனா வைரஸ் நோய் தொற்றை உலகளாவிய நோய் தொற்றாக அறிவித்ததை தொடர்ந்து மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுப்பதற்காக தேசிய பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் ஊரடங்கு 25.03.2020 முதல் அமல்படுத்தியதை தொடர்ந்தும் மற்றும் ஒப்பந்ததாரரின் உடன்படிக்கையில்.

*ARTICLE – 15: Force Majeure Event 15.1 As used in this Agreement, a Force Majeure Event shall mean occurrence in India of any or all of Non Political Event, Indirect Political Event and/or Political Event as defined in Clauses 15.2, 15.3 and 15.4 respectively which prevent the Party claiming Force Majeure (the "Affected Party") from performing its obligations under this Agreement and which act or event (i) is beyond the reasonable control and not arising out of the fault of the Affected Party, (ii) the Affected Party has been unable to overcome such act*

*or event by the exercise of due diligence and reasonable efforts, skill and care, and (iii) has a Material Adverse Effect on the Project.*

*15.2 Non - Political Event For purposes of Clause 15.1 hereinabove, a Non - Political Event shall mean one or more of the following acts or events:*

*VII.acts of God or events beyond the reasonable control of the Affected Party which could not reasonably have been expected to occur, exceptionally adverse weather conditions, lightning, earthquake, cyclone, flood, volcanic eruption or fire (to the extent originating from a source external to the Project Site or beyond design specifications for the Construction Works) or landslide;*

*VIII.radioactive contamination or ionizing radiation;*

*IX. General strikes or boycotts (other than those involving the Concessionaire, its Contractors or their respective employees/representatives or attributable to any act or omission of any of them) interrupting supplies and services to the Project for a period exceeding 7 (seven) days in an Accounting Year, and not being an Indirect Political Event set forth in Clause 15.3;*

*X. any failure or delay of a Contractor but only to the extent caused by another Non-Political Event and which does not result in any offsetting compensation being payable to the Concessionaire by or on behalf of such Contractor;*

*XI. Any judgment or order of any court of competent jurisdiction or statutory authority in India made against the Concessionaire in any proceedings for reasons other than failure of the Concessionaire to comply with any Applicable Law or Applicable Permits or on 29 account of breach thereof, or of any contract, or enforcement of this Agreement or exercise of any of its rights under this Agreement by ITEL;*

*XII. Any event or circumstances of nature analogous to any of the foregoing.*

இயற்கை பேரிடர்களுக்கு சலுகைத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கலாம் என உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதினால், முழு ஊரடங்கு அமலில் இருப்பதாலும் மக்கள் நடமாட்டம் இல்லாத காரணத்தினாலும் ஏற்பட்ட பொருளாதார இழப்பை சரி செய்ய ஒப்பந்ததாரர் தங்களது ஒப்பந்த காலத்தினை மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டிப்பு செய்யவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்கண்ட விதிகளின் அடிப்படையில்,

(அ) திருவாளர்கள் ஸ்கைராம்ஸ் அவுட்டோர் அட்வெர்டைசிங்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்- மன்ற தீர்மான எண்:*888/2020*. நாள்: *03-11-2020*.

(ஆ) திருவாளர்கள் பைன் ஆர்ட்ஸ் கம்யூனிகேட்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், தீர்மான எண்:*889/2020*. நாள்: *03-11-2020*

(இ) திருவாளர்கள் ஷைன் அவுட்டோர் அட்வெர்டைசிங் பிரைவேட் லிமிடெட் தீர்மான எண்:*890/2020*. நாள்: *03-11-2020* ஆகிய நிறுவனங்களுக்கு சலுகை கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள். லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் அவர்களின் 28.01.2022 ஆகிய நாளிட்ட கடிதத்தில், இயற்கை பேரிடர்களுக்கு சலுகைத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கலாம் என உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பதினால், முழு ஊரடங்கு அமலில் இருப்பதாலும் மக்கள் நடமாட்டம் இல்லாத காரணத்தினாலும் ஏற்பட்ட பொருளாதார இழப்பை சரி செய்ய சலுகைத்தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு வழங்கும்படியும், ஒப்பந்ததாரர் தங்களது ஒப்பந்த காலத்தினை மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டிப்பு செய்யவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், இந்திய வானூர்தி நிலையங்களின் ஆணையம் (கோயமுத்தூர்), முதுநிலை மேலாளர் (மனிதவளம் மற்றும் வணிகம்) 21.04.2020 நாளிட்ட கடிதம், இயக்குநர், உள்ளாட்சி துறை அமைப்புகள், பஞ்சாப் மாநிலம் 15.09.2020 நாளிட்ட கடிதம், தில்லி மெட்ரோ இரயில் கழகம் (லிட்) இணை பொது மேலாளர் (property Business) 12.10.2020 நாளிட்ட கடிதம், நகராட்சி ஆணையர், கொல்கத்தா நகராட்சி அலுவலகம் 02.11.2021 நாளிட்ட சுற்றறிக்கை, தெற்கு டில்லி நகராட்சி மன்ற தீர்மான எண்:164, நாள் 17.11.2020 மற்றும் Pune Mahanagar Parivahan Mahamandal Ltd 01.12.2021 நாளிட்ட ஆகிய பல்வேறு அரசு / அரசுத்துறை நிறுவனங்கள் அளித்துள்ள கடிதம் மூலமாக விளம்பர கட்டணங்களை விளம்பர நிறுவனங்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று (Covid - 19) முழு ஊரடங்கு காலத்திற்கு (100% Lock Down) தள்ளுபடி செய்ய உரிய ஆணைகள் வழங்கி உத்திரவிடப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

<u>அட்டவணை - 1</u>

<table>
<tr><th>வ. எண்</th><th>அரசு / அரசு நிறுவனத்தின் பெயர்</th><th>விளம்பர நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கட்டண சலுகைகளின் விவரம்</th></tr>
<tr><td>1</td><td>இந்திய வானூர்தி நிலையங்களின் ஆணையம் (கோயமுத்தூர்)</td><td>மறு உத்தரவு வரும் வரை விளம்பர கட்டண நிறுவனங்களுக்கான விளம்பர கட்டண கேட்பு கடிதம் (Deferment of raising of invoice) அனுப்புவதிலிருந்து ஒத்தி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>2</td><td>இயக்குனர், உள்ளாட்சித் துறை அமைப்புகள், பஞ்சாப் மாநிலம்</td><td>24.03.2020 தேதி முதல் 6 மாத காலத்திற்கும் முழு கட்டண (100%) விலக்கு அளிக்கப்படுகிறது. மேலும் விதிமுறைகளுக்கு உட்பட்டு ஒப்பந்ததாரர்கள் மதிப்பிலான விளம்பரங்களை திருப்பி ஒப்படைக்க (Surrender) வழங்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>3</td><td>தில்லி மெட்ரோ இரயில் கழகம் ( லிட்)</td><td>ஊரடங்கு அமல்படுத்தப்பட்ட நாளான 22.03.2020 முதல் 30.09.2020 வரை விளம்பர கட்டணம் ஏதுமின்றி சலுகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், அதன் பின்னர் 01.10.2020 முதல் 31.12.2020 விரையிலான காலத்திற்கு விளம்பர கட்டணத்தை நடப்பு ஆண்டு 2020ல் உள்ள மாதங்களில் வசூலான பயணக் கட்டணத்தை இதற்கு முந்தைய ஆண்டு (2019 - 2020) ல் வசூலான பயணக் கட்டணத்தின் சராசரி கூட்டுத் தொகையுடன் இணைத்து அதனுடன் ஒப்பிட்டு கீழ்கண்டவாறு வசூலிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>Average Total journeys</th><th>License Fee</th></tr>
<tr><td>From 0% - Upto 25%</td><td>25%</td></tr>
<tr><td>Above 25% - Upto 50%</td><td>50%</td></tr>
<tr><td>Above 50% - Upto 75%</td><td>75%</td></tr>
<tr><td>Above 75% - Upto 100%</td><td>100%</td></tr>
</table></td></tr>
<tr><td>4</td><td>நகராட்சி ஆணையர், கொல்கத்தா நகராட்சி அலுவலகம் சுற்றறிக்கை எண் 41 , 2021-22, நாள் 02.11.2021.</td><td>01.04.2021 முதல் 30.06.2021 வரை (100%) கட்டண விலக்கு<br>01.07.2021 முதல் 30.09.2021 வரை (50%) கட்டண விலக்கு<br>01.10.2021 முதல் கட்டண விலக்கு அப்போதைய நிலையை ஒட்டி நிர்ணயித்து வசூலிக்கப்படும்.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 5 | தெற்கு டில்லி நகராட்சி மன்ற தீர்மான எண்:164, நாள் 17.11.2020. | 22.03.2020 to 30.06.2020 | 100% கட்டண விலக்கு |
| | | July 2020 | 25% கட்டண வசூல் |
| | | August 2020 | 25% கட்டண வசூல் |
| | | September 2020 | 50% கட்டண வசூல் |
| | | October 2020 | 50% கட்டண வசூல் |
| | | 1st November, 2020 onwards | 100% கட்டண வசூல் |

எனவே, மேற்கண்ட அரசு நிறுவனங்கள் அளித்துள்ள விலக்குகளின் அடிப்படையிலும் திருவாளர்கள். ஸ்கைராம்ஸ் அவுட்டோர் அட்வெர்டைசிங்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், திருவாளர்கள். பைன் ஆர்ட்ஸ் கம்யூனிகேட்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், திருவாளர்கள் ஷைன் அவுட்டோர் அட்வெர்டைசிங் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கு மன்றத்தீர்மான எண்கள்.888/2020, நாள் 03.11.2020. 889/2020 நாள் 03.11.2020 மற்றும் 890/2020 நாள்03.11.2020 ஆகிய மன்றத்தீர்மானத்தின்படி கட்டண விலக்கு அளிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், ஒப்பந்ததாரர் கோரியுள்ள கோரிக்கையின் விவரங்கள் கீழ்கண்டவாறு அட்டவணையிடப்பட்டு, அதன் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையின் விவரங்கள் பரிந்துரைக்கப்படுகிறது.

**அட்டவணை - 2 (சிப்பம் -Bக்கு)**

<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர்கள் கோரியுள்ள கோரிக்கை</th><th>ஒப்பந்ததாரர் மனுமீது துறையின் பரிந்துரை</th></tr>
<tr><td>1</td><td>நடப்பு நிதியாண்டில் 2020-21ல் ஊரடங்கு காலத்திற்கும் அதன் பிறகும் ஒப்பந்தவிதிகளின் படி ஒரு வருட காலத்திற்கு தள்ளுபடி செய்ய வேண்டும்.</td><td>தேசிய பேரிடர் மேலாண்டி சட்டத்தின் கீழ் ஊரடங்கு 20.03.2020 முதல் அமல்படுத்தியதை தொடர்ந்து ஒப்பந்ததாரரின் உடன் படிக்கையின் படி Article 15. Force Majeure Event 15.1 மற்றும் 15.2ன் படி இயற்கை பேரிடர்களுக்கு சலகைத் தொகை செலுத்துவதிருந்து 6 மாத காலங்கள் 01.04.2020 முதல் 30.09.2020 வரை விலக்களிக்கலாம் என கருதப்படுகிறது.</td></tr>
<tr><td>2</td><td>ஒப்பந்த காலத்தில் ஊரடங்கு அமலில் உள்ளதால் நிறுவனம் தன் கடமையை சரிவர செய்ய செயல் திறன் அற்றதாக உள்ளது. எனவே, ஊரடங்கு காலத்திற்கும் அதன்பிறகும் இயல்புநிலை திரும்பும் வரை நிறுவனம் தன் கடமையை செய்ய செயல் திறன் அற்றதாக உள்ளது என கருதபட வேண்டும்.</td><td>ஒப்பந்த காலத்தில் ஊரடங்கு அமலில் இருந்ததால் நிறுவனம் தன் கடமையை சரிவர செய்ய செயல் திறன் அற்றதாக உள்ளது. எனவே, ஊரடங்கு காலத்திற்கும் நிறுவனம் தன் கடமையை செய்ய செயல் திறன் அற்ற காலமாகவே கருதப்படலாம்.<table><tr><th>சலுகை காலம்</th><th>செலுத்த வேண்டிய சலுகை சதவீதம்</th></tr><tr><td>01.04.2020 முதல் 30.09.2020</td><td>0% வரை</td></tr></table></td></tr>
</table>

<table>
<tr><td>3</td><td>விகிதாச்சாரபடி வரும் 2020-21 ஆம் ஆண்டிற்கான சலுகை கட்டணத்தினை கோரிக்கை -1ல் கோரியுள்ள காலத்தினை தவிர்த்து மீதமுள்ள காலத்திற்கும் குறைப்பு செய்திடவும், அதே போன்ற விளம்பர செய்யும் இடம், விற்பனை காலம் வரை மேற்கண்ட விகிதாச்சார முறையில் சலுகை கட்டணத்தை செலுத்த கணக்கீடு செய்யவும் கேட்டுக் கொண்டுள்ளது.</td><td><table><tr><th>சலுகை காலம்</th><th>செலுத்த வேண்டிய சலுகை சதவீதம்</th></tr><tr><td>01.10.2020 முதல் 31.12.2020 வரை</td><td>30% வரை</td></tr><tr><td>01.01.2021 முதல் 31.03.2021 வரை</td><td>60% வரை</td></tr></table></td></tr>
<tr><td>4</td><td>உலக சுகாதார நிறுவனம் கொரோனா வைரஸ் நோய் தொற்றாக அறிவித்ததை தொடர்ந்து மத்திய அரசு மற்றும் மாநில அரசு கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுப்பதற்காக தேசிய பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் ஊரடங்கு 25.03.2020 முதல் அமல்படுத்தியதை தொடர்ந்து ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு செய்ய ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்ப காலமான 15 ஆண்டுகளுடன் கூடுதலாக ஒப்பந்த காலத்தினை மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டிப்பு செய்யவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.</td><td>பணியின் ஒப்பந்த காலம் முடிவுக்கு வரும் தருவாயில், ஒப்பந்ததாரர் கடிதம் வழங்கினால் ஒப்ப காலத்தினை நீட்டிப்பு செய்வது குறித்து முடிவு செய்யலாம்.</td></tr>
<tr><td>5</td><td>ஊரடங்கு காலத்தில் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதால் சலுகை கட்டணத்தினை ஒரு வருட காலத்திற்கு முன்கூட்டியே கட்ட வேண்டிய சலுகை தொகையினை ஒவ்வொரு காலாண்டு முடிந்த பிறகு சலுகை கட்டணத்தினை கட்ட நிறுவனத்திற்கு அனுமதி அளிக்க வேண்டும்.</td><td>சலுகைகட்டணம் ஒரு வருட காலத்திற்கு முன்கூட்டியே கட்டுவதற்கு பதிலாக வருடத்தின் ஒவ்வொரு காலாண்டிற்கும் முன்கூட்டியே சலுகைக் கட்டணம் கட்ட அறிவுறுத்தலாம்.</td></tr>
<tr><td>6</td><td>மேலும் வேறு ஏதாவது சலுகையோ அல்லது வேறு ஏதாவது நீண்ட கால பலன் ஏதும் இருப்பின், பெருநகர சென்னை மாநகராட்சியின் உரிய அலுவலரால் தனக்குள்ள வழிமுறைகளின் அடிப்படையில் அதனை பெற்றுதருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.</td><td>வேறு எந்த சலுகையும் இல்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.</td></tr>
</table>

ஏற்கனவே (அ) திருவாளர்கள் ஸ்கைராம்ஸ் அவுட்டோர் அட்வெர்டைசிங்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் – மன்ற தீர்மான எண்: 888/2020, நாள்: 03.11.2020, (ஆ) திருவாளர்கள் பைன் ஆர்ட்ஸ் கம்யூனிகேட்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், தீர்மான எண்:889/2020, நாள்: 03.11.2020, (இ) திருவாளர்க்ள் ஷைன் அவுட்டோர் அட்வெர்டைசிங் பிரைவேட் லிமிடெட், தீர்மான எண்:890/2020, நாள்: 03/11/2020 ஆகிய நிறுவனங்களுக்கு சலுகைத்தொகை செலுத்துவதிலிருந்து கொரோனா காலத்தை முன்னிட்டு விலக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. திருவாளர்கள். லக்ஷயா மீடியா லிமிடெட் நிறுவனத்தில் இருந்து விலக்களிப்பு கோரிக்கை ஏதும் பெறப்படவில்லையென்பதால், மேற்கண்ட மூன்று நிறுவனங்களுக்கு மன்றத்தீர்மானம் பெற்று சலுகை வழங்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள். லக்ஷயா மீடியா லிமிடெட் நிறுவனம் 28.01.2022 நாளிட்ட கடிதத்தில், கொரோனா கால சலுகைத்தொகை விலக்கு வழங்கக்கோரியதால், இப்பொருள் குறித்து விலக்கு வழங்குவதற்கு கோப்பு பரிசீலனையில் இருந்த நேரத்தில் இந்நிறுவனத்தால்

*Arbitration* வழக்கு தொடரப்பட்டதால், உடனடியாக விலக்கு வழங்க இயலவில்லை. இவ்வழக்கில், பெருநகர சென்னை மாநகராட்சி வழக்கறிஞர்கள் விசாரணையில் நீதிபதி முன் கொரோனா காலத்திற்கு விலக்கு வழங்க ஒத்துக் கொண்டுள்ளபடியால், தற்போது மன்ற அனுமதி பெற்று நடைமுறைபடுத்த வேண்டியது அவசியம் ஆகிறது .

எனவே, ஒப்பந்ததாரர் திருவாளர்கள். லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட சிப்பம் *B*க்கு சலுகைத்தொகை விலக்கு வழங்க கோரியுள்ள கோரிக்கையின் மீது நடவடிக்கை மேற்கொண்டு, இதர மாநில அரசு/அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சித் துறைகளில் வழங்கப்பட்ட விளம்பர கட்டண சலுகைகள் / தள்ளுபடியின்படியும், ஏற்கனவே சிப்பம் 1 முதல் 8 வரை மன்றத்தீர்மானத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட விளம்பர கட்டண சலுகைகள்/ தள்ளுபடியின் படியும், திருவாளர்கள். லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட்-ன் சிப்பம் *B*க்கு மேற்கண்ட விவர அட்டவணை 2ல், வ.எண் *1* முதல் *6* வரை தெரிவித்துள்ளவாறு சலுகைத்தொகை கட்டணவிலக்கு

| வஎ ண் | **சலுகை காலம்** | **செலுத்த வேண்டிய சலுகை சதவீதம் சலுகை காலம்** |
|---|---|---|
| *1* | *01.04.2020* முதல் *30.09.2020* | *0%* வரை |
| *2* | *01.10.2020* முதல் *31.12.2020* வரை | *30%* வரை |
| *3* | *01.01.2021* முதல் *31.03.2021* வரை | *60%* வரை |

வழங்க நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

*“23.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். *275 /2022*, நாள். *23.11.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

*“25.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.308/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

*** * * * * ***

**பே.சா.து.ந.க.எண்.பி1/0531/2012**

**முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.10.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:613/2022** **பொருள் எண்.45**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை- கட்டுதல், இயக்குதல் மற்றும் உரிமை மாற்றுதல் (Build, Operate and Transfer - BOT) என்ற அடிப்படையில் பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணி - திருவாளர்கள். லக்ஷயா மீடியா லிமிடெட் நிறுவனத்திற்கு சிப்பம் C - 88 பேருந்து நிழற்குடைகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது - தேசிய பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் ஊரடங்கு 25.03.2020 முதல் அமல்படுத்தப்பட்டது - ஒப்பந்ததாரர் அவர்களின் கடிதத்தில் ஊரடங்கு காலத்தில் வணிகம் பாதிக்கப்பட்டதால் 2020-21 ஆம் ஆண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகை/ சலுகை (concessionaire fees) தொகையினை தள்ளுபடி செய்து வழங்க கோரப்பட்டுள்ளது - பெருநகர சென்னை மாநகராட்சியில் மூன்று நிறுவனங்களுக்கு ஏற்கனவே சலுகைத்தொகை தள்ளுபடி செய்து வழங்கப்பட்டுள்ளது - பல்வேறு மாநில அரசு துறை மற்றும் அரசு நிறுவனங்கள் தங்களது நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சலுகை கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது - திருவாளர்கள். லக்ஷயா மீடியா லிமிடெட் சிப்பம் C க்கு சலுகைத்தொகை கட்டணத்தில் 2020-2021 நிதியாண்டு காலத்திற்கு தள்ளுபடி வழங்க அனுமதி.**

மன்றத்தீர்மான எண்கள் 137/2012, நாள்.11/06/2012, 170/2012 நாள்.12.06.2012, 193/2012 நாள். 19.06.2012 மற்றும் 175/2014 நாள்.19.02.2014 மன்றத்தீர்மானத்தின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பேருந்து நிறுத்தங்கள் பல்வேறு வகையான பேருந்து நிழற்குடைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 237 பேருந்து நிழற்குடைகள் கட்டுதல், இயக்குதல் மற்றும் உரிமை மாற்றுதல் (BOT) என்ற முறையில் சென்னை மாநகர் முழுவதும் நவீன முறையில் அமைத்திட சிப்பம்-C க்கு 88 பேருந்து நிழற்குடைகள் அமைப்பதற்கு ஒப்பம் கோரப்பட்டுள்ளது. 20.02.2014 அன்று ஒப்பந்ததாரர் திருவாளர்கள். லக்ஷயா மீடியா லிமிடெட் அவர்களுக்கு சிப்பம் Cக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. ஒப்பந்த விதிகளின்படி, (Article of 11.1) முதல் கட்ட வாடகை / சலுகை (Concessionaire Fees) முதல் 10 வருடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சலுகை தொகையில் ஒவ்வொரு ஆண்டிற்கும் 5 சதவீதம் உயர்த்தி தரவும் 10 வருடங்கள் முடிந்த பிறகு ஒப்பந்ததாரர் பணியில் திருப்தி ஏற்படின் அடுத்த 5 வருடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட சலுகை தொகையிலிருந்து ஒவ்வொரு ஆண்டிற்கும் 15% உயர்த்தி தரவும் ஒப்ப உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

| சிப்பம் | நிழற்குடைகள் எண்ணிக்கை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒரு பேருந்து நிழற்குடையின் சலுகைத் தொகை முதல் வருடம் |
|---|---|---|---|
| C | 88 | திருவாளர்கள். லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் | 233470/- |

ஒப்பந்ததாரர் 2016ம் ஆண்டிலிருந்து தங்களுடைய வாடகை / சலுகை தொகையினை (Concessionaire Fees) வருடந்தோறும் முன்பணமாகவே செலுத்தி வருகிறார்கள். உலக சுகாதார நிறுவனம் கொரோனா வைரஸ் நோய் தொற்றை உலகளாவிய நோய் தொற்றாக அறிவித்ததை தொடர்ந்து மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுப்பதற்காக தேசிய பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் ஊரடங்கு 25.03.2020 முதல் அமல்படுத்தியதை தொடர்ந்தும் மற்றும் ஒப்பந்ததாரரின் உடன்படிக்கையில்.

*ARTICLE – 15: Force Majeure Event 15.1 As used in this Agreement, a Force Majeure Event shall mean occurrence in India of any or all of Non Political Event, Indirect Political Event and/or Political Event as defined in Clauses 15.2, 15.3 and 15.4 respectively which prevent the Party claiming Force Majeure (the "Affected Party") from performing its obligations under this*

*Agreement and which act or event (i) is beyond the reasonable control and not arising out of the fault of the Affected Party, (ii) the Affected Party has been unable to overcome such act or event by the exercise of due diligence and reasonable efforts, skill and care, and (iii) has a Material Adverse Effect on the Project.*

*15.2 Non - Political Event For purposes of Clause 15.1 hereinabove, a Non - Political Event shall mean one or more of the following acts or events:*

*VII. acts of God or events beyond the reasonable control of the Affected Party which could not reasonably have been expected to occur, exceptionally adverse weather conditions, lightning, earthquake, cyclone, flood, volcanic eruption or fire (to the extent originating from a source external to the Project Site or beyond design specifications for the Construction Works) or landslide;*

*VIII. radioactive contamination or ionizing radiation;*

*IX. General strikes or boycotts (other than those involving the Concessionaire, its Contractors or their respective employees/representatives or attributable to any act or omission of any of them) interrupting supplies and services to the Project for a period exceeding 7 (seven) days in an Accounting Year, and not being an Indirect Political Event set forth in Clause 15.3;*

*X. any failure or delay of a Contractor but only to the extent caused by another Non-Political Event and which does not result in any offsetting compensation being payable to the Concessionaire by or on behalf of such Contractor;*

*XI. Any judgment or order of any court of competent jurisdiction or statutory authority in India made against the Concessionaire in any proceedings for reasons other than failure of the Concessionaire to comply with any Applicable Law or Applicable Permits or on 29 account of breach thereof, or of any contract, or enforcement of this Agreement or exercise of any of its rights under this Agreement by ITEL;*

*XII. Any event or circumstances of nature analogous to any of the foregoing.*

இயற்கை பேரிடர்களுக்கு சலுகைத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கலாம் என உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதினால், முழு ஊரடங்கு அமலில் இருப்பதாலும் மக்கள் நடமாட்டம் இல்லாத காரணத்தினாலும் ஏற்பட்ட பொருளாதார இழப்பை சரி செய்ய ஒப்பந்ததாரர் தங்களது ஒப்பந்த காலத்தினை மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டிப்பு செய்யவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்கண்ட விதிகளின் அடிப்படையில்,

(அ) திருவாளர்கள் ஸ்கைராம்ஸ் அவுட்டோர் அட்வெர்டைசிங்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் - மன்ற தீர்மான எண்:*888/2020*. நாள். *03-11-2020*.

(ஆ) திருவாளர்கள் பைன் ஆர்ட்ஸ் கம்யூனிகேட்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், தீர்மான எண்:*889/2020*. நாள். *03-11-2020*

(இ) திருவாளர்கள் ஷைன் அவுட்டோர் அட்வெர்டைசிங் பிரைவேட் லிமிடெட் தீர்மான எண்:*890/2020*. நாள். *03-11-2020* ஆகிய நிறுவனங்களுக்கு சலுகை கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள். லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் 28.01.2022 நாளிட்ட கடிதத்தில், இயற்கை பேரிடர்களுக்கு சலுகைத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கலாம் என உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதினால், முழு ஊரடங்கு அமலில் இருப்பதாலும் மக்கள் நடமாட்டம் இல்லாத காரணத்தினாலும் ஏற்பட்ட பொருளாதார இழப்பை சரி செய்ய சலுகைத்தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு வழங்கும்படியும், ஒப்பந்ததாரர் தங்களது ஒப்பந்த காலத்தினை மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டிப்பு செய்யவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், இந்திய வானூர்தி நிலையங்களின் ஆணையம் (கோயமுத்தூர்), முதுநிலை மேலாளர் (மனிதவளம் மற்றும் வணிகம்) 21.04.2020 நாளிட்ட கடிதம், இயக்குநர், உள்ளாட்சி துறை அமைப்புகள், பஞ்சாப் மாநிலம் 15.09.2020 நாளிட்ட கடிதம், தில்லி மெட்ரோ இரயில் கழகம் ( லிட்) இணை பொது மேலாளர் *(property Business)* 12.10.2020 நாளிட்ட கடிதம், நகராட்சி ஆணையர், கொல்கத்தா நகராட்சி அலுவலகம் 02.11.2021 நாளிட்ட சுற்றறிக்கை, தெற்கு டில்லி நகராட்சி மன்ற தீர்மான எண்:164, நாள் 17.11.2020 மற்றும் *Pune Mahanagar Parivahan Mahamandal Ltd* 01.12.2021 நாளிட்ட ஆகிய பல்வேறு அரசு / அரசுத்துறை நிறுவனங்கள் அளித்துள்ள கடிதம் மூலமாக விளம்பர கட்டணங்களை விளம்பர நிறுவனங்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று *(Covid – 19)* முழு ஊரடங்கு காலத்திற்கு *(100% Lock Down)* தள்ளுபடி செய்ய உரிய ஆணைகள் வழங்கி உத்திரவிடப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

**அட்டவணை - 1**

| வ. எண் | அரசு / அரசு நிறுவனத்தின் பெயர் | விளம்பர நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கட்டண சலுகைகளின் விவரம் |
|---|---|---|
| 1 | இந்திய வானூர்தி நிலையங்களின் ஆணையம் (கோயமுத்தூர்) | மறு உத்தரவு வரும் வரை விளம்பர கட்டண நிறுவனங்களுக்கான விளம்பர கட்டண கேட்பு கடிதம் *(Deferment of raising of invoice)* அனுப்புவதிலிருந்து ஒத்தி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 2 | இயக்குனர், உள்ளாட்சித் துறை அமைப்புகள், பஞ்சாப் மாநிலம் | 24.03.2020 தேதி முதல் 6 மாத காலத்திற்கும் முழு கட்டண (100%) விலக்கு அளிக்கப்படுகிறது. மேலும் விதிமுறைகளுக்கு உட்பட்டு ஒப்பந்ததாரர்கள் மதிப்பிலான விளம்பரங்களை திருப்பி ஒப்படைக்க *(Surrender)* வழங்கப்பட்டுள்ளது. |
| 3 | தில்லி மெட்ரோ இரயில் கழகம் ( லிட்) | ஊரடங்கு அமல்படுத்தப்பட்ட நாளான 22.03.2020 முதல் 30.09.2020 வரை விளம்பர கட்டணம் ஏதுமின்றி சலுகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், அதன் பின்னர் 01.10.2020 முதல் 31.12.2020 வரையிலான காலத்திற்கு விளம்பர கட்டணத்தை நடப்பு ஆண்டு 2020ல் உள்ள மாதங்களில் வசூலான பயணக் கட்டணத்தை இதற்கு முந்தைய ஆண்டு (2019 – 2020) ல் வசூலான பயணக் கட்டணத்தின் சராசரி கூட்டுத் தொகையுடன் இணைத்து அதனுடன் ஒப்பிட்டு கீழ்கண்டவாறு வசூலிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><table><tr><td>*Average Total journeys*</td><td>*License Fee*</td></tr><tr><td>*From 0% - Upto 25%*</td><td>*25%*</td></tr><tr><td>*Above 25% - Upto 50%*</td><td>*50%*</td></tr><tr><td>*Above 50% - Upto 75%*</td><td>*75%*</td></tr><tr><td>*Above 75% - Upto 100%*</td><td>*100%*</td></tr></table> |

<table>
<tr><td>4</td><td>நகராட்சி ஆணையர், கொல்கத்தா நகராட்சி அலுவலகம் சுற்றறிக்கை எண் 41 , 2021-22, நாள் 02.11.2021.</td><td>01.04.2021 முதல் 30.06.2021 வரை (100%) கட்டண விலக்கு<br>01.07.2021 முதல் 30.09.2021 வரை (50%) கட்டண விலக்கு<br>01.10.2021 முதல் கட்டண விலக்கு அப்போதைய நிலையை ஒட்டி நிர்ணயித்து வசூலிக்கப்படும்.</td></tr>
<tr><td>5</td><td>தெற்கு டில்லி நகராட்சி மன்ற தீர்மான எண்:164, நாள் 17.11.2020.</td><td><table>
<tr><td>22.03.2020 to 30.06.2020</td><td>100% கட்டணவிலக்கு</td></tr>
<tr><td>July 2020</td><td>25% கட்டண வசூல்</td></tr>
<tr><td>August 2020</td><td>25% கட்டண வசூல்</td></tr>
<tr><td>September 2020</td><td>50% கட்டண வசூல்</td></tr>
<tr><td>October 2020</td><td>50% கட்டண வசூல்</td></tr>
<tr><td>1st November, 2020 onwards</td><td>100% கட்டண வசூல்</td></tr>
</table></td></tr>
</table>

எனவே, மேற்கண்ட அரசு நிறுவனங்கள் அளித்துள்ள விலக்குகளின் அடிப்படையிலும் திருவாளர்கள். ஸ்கைராம்ஸ் அவுட்டோர் அட்வெர்டைசிங்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், திருவாளர்கள். பைன் ஆர்ட்ஸ் கம்யூனிகேட்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், திருவாளர்கள். ஷைன் அவுட்டோர் அட்வெர்டைசிங் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கு மன்றத்தீர்மான எண்கள்.888/2020, நாள். 03.11.2020, 889/2020 நாள். 03.11.2020 மற்றும் 890/2020 நாள்.03.11.2020 ஆகிய மன்றத்தீர்மானத்தின்படி கட்டண விலக்கு அளிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், ஒப்பந்ததாரர் கோரியுள்ள கோரிக்கையின் விவரங்கள் கீழ்கண்டவாறு அட்டவணையிடப்பட்டு, அதன் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையின் விவரங்கள் பரிந்துரைக்கப்படுகிறது.

**அட்டவணை - 2 ( சிப்பம் -C)**

<table>
<tr><th>வ எண்</th><th>ஒப்பந்ததாரர்கள் கோரியுள்ள கோரிக்கை</th><th>ஒப்பந்ததாரர் மனுமீது துறையின் பரிந்துரை</th></tr>
<tr><td>1</td><td>நடப்பு நிதியாண்டில் 2020-21ல் ஊரடங்கு காலத்திற்கும் அதன் பிறகும் ஒப்பந்தவிதிகளின் படி ஒரு வருட காலத்திற்கு தள்ளுபடி செய்ய வேண்டும்.</td><td>தேசிய பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் ஊரடங்கு 20.03.2020 முதல் அமல்படுத்தியதை தொடர்ந்து ஒப்பந்ததாரரின் உடன்படிக்கையின் படி Article 15. Force Majeure Event 15.1 மற்றும் 15.2ன் படி இயற்கை பேரிடர்களுக்கு சலுகைத் தொகை செலுத்துவதிலிருந்து 6 மாத காலங்கள் 01.04.2020 முதல் 30.09.2020 வரை விலக்களிக்கலாம் என கருதப்படுகிறது.</td></tr>
<tr><td>2</td><td>ஒப்பந்த காலத்தில் ஊரடங்கு அமலில் உள்ளதால் நிறுவனம் தன் கடமையை சரிவர செய்ய செயல் திறன் அற்றதாக உள்ளது. எனவே, ஊரடங்கு காலத்திற்கும் அதன்பிறகும் இயல்புநிலை திரும்பும் வரை நிறுவனம் தன் கடமையை செய்ய செயல் திறன் அற்றதாக உள்ளது என கருதபட வேண்டும்.</td><td>ஒப்பந்த காலத்தில் ஊரடங்கு அமலில் இருந்ததால் நிறுவனம் தன் கடமையை சரிவர செய்ய செயல் திறன் அற்றதாக உள்ளது. எனவே, ஊரடங்கு காலத்திற்கும் நிறுவனம் தன் கடமையை செய்ய செயல் திறன் அற்ற காலமாகவே கருதப்படலாம்.<table>
<tr><th>சலுகை காலம்</th><th>செலுத்த வேண்டிய சலுகை சதவீதம்</th></tr>
<tr><td>01.04.2020 முதல் 30.09.2020</td><td>0% வரை</td></tr>
</table></td></tr>
</table>

<table>
<tr>
<td>3</td>
<td>விகிதாச்சார படி 2020-21 ஆம் ஆண்டிற்கான சலுகை கட்டணத்தினை கோரிக்கை -1ல் கோரியுள்ள காலத்தினை தவிர்த்து மீதமுள்ள காலத்திற்கும் குறைப்பு செய்திடவும், அதே போன்ற விளம்பர செய்யும் இடம், விற்பனை காலம் வரை மேற்கண்ட விகிதாச்சார முறையில் சலுகை கட்டணத்தை செலுத்த கணக்கீடு செய்யவும் கேட்டுக் கொண்டுள்ளது.</td>
<td>
<table>
<tr><th>சலுகை காலம்</th><th>செலுத்த வேண்டிய சலுகை சதவீதம்</th></tr>
<tr><td>01.10.2020 முதல் 31.12.2020 வரை</td><td>30% வரை</td></tr>
<tr><td>01.01.2021 முதல் 31.03.2021 வரை</td><td>60% வரை</td></tr>
</table>
</td>
</tr>
<tr>
<td>4</td>
<td>உலக சுகாதார நிறுவனம் கொரோனா வைரஸ் நோய் தொற்றாக அறிவித்ததை தொடர்ந்து மத்திய அரசு மற்றும் மாநில அரசு கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுப்பதற்காக தேசிய பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் ஊரடங்கு 25.03.2020 முதல் அமல்படுத்தியதை தொடர்ந்து ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு செய்ய ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பகாலமான 15 ஆண்டுகளுடன் கூடுதலாக ஒப்பந்த காலத்தினை மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டிப்பு செய்யவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.</td>
<td>பணியின் ஒப்பந்த காலம் முடிவுக்கு வரும் தருவாயில், ஒப்பந்ததாரர் கடிதம் வழங்கினால் ஒப்ப காலத்தினை நீட்டிப்பு செய்வது குறித்து முடிவு செய்யலாம்.</td>
</tr>
<tr>
<td>5</td>
<td>ஊரடங்கு காலத்தில் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதால் சலுகை கட்டணத்தினை ஒரு வருட காலத்திற்கு முன்கூட்டியே கட்ட வேண்டிய சலுகை தொகையினை ஒவ்வொரு காலாண்டு முடிந்த பிறகு சலுகை கட்டணத்தினை கட்ட நிறுவனத்திற்கு அனுமதி அளிக்க வேண்டும்.</td>
<td>சலுகை கட்டணம் ஒரு வருட காலத்திற்கு முன்கூட்டியே கட்டுவதற்கு பதிலாக வருடத்தின் ஒவ்வொரு காலாண்டிற்கும் முன்கூட்டியே சலுகைக் கட்டணம் கட்ட அறிவுறுத்தலாம்.</td>
</tr>
<tr>
<td>6</td>
<td>மேலும், வேறு ஏதாவது சலுகையோ அல்லது வேறு ஏதாவது நீண்ட கால பலன் ஏதும் இருப்பின், பெருநகர சென்னை மாநகராட்சியின் உரிய அலுவலரால் தனக்குள்ள வழிமுறைகளின் அடிப்படையில் அதனை பெற்றுதருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.</td>
<td>வேறு எந்த சலுகையும் இல்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.</td>
</tr>
</table>

ஏற்கனவே (அ) திருவாளர்கள் ஸ்கைராம்ஸ் அவுட்டோர் அட்வெர்டைசிங்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் – மன்ற தீர்மான எண்: 888/2020, நாள். 03.11.2020, (ஆ) திருவாளர்கள் பைன் ஆர்ட்ஸ் கம்யூனிகேட்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், தீர்மான எண்:889/2020, நாள்: 03.11.2020, (இ) திருவாளர்க்ள் ஷைன் அவுட்டோர் அட்வெர்டைசிங் பிரைவேட் லிமிடெட், தீர்மான எண்:890/2020, நாள்: 03/11/2020 ஆகிய நிறுவனங்களுக்கு சலுகைத்தொகை செலுத்துவதிலிருந்து கொரோனா காலத்தை முன்னிட்டு விலக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. திருவாளர்கள். லக்ஷயா மீடியா லிமிடெட் நிறுவனத்தில் இருந்து விலக்களிப்பு கோரிக்கை ஏதும்

பெறப்படவில்லையென்பதால், மேற்கண்ட மூன்று நிறுவனங்களுக்கு மன்றத்தீர்மானம் பெற்று சலுகை வழங்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள். லக்ஷயா மீடியா லிமிடெட் நிறுவனத்தின் 28.01.2022 நாளிட்ட கடிதத்தில், கொரோனா கால சலுகைத்தொகை விலக்கு வழங்கக்கோரியதால், இப்பொருள் குறித்து விலக்கு வழங்குவதற்கு கோப்பு பரிசீலனையில் இருந்த நேரத்தில் இந்நிறுவனத்தால் *Arbitration* வழக்கு தொடரப்பட்டதால், உடனடியாக விலக்கு வழங்க இயலவில்லை. இவ்வழக்கில், பெருநகர சென்னை மாநகராட்சி வழக்கறிஞர்கள் விசாரணையில் நீதிபதி முன், கொரோனா காலத்திற்கு விலக்கு வழங்க ஒத்துக் கொண்டுள்ளபடியால், தற்போது மன்ற அனுமதி பெற்று நடைமுறைபடுத்த வேண்டியது அவசியம் ஆகிறது .

எனவே, ஒப்பந்ததாரர் திருவாளர்கள். லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட சிப்பம் *C*க்கு சலுகைத்தொகை விலக்கு வழங்க கோரியுள்ள கோரிக்கையின் மீது நடவடிக்கை மேற்கொண்டு, இதர மாநில அரசு/அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சித் துறைகளில் வழங்கப்பட்ட விளம்பர கட்டண சலுகைகள் / தள்ளுபடியின்படியும், ஏற்கனவே சிப்பம் 1 முதல் 8 வரை மன்றத்தீர்மானத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட விளம்பர கட்டண சலுகைகள்/தள்ளுபடியின் படியும், திருவாளர்கள். லக்ஷயா மீடியா பிரைவேட் லிமிடெட் ன் சிப்பம் *C*க்கு விவர அட்டவணை 2ல், வ.எண் *1* முதல் *6* வரை தெரிவித்துள்ளவாறு சலுகைத்தொகை கட்டணவிலக்கு

| வ.எண் | சலுகை காலம் | செலுத்த வேண்டிய சலுகை சதவீதம் சலுகை காலம் |
|---|---|---|
| *1* | *01.04.2020* முதல் *30.09.2020* | *0%* வரை |
| *2* | *01.10.2020* முதல் *31.12.2020* வரை | *30%* வரை |
| *3* | *01.01.2021* முதல் *31.03.2021* வரை | *60%* வரை |

வழங்க நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

*"23.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு *(*பணிகள்*)* கூட்டத்தின் தீர்மான எண்*.276/2022,* நாள். *23.11.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்*)* பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.மநி*)* மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

*"25.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.309/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது*"*.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**பே.சா.து.ந.க.எண்.பி2/3100/2009**

**முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.10.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:614/2022** **பொருள் எண்.46**

| S. No | Zone | File No / PARK.C.No. | Name of the Bidder (L1) | Originally Quoted percentage | 2021-22 (SOR) percentage offered after negotiation | 2021-22 (SOR) After negotiation final amount (Rs.) (including 18% GST) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | 7 | P.D.C.NO.P2/1383-13/2022 | Naveen Enterprises | 29,69,838.76 | (-) 7.41 % | 27,49,773.71 |
| 2 | 7 | P.D.C.NO.P2/1383-14/2022 | P. Dhanasekaran | 44,95,790.42 | (-) 7.80 % | 41,45,118.77 |
| 3 | 8 | P.D.C.NO.P2/1383-15/2022 | SMK Contractors | 20,69,811.44 | (-) 8.99 % | 18,83,735.39 |
| 4 | 8 | P.D.C.NO.P2/1383-16/2022 | SMK Contractors | 7,80,934.78 | (-) 8.99 % | 7,10,728.74 |
| 5 | 8 | P.D.C.NO.P2/1383-36/2022 | M.Thamilarasu | 33,07,975.79 | (-) 10.11 % | 29,73,539.44 |
| 6 | 8 | P.D.C.NO.P2/1383-37/2022 | Naveen Enterprises | 28,16,832.63 | (-) 16.41 % | 23,54,590.40 |
| 7 | 9 | P.D.C.NO.P2/1383-38/2022 | J.M Traders | 6,91,033.90 | (-) 4.99 % | 6,56,551.31 |

இதன் தொடர்ச்சியாக, மேற்கண்ட குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த ஒப்பந்ததாரர்களிடம் மேலும் விலைக்குறைப்பு செய்ய கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர்கள் ஏற்கனவே குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதால் விலைக்குறைப்பு செய்ய இயலாது என கடிதம் அளித்துள்ளார்கள்..

மேற்கண்ட பணிகளுக்கான ஒப்ப புள்ளிகள் 2021-22ம் ஆண்டு அலுவலக விலைப்புள்ளியுடன், ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்ட ஒப்ப புள்ளிகள் ஒப்பிடும் போது ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்ட ஒப்ப புள்ளிகள் அனைத்தும் குறைந்த விழுக்காட்டில் உள்ளதால் ஒப்பப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ளலாம் எனக்கருதப்படுகிறது.

இதன்படி, மேற்கண்ட ஒப்பப்பணிகளின் இறுதி ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

(**அட்டவணை-III**)

| Sl. No. | Zone | File No / PARK C.No | Name of the L1 contractor | After Negotiation percentage | Final amount (Including GST 18%) Rs. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 7 | P.D.C.NO.P2/1383-13/2022 | Naveen Enterprises | (-) 7.41 % | 27,49,773.71 |
| 2 | 7 | P.D.C.NO.P2/1383-14/2022 | P. Dhanasekaran | (-) 7.80 % | 41,45,118.77 |
| 3 | 8 | P.D.C.NO.P2/1383-15/2022 | SMK Contractors | (-) 8.99 % | 18,83,735.39 |
| 4 | 8 | P.D.C.NO.P2/1383-16/2022 | SMK Contractors | (-) 8.99 % | 7,10,728.74 |
| 5 | 8 | P.D.C.NO.P2/1383-36/2022 | M.Thamilarasu | (-) 10.11 % | 29,73,539.44 |
| 6 | 8 | P.D.C.NO.P2/1383-37/2022 | Naveen Enterprises | (-) 16.41 % | 23,54,590.40 |
| 7 | 9 | P.D.C.NO.P2/1383-38/2022 | J.M Traders | (-) 4.99 % | 6,56,551.31 |

எனவே,

1) மேற்கண்ட அட்டவணை–IIIல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு கலம் எண் 5-ல் உள்ள ஒப்ப புள்ளி சதவிகிதம் மற்றும் கலம் எண்-6ல் உள்ள ஒப்பத் தொகைக்கு பணியினை வழங்கவும்,
2) மேற்காணும் பணிகளுக்கான ஒப்பந்ததாரர்களுக்கு "சிங்கார சென்னை *2.0*" திட்டத்தின் கீழ் பட்டி தீர்வு செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

"*21.10.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.*257/2022*, நாள். *21.10.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"*25.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.318/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**பூ.து.ந.க.எண்.பி2/1383-18/2022**
**முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.10.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:619/2022** **பொருள் எண்.51**

**ஒப்பம் - பூங்காதுறை - "சிங்கார சென்னை 2.0" திட்டத்தின் கீழ் மாநகராட்சிக்கு உட்பட்ட காலியாக உள்ள திறந்தவெளி நிலங்களில் புதிய பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் அமைக்கும் பணிகளுக்கு ஒப்பம் கோரப்பட்டது - மண்டலம்-10, 13 மற்றும் 14-க்கான குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உலகதரத்திற்கு நவீன கட்டமைப்புகள் மற்றும் சேவை மேற்கொள்வதற்கு 2021-22 ஆம் நிதியாண்டில் மேதகு ஆளுநர் உரையில் சிங்கார சென்னை 2.0 என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. G.O. (Ms) No.74, 28.09.2021 நாளிட்ட அரசாணையின்படி, சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, 2022-23 ஆம் ஆண்டின் தமிழக சட்டப்பேரவையில் நடைபெற்ற மானிய கோரிக்கையின்போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல் அமைச்சர் அவர்களால் கீழ்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"நகர்ப்புறங்களை பசுமையாக்கி, இயற்கை சூழலை மேம்படுத்த, பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் 150 திறந்தவெளி பூங்காக்கள் அமைக்கப்படும் எனவும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 50 எண்ணிக்கையிலான விளையாட்டுத் திடல்கள் புதிதாக அமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி ரூ.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்" எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சிங்கார சென்னை 2.0 என்ற திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறையின் மூலம் மாநகராட்சிக்கு உட்பட்ட காலியாக உள்ள திறந்தவெளி நிலங்களில் புதிய பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்கள் அமைக்கும் பணிகளுக்கு திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO)-க்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதனை ஆய்வு செய்தும் மற்றும் பணிகளை செயல்படுத்தும் இடங்களை கள ஆய்வு செய்தும் முதற்கட்டமாக 45 புதிய பூங்காக்கள் மற்றும் 13 விளையாட்டுத்திடல்கள் என மொத்தம் 58 எண்ணிக்கையிலான பணிகளை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டது.

சிங்கார சென்னை 2.0 என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ள கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் தலைமையில் உள்ள சிங்கார சென்னை 2.0 திட்டப்பணிகள் ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழுவில் (Project Sanctioning and Monitoring Committee) கூடுதல் தலைமை செயலர் (நிதித்துறை), பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை செயலர் / ஆணையர் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் துறையின் நிர்வாக இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்கள் ஆவார்கள்.

இதன் தொடர்ச்சியாக கலந்தாய்வு கூட்ட நடவடிக்கை சுருக்கத்தின்படி, திட்ட ஒப்புதல் அளித்தல் மற்றும் கண்காணிப்பு குழு (Project Sanctioning and Monitoring Committee) 17.08.2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் 2022-23 ஆம் நிதியாண்டில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் 40 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு,

**(Rupees in Crore)**

| Name of the Projects | Proposed | | Appraised | | Singara Chennai 2.0 Share 2022-23 |
|---|---|---|---|---|---|
| | No.of project | Proposed cost | No.of projects | Appraised cost | |
| Parks | 16 | 6.46 | 16 | 4.84 | **4.84** |
| Sponge Park | 5 | 1.30 | 5 | 0.92 | **0.92** |
| Play field | 19 | 8.18 | 19 | 5.70 | **5.70** |
| **Total** | **40** | **15.94** | **40** | **11.46** | **11.46** |

இதன்படி, மேற்கண்ட 58 பணிகளுக்கு ஒப்பம் கோரப்பட்டு, 53 பணிகளுக்கு ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்டு, ஒப்பம் ஏற்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 5 பணிகளில் 2 பணிகளுக்கு எவரும் பங்கு பெறவில்லை மற்றும் 3 பணிகளுக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தாரர் எவரும் பங்கு பெறவில்லை என்பதால் இந்த ஒப்பங்களுக்கு மறு ஒப்பம் கோரப்பட்டு, ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்டு, கோப்பு மன்றத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறை மூலம் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் 40 பணிகளுக்கு ஒப்பம் கோரப்பட்டு, ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டு, மின்னணு முறையில் (e-tender) ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள்.23.09.2022 என ஒப்ப அறிவிப்பு பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் 01.09.2022 அன்றும், Deccan Chronicle, முரசொலி நாளிதழ்களில் 02.09.2022 அன்றும் பிரசுரிக்கப்பட்டது.

இதன்படி, 23.09.2022 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டு, மண்டலம்-10, 13 மற்றும் 14க்கான 6 பணிகளுக்கான ஒப்பங்களில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு, ஒப்பந்தப் பணிகளுக்கான தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசிலனை செய்யப்பட்டது.

அதன்படி, குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பத் தொகை மற்றும் ஒப்ப விழுக்காட்டின் விவரம் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**(அட்டவணை-I)**

**மண்டலம்-10, 13 மற்றும் 14 பணிகளுக்கான ஒப்ப விவரம்**

| Sl. No. | File No. P.D.C.No. | No. of Participants | Name of the L1 contractor | Work value Rs. | Quoted amount Rs. | Quoted % |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | P.D.C.NO.P2/1383-18/2022 | 7 | MPK Enterprises | 60,26,881.10 | 53,69,951.06 | (-) 10.90 % |
| 2 | P.D.C.NO.P2/1383-19/2022 | 6 | MPK Enterprises | 44,44,961.61 | 39,60,460.79 | (-) 10.90 % |
| 3 | P.D.C.NO.P2/1383-20/2022 | 2 | R. Kannan | 11,77,981.23 | 10,93,166.58 | (-) 7 20 % |
| 4 | P.D.C.NO.P2/1383-21/2022 | 1 | A.Narayanan | 7,77,920.83 | 7,39,102.58 | (-) 4.99 % |
| 5 | P.D.C.NO.P2/1383-39/2022 | 6 | Devarajan Gokulakrishnan | 58,58,940.45 | 50,77,943.69 | (-) 13.33 % |
| 6 | P.D.C.NO.P2/1383-40/2022 | 8 | Aadityaa Infrastructure | 94,30,837.80 | 80,16,306.44 | (-) 15.00 % |

இதன் தொடர்ச்சியாக, மேற்கண்ட குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த ஒப்பந்ததாரர்களிடம் மேலும் விலைக்குறைப்பு செய்ய கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர்கள் ஏற்கனவே குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதால் விலைக்குறைப்பு செய்ய இயலாது என கடிதம் அளித்துள்ளார்கள்..

**(அட்டவணை-II)**

**மண்டலம்-10, 13 மற்றும் 14 பணிகளுக்கான ஒப்ப விவரம்**

| S. No | Zone | File No / PARK.C.No. | Name of the Bidder (L1) | Originally Quoted percentage | 2021-22 (SOR) percentage offered after negotiation | 2021-22 (SOR) After negotiation final amount (Rs.) (including 18% GST) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | 10 | P.D.C.NO.P2/1383-18/2022 | MPK Enterprises | (-) 10.90 % | (-) 10.90 % | 53,69,951.06 |
| 2 | 13 | P.D.C.NO.P2/1383-19/2022 | MPK Enterprises | (-) 10.90 % | (-) 10.90 % | 39,60,460.79 |
| 3 | 13 | P.D.C.NO.P2/1383-20/2022 | R. Kannan | (-) 7 20 % | (-) 7 20 % | 10,93,166.58 |
| 4 | 13 | P.D.C.NO.P2/1383-21/2022 | B.Narayanan | (-) 4.99 % | (-) 4.99 % | 7,39,102.58 |
| 5 | 13 | P.D.C.NO.P2/1383-39/2022 | Devarajan Gokulakrishnan | (-) 13.33 % | (-) 13.33 % | 50,77,943.69 |
| 6 | 14 | P.D.C.NO.P2/1383-40/2022 | Aadityaa Infrastructure | (-) 15.00 % | (-) 15.00 % | 80,16,306.44 |

மேற்கண்ட பணிகளுக்கான ஒப்ப புள்ளிகள் 2021-22ம் ஆண்டு அலுவலக விலைப்புள்ளியுடன், ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்ட ஒப்ப புள்ளிகள் ஒப்பிடும் போது ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்ட ஒப்ப புள்ளிகள் அனைத்தும் குறைந்த விழுக்காட்டில் உள்ளதால் ஒப்பப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ளலாம் எனக்கருதப்படுகிறது.

மேலும், வ.எண்.1, 5 மற்றும் 6-ல் உள்ள பணியானது ரூ.50 இலட்சத்திற்கு கூடுதலாக உள்ளதால் இப்பணியினை வழங்க ஒப்பக்கூர்ந்தாய்வு குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது, இதனை ஒப்பக்கூர்ந்தாய்வு குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

இதன்படி, மேற்கண்ட ஒப்பப்பணிகளின் இறுதி ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

(**அட்டவணை-III**)

| Sl. No. | Zone | File No / PARK C.No | Name of the L1 contractor | After Negotiation percentage | Final amount (Including GST 18%) Rs. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 10 | P.D.C.NO.P2/1383-18/2022 | MPK Enterprises | (-) 10.90 % | 53,69,951.06 |
| 2 | 13 | P.D.C.NO.P2/1383-19/2022 | MPK Enterprises | (-) 10.90 % | 39,60,460.79 |
| 3 | 13 | P.D.C.NO.P2/1383-20/2022 | R. Kannan | (-) 7 20 % | 10,93,166.58 |
| 4 | 13 | P.D.C.NO.P2/1383-21/2022 | A.Narayanan | (-) 4.99 % | 7,39,102.58 |
| 5 | 13 | P.D.C.NO.P2/1383-39/2022 | Devarajan Gokulakrishnan | (-) 13.33 % | 50,77,943.69 |
| 6 | 14 | P.D.C.NO.P2/1383-40/2022 | Aadityaa Infrastructure | (-) 15.00 % | 80,16,306.44 |

எனவே,

1) மேற்கண்ட அட்டவணை–IIIல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு கலம் எண் 5-ல் உள்ள ஒப்ப புள்ளி சதவிகிதம் மற்றும் கலம் எண்-6ல் உள்ள ஒப்பத் தொகைக்கு பணியினை வழங்கவும்,
2) மேற்காணும் பணிகளுக்கான ஒப்பந்ததாரர்களுக்கு “சிங்கார சென்னை *2.0*” திட்டத்தின் கீழ் பட்டி தீர்வு செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“*21.10.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.*258/2022*, நாள். *21.10.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“*25.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.319/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

*** * * * * ***

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/2138A/2020**
**முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:620/2022** **பொருள் எண்.52**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - நிர்பயா திட்டத்தின் கீழ் பொது இடங்களில் பெண்களின் பாதுகாப்பினை மேம்படுத்த பெண்களின் பயன்பாட்டிற்கென 15 எண்ணிக்கையில் டிரக் மீது வடிவமைக்கப்பட்ட நடமாடும் கழிவறைகள் கொள்முதல் செய்ய கோரப்பட்ட மின்னனு ஒப்பத்தில் குறைந்த விலைபுள்ளி அளித்த திருவாளர்கள். *Bhutani International Pvt Ltd* நிறுவனத்தாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு இந்நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது - ஒப்ப விதியின்படி 15 எண்ணிக்கையிலான நடமாடும் கழிவறைகளை வழங்குவதற்கான கால கெடு பணி ஆணை பெற்ற நாளிலிருந்து 90 நாட்கள் - ஒப்பந்ததாரரின் கோரிக்கையின் அடிப்படையில் நடமாடும் கழிவறைகளை வழங்குவதற்கான கால கெடுவினை 08.09.2022 முதல் 30.11.2022 வரை (84 நாட்கள்) நீட்டிப்பு செய்ய அனுமதி.**

நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.1) துறை, அரசாணை எண்.86 நாள் 20.11.2018ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பெண்களின் பாதுகாப்பு தொடர்பான பணிகளை ரூ.425.06 கோடி மதிப்பீட்டில் (மத்திய பங்களிப்பு (60%) மாநில பங்களிப்பு (40%)) மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இவற்றில் முக்கியமான ஒன்று *She- Toilet (e-Toilet)* ஆகும்.

இந்நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் மாநகர காவல் ஆணையாளர் (சட்டம் (ம) ஒழுங்கு) ஆகியோர் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் *e- Toilet*கள் அதிக அளவில் உள்ளதாகவும் இவற்றினை பயன்படுத்துவோர் மிக குறைந்த அளவிலேயே உள்ளதாகவும், இவை அனைத்தும் *Steering Committee* கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவும், எனவே இதற்கு மாற்றாக நடமாடும் கழிவறைகளை கொள்முதல் செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும், அதன் தொடர்ச்சியாக மாநில அளவிலான அபெக்ஸ் கமிட்டியானது, பொது இடங்களில் பெண்கள் பயன்பாட்டிற்காக 500 எண்ணிக்கையிலான *e-Toilet* க்கு மாற்றாக 65 எண்ணிக்கையில் நடமாடும் கழிவறைகள் மற்றும் பந்தோபஸ்து பணியில் ஈடுபடும் பெண் காவலர்கள் மற்றும் மாநகராட்சி பணியாளர்களின் பயன்பாட்டிற்கென கொள்முதல் செய்யப்படவுள்ள 30 எண்ணிக்கையிலான நடமாடும் கழிவறைகளுக்கு மாற்றாக 10 எண்ணிக்கையிலும் என மொத்தம் 75 எண்ணிக்கையிலான நடமாடும் கழிவறைகள் ரூ.27.77 கோடி மதிப்பீட்டில் நிர்பயா திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்ய நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதன் அடிப்படையில் முதற்கட்டமாக 15 எண்ணிக்கையில் வாகன அடிச்சட்டத்தின் மீது வடிவமைக்கப்பட்ட நடமாடும் கழிவறைகள் ரூ.5.4 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் 18.01.2021 நாளிட்ட அனுமதி மற்றும் சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மானம் எண். 037/2021, நாள்.*18.01.2021*ன் மூலம் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 15 எண்ணிக்கையிலான வாகன அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட நடமாடும் கழிவறைகள் கொள்முதல் செய்ய மின்னனு ஒப்பம் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். *Bhutani International Pvt. Ltd.,* நிறுவனத்தாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு இந்நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஒப்ப விதிகளின்படி, 15 எண்ணிக்கையிலான அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட நடமாடும் கழிவறைகள் வழங்குவதற்கான காலகெடு பணி ஆணை பெற்ற நாளிலிருந்து 90 நாட்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, திருவாளர்கள். *Bhutani International Pvt. Ltd.,* நிறுவனத்தாரர் பணி ஆணை பெற்ற நாளான 11.06.2022லிருந்து 90 நாட்களுக்குள் அதாவது 08.09.2022க்குள் 15 எண்ணிக்கையிலான வாகன அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட நடமாடும்

கழிவறைகள் வழங்கிட வேண்டும். திருவாளர்கள். *Bhutani International Pvt. Ltd.,* நிறுவனத்தாரர் 29.07.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக கீழ்கண்டவாறு தெரிவித்து வாகனங்கள் வழங்குவதற்கான கால கெடுவினை மேலும் 150 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்து வழங்குமாறு கோரியுள்ளனர்.

"We have already placed order for 15 Nos. of Truck Chassis after receiveing the work order on 11.06.2022 with M/s. Volvo Eicher Commercial Vehicles and we have received 8 Nos. of Truck Chassis at our premises 3 days back, and we have started the fabrication work on the 8 chassis. But due to non-semi conductor issues prevailing in the country & around the globe we are facing delay in getting the Truck Chassis other electrical components for the related works from suppliers in time.

We are working in full force to complete the work in time but to current situation which is out of our control we hereby request you to kindly give extension of time for 150 days further from the time given in the work order" என தெரிவித்து 15 எண்ணிக்கையிலான வாகன அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட நடமாடும் கழிவறைகள் வழங்குவதற்கான கால கெடுவினை மேலும் 150 நாட்கள் நீடித்து வழங்குமாறு கோரியுள்ளனர்.

திருவாளர்கள். *Bhutani International Pvt. Ltd.,* நிறுவனத்தாரர் தெரிவித்துள்ள சரத்துகள் ஏற்புடையதாக உள்ளதால், இந்நிறுவனத்தார் 15 எண்ணிக்கையிலான வாகன அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட நடமாடும் கழிவறைகள் வழங்குவதற்கான கால கெடுவினை 08.09.2022 முதல் 30.11.2022 வரை (84 நாட்கள்) கால நீட்டிப்பு செய்யலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, நிர்பயா திட்டத்தின் கீழ் பொது இடங்களில் பெண்களின் பாதுகாப்பினை மேம்படுத்த பெண்களின் பயன்பாட்டிற்கென 15 எண்ணிக்கையிலான டிரக் மீது வடிவமைக்கப்பட்ட நடமாடும் கழிவறைகள் வழங்க திருவாளர்கள். *Bhutani International Pvt. Ltd.,* நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கப்பட்ட நாளான 10.06.2022 முதல் 07.09.2022 வரை 90 நாட்கள் காலக்கெடு வழங்கப்பட்டுள்ள நிலையில் 08.09.2022 முதல் 30.11.2022 வரை (84 நாட்கள்) கால நீட்டிப்பு செய்ய, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> *"23.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். *281/2022,* நாள். *23.11.2022*-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> *"25.11.2022* அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.313/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

******

**இ.பொ.து.தெ.செ.வா.ப.ந.க.எண். S1 /366/2022**
**முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 11.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:621/2022** **பொருள் எண்.53**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - தென்சென்னை வாகன பணிமனை - மண்டலம் -11, 12, 13, 14, 15 மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் மற்றும் இதர பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்கள் ஆகியவற்றிற்கு ஜனவரி - 2023 முதல் செப்டம்பர் - 2023 வரை தேவைப்படுகின்ற டீசல் கொள்முதல் செய்தல் - கொள்முதல் செய்யும் சமயத்தில் குறைவான விலைக்கேற்ப - திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து கொள்முதல் மேற்கொள்ள அனுமதி.**

இயந்திர பொறியியல் துறையில் தென்சென்னை வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம்-11 முதல் 15 வரை பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் துப்புரவு பணி அல்லாத இதர பணிகளுக்காகவும் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை சமன் செய்யும் பணிகளுக்காகவும் 96 எண்ணிக்கையிலான பல்வேறு வகையான (கனரக / இலகுரக, டிப்பர் லாரிகள், தண்ணீர் லாரி, லோடர், புல்டோசர், எஸ்கவேட்டர் மற்றும் இதர) வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட 96 வாகனங்களுக்கு தேவையான எரிபொருள் (டீசல்), தெற்கு வட்டாரத்தில் மண்டலம்-13 லாரி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் நிலையம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இவை தவிர, தெற்கு வட்டார அலுவலக அதிகாரிகள் மற்றும் மண்டலம்-11 முதல் 15 வரையில் அதிகாரிகளுக்கான ஆய்வு வாகனங்கள், கொசு மருந்து புகை பரப்பும் இயந்திரங்கள், அலுவலக மற்றும் மருத்துவமனை பயன்பாட்டிற்காக பராமரிக்கப்படும் ஜெனரேட்டர்கள் மற்றும் மழைக்காலங்களில் நீர் இறைக்கும் பம்புகள் ஆகியவற்றிற்கு தேவையான டீசல் மண்டலம் 13ல் எரிபொருள் (டீசல்) வழங்கும் நிலையம் மூலம் வழங்கப்பட்டு வரப்படுகிறது.

டீசல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.92/2000 நாள்.28.02.2000 அனுமதியின்படி, அரசின் பின்னேற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1 ) துறை அளித்த அரசு ஆணை நிலை எண். 102, நாள்.07.08.2000ன்படி இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிட்டு உள்ளது.

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மான எண். 486/2001, நாள் 18.09.2001ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் மன்றத்தின் அனுமதி பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கடந்த மார்ச் மாதம் - 2022 முதல் மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் எரிபொருள் வழங்குவதற்கு இரட்டை விலை விகிதத்தை நடமுறைப்படுத்தியது. இதன்படி, மொத்த கொள்முதல் விலையானது சில்லறை விற்பனை விலையைக்காட்டிலும் அதிகமாக மத்திய அரசு ஆயில் நிறுவனங்கள் நிர்ணயித்துள்ளார்கள். இதன் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய அரசு ஆயில் நிறுவனத்திடமிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் விலைக்கு கொள்முதல் செய்வதால் ஏற்படும் நிதி இழப்பினை தவிர்க்க, கடந்த ஏப்ரல் -2022 முதல் மத்திய அரசு ஆயில் நிறுவனத்தாரின் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடம் இருந்து சில்லறை விற்பனை விலைக்கு டீசல் கொள்முதல் செய்யப்பட்டு வரப்படுகிறது. இதற்கு மன்றத்தீர்மான எண்.121, நாள்.30.05.2022 பின்னேற்பு அனுமதியில் மத்திய அரசு ஆயில் நிறுவனத்தார்

நிர்ணயிக்கும் எரிபொருள் மொத்த கொள்முதல் விலை, சில்லறை விற்பனையை விலையைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் வரை மத்திய அரசு ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கு கொள்முதல் செய்வதற்கு ஆணை பெறப்பட்டுள்ளது.

மன்றத்தீர்மான எண்.82, நாள்.*30.05.2022*ல் மண்டலம் 11 முதல் 15க்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கும் மற்றும் இதர துறை பயன்பாட்டிற்கும் ஏப்ரல் *2022* முதல் டிசம்பர் *2022* வரை *9* மாத காலத்திற்கு *825 KL* கொள்முதல் செய்ய *Rs.8,29,00,117* நிர்வாக அனுமதி பெறப்பட்டு டீசல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

மேலே கூறப்பட்டுள்ள, நிர்வாக அனுமதி டிசம்பர் *2022* வரை பெறப்பட்டுள்ளதால், ஜனவரி *2023* முதல் செப்டம்பர் *2023* வரையிலான *273* நாட்களுக்கு மண்டலம் *13* லாரி நிலைய எரிபொருள் வழங்கும் நிலையத்தில் தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் 11 முதல் 15 வரையிலான வாகனங்களுக்கு தேவையான டீசல் கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி பெற வேண்டியுள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி 2022 முதல் அக்டோபர் 2022 வரையிலான 10 மாதத்தில், தென்சென்னை வட்டாரத்திற்கு உட்பட்ட மண்டலம் 11 முதல் 15 வரை கட்டிட இடிபாடுகளை அகற்றுவதற்கு மற்றும் இதர பயன்பாட்டிற்காக பராமரிக்கப்படுகின்ற வாகனங்களுக்கும், ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் கொசு ஒழிப்பு புகை பரப்பும் பணிக்கும் வழங்கப்பட்ட மொத்த டீசல் எரிபொருள் அளவின்படி நாளொன்றிற்கு 2866 லிட்டர் டீசல் எரிபொருள் தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும், மண்டலம் *13* லாரி நிலையத்தில் டீசல் சேமிப்பு தொட்டி நிறுவிய இந்திய அரசு நிறுவனமான திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளரை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு டீசல் எரிபொருள் வழங்குவதற்கு தற்போதைய விலை விகிதத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்நிறுவனம் அளித்த விலைப்புள்ளி பின்வருமாறு:

| நிறுவனம் | பொருள் விவரம் | *1* **KL** க்கான தொகை (01.10.2022 **நிலவரப்படி**) ரூபாய் | **குறிப்பு** |
|---|---|---|---|
| திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் | டீசல் | ரூ-*10507109* விற்பனை (அனைத்து வரிகள் உட்பட) | *M/s. BPCL* நிறுவனத்தார் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மொத்த கொள்முதல் விலைக்கே *(Bulk Consumer Price)* எரிபொருள் வழங்குவார்கள் என்பதால் மொத்த கொள்முதல் விலைக்கான விலைப்புள்ளியை வழங்கியுள்ளார்கள். |
| திருவாளர். திருஅருள் முகவர் *(BPCL* அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்) | | ரூ-*94190.00* விற்பனை (அனைத்து வரிகள் உட்பட) =*Rs. 94.19/-(per/ Ltr)* | வெளிசந்தையில் விற்பனை செய்யப்படும் சில்லறை விற்பனை விலைக்கான விலைப்புள்ளியினை வழங்கியுள்ளனர். |

மேற்கண்ட அட்டவணையின்படி குறைந்த விலைப்புள்ளியான சில்லறை விற்பனை விலை ஒரு லிட்டருக்கு ரூ.94.19 அடிப்படையாக கொண்டு நாளொன்றிற்கு 2866 லிட்டர் வீதம் ஜனவரி 2023 முதல் செப்டம்பர் 2023 வரையிலான 9 மாத காலத்திற்கு டீசல் எரிபொருள் கொள்முதல் செய்வதற்கான செவீனம் ரூ.7,*36,56,580/-* ஆகும் என கீழ்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

| எரிபொருள் விவரம் | 1 KL க்கான தொகை (01.10.2022 நிலவரப்படி) ரூபாய் | நாளொன்றிற்கு தேவைப்படும் டீசல் அளவு | ஜனவரி 2023 முதல் செப்டம்பர் 2023 வரையிலான 9 மாத காலத்திற்கு (273 நாட்கள்) தேவைப்படுகின்ற டீசல் அளவு | ஜனவரி 2023 முதல் செப்டம்பர் 2023 வரையிலான 9 மாத காலத்திற்கு (273 நாட்கள்) டீசல் கொள்முதல் செய்வதற்கான மொத்த தொகை |
|---|---|---|---|---|
| டீசல் (HSD) | ரூ-94,190/- விற்பனை (அனைத்து வரிகள் உட்பட) | 2.866 KL | 782 KL (273 days x 2.866 kl) | (782 kl x Rs.94190) ரூ.7,36,56,580/- |

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை மூலம் செலுத்த வேண்டும் எனவும், திருவாளர் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் நிபந்தனை தெரிவித்துள்ளார்கள். இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி டீசல் வழங்கி வருவதால், கொள்முதல் செய்யும் நாளில் அமலில் உள்ள விலைப்புள்ளியை ஏற்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, ஜனவரி 2023 முதல் செப்டம்பர் 2023 வரையிலான 273 நாட்களுக்கு, தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலங்களில் பராமரிக்கப்படும் வாகனங்களுக்கும் மற்றும் இதர பயன்பாட்டிற்காகவும் தேவையின் அடிப்படையில் டீசல் எரிபொருள் மண்டலம் 13 லாரி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் நிலையம் மூலம் வழங்க தோராயமாக கணக்கிடப்பட்ட 782 கிலோ லிட்டர் டீசல் எரிபொருளை (தோராயமாக) மொத்த தொகையான ரூ.7,36,56,580/- (ரூபாய் ஏழு கோடியே முப்பத்து ஆறு இலட்சத்து ஐம்பத்தாராயிரத்து ஐந்நூற்று எண்பது மட்டும்) செலவினத்தில் தேவைக்கேற்ப கொள்முதல் செய்யும் நாளில் அமலில் உள்ள மொத்த கொள்முதல் விலை சில்லறை விற்பனையை காட்டிலும் அதிகமாக இருக்கும் வரை மத்திய அரசு ஆயில் நிறுவனமான திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷனால் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கும் மற்றும் மொத்த கொள்முதல் விலை சில்லறை விலையினை காட்டிலும் குறைவாகும் போது திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனத்திடமிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் விலைக்கும் கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், மத்திய அரசு நிறுவனமான திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் அவர்களது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்துக்கு பிணை வைப்புத்தொகை மற்றும் பாதுகாப்பு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவினத்தினை இயந்திரபொறியியல் துறை ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண்.40-41-10 மற்றும் கணக்கு குறியீட்டு எண்: 230-20-03-06 எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் – 2022-2023 மற்றும் 2023 -2024ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1 மண்டலம்-11, 12, 13, 14, 15ல் பராமரிக்கப்படும் வாகனங்கள் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் இயங்கும் உபகரணங்களுக்கும், தெற்கு வட்டார ஆய்வு வாகனங்களுக்கும், கொசு ஒழிப்பு புகை பரப்பும் இயந்திரங்களுக்கும் மற்றும் இதர பயன்பாட்டிற்கும் தேவையின் அடிப்படையில் மண்டலம்-13 லாரி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் நிலையம் மூலம் ஜனவரி 2023 முதல் செப்டம்பர் 2023 வரையிலான 273 நாட்களுக்கு 782 கிலோலிட்டர் டீசல் எரிபொருளை மொத்த தொகையான ரூ.7,36,56,580/- (ரூபாய் ஏழு கோடியே

முப்பத்து ஆறு இலட்சத்து ஐம்பத்தாராயிரத்து ஐந்நூற்று எண்பது மட்டும்) மிகாமல் கொள்முதல் செய்யும்போது அமலில் உள்ள மொத்த கொள்முதல் விலை சில்லறை விற்பனையை காட்டிலும் அதிகமாக இருக்கும் வரை மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர் பாரத் பொட்ரோலியம் கார்பரேஷனில் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கும் மற்றும் மொத்த கொள்முதல் விலை சில்லறை விலையினை காட்டிலும் குறைவாகும் போது திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனத்திடமிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் விலைக்கும் கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டியும்,

2 மத்திய அரசு நிறுவனமான திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் கோரிய படி ஜனவரி 2023 முதல் செப்டம்பர் 2023 வரையிலான காலத்திற்கு அவ்வப்போது ஏற்படும் தேவையின் அடிப்படையில் கொள்முதல் செய்ய உள்ள எரிபொருள் அளவிற்கு உரிய தொகையினை முன்பணமாக வழங்கிடவும்,

3 மண்டலம்-13 லாரி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் நிலையத்திற்கு அவ்வப்பொழுது தேவைப்படுகின்ற டீசல் எரிபொருளை மொத்த தொகையான ரூ.7,36,56,580/- (ரூபாய் ஏழு கோடியே முப்பத்து ஆறு இலட்சத்து ஐம்பத்தாராயிரத்து ஐந்நூற்று எண்பது மட்டும்)க்கு மிகாமல் மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை பெற்று, திருவாளர் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கு RTGS மூலம் முன்பணமாக செலுத்தி, கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

4 இதற்கான செலவினை 2022-2023 மற்றும் 2023 – 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், ஆய்வு வாகனப்பணிமனை, இயந்திர பொறியியல் துறை – கணக்கு எண் : 230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

5 திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கு பிணை வைப்பு தொகை, பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமாப்பிக்கப்படுகிறது

“23.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 283 /2022, நாள். 23.11.2022-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“25.11.2022 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.315/2022 நாள்.25.11.2022ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

**********

**பொ.து.ந.க.எண்.ஈ1/27196/2021**

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:622/2022** **பொருள் எண்.54**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 2021-2022 ஆம் ஆண்டிற்கான மண்டல அலுவலர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலர் பதவிக்கு 01.07.2021 ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டிய தெரிவுப்பட்டியலின் விவரம் பின்வருமாறு.

**அட்டவணை - 1**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | மண்டல அலுவலர் | | |
| 2 | மைய நாள் | 01.07.2021 | | |
| 3 | ஊதிய விகிதம் | ரூ. 61900-228100 (Pay band level 26)<br>As per 7th Pay commission G.O.No.303 dated:11.10.2017 | | |
| 4 | ஊட்ட பதவியில் பெயர் மற்றும் தகுதிகள் | **அரசாணை எண்.59, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள்.22.04.2019 ன்படி திருத்தியமைக்கப்பட்ட பணிவிதிகள்:-**<br>**METHOD OF APPOINTMENT:-**<br>(1) அயற்பணி அடிப்படையில் மாவட்ட வருவாய் அலுவலர்/ சிறப்பு தேர்வு நிலை நகராட்சி ஆணையர்<br>**பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள்**<br>(2) செயற் பொறியாளர்/ கோட்ட மின் பொறியாளர்<br>(3)கூடுதல் வருவாய் அலுவலர் பதவியிலிருந்து பதவி மாற்றம் மூலம், தலைமை கணக்கு அலுவலர் பதவி உயர்வு மூலம்,<br>(4) கூடுதல் சுகாதார அலுவலர் பதவி உயர்வு மூலம்,<br>அயற்பணி(5): பொறியியல் (8): பொதுப் பிரிவு (1): சுகாதாரப் பிரிவு (1) 5: 8 : 1 : 1 என்ற விகிதாசார அடிப்படையில் இப்பதவியினை நிரப்ப வேண்டும்.<br>**Explanation**: Promotion to the post shall be made on the grounds of merit and ability, seniority being considered where merit and ability are approximately equal.<br>**QUALIFICATION:-**<br>1. Graduate of any recognized University<br>2. Must have worked atleast for a period of 1 year in the category from which they are selected by promotion.<br>3. Must have passed Account Test for Subordinate Officers part-I or Account Test for Executive Officers. | | |
| 5 | காலிப்பணியிட விவரம் | 1. அனுமதிக்கப்பட்ட பணியிடம்<br>2. தற்போது மண்டல அலுவலராக பணிபுரிபவர்கள் | -<br>- | 15<br>14 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3. அயற்பணி அடிப்படையில் நிரப்பப்பட்ட பணியிடம் | - | 06 |
| | | 4. பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்ட பணியிடம் | - | 09 } 15 |
| | | 5. மைய நாளில் ஏற்பட்ட காலிப்பணியிடம் | - | 00 |
| | | 6. 01.07.2021 முதல் 30.06.2022 வரை பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | - | 00 |
| | | 7. 01.07.2021 முதல் 30.06.2022 வரை பதவி உயர்வு வழங்குவதால் ஏற்படும் காலிப்பணியிடம் (மண்டல அலுவலராக இருந்து கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வு) | - | 02 |
| | | 8. திரு.ஜி. தமிழ்செல்வன், செயற் பொறியாளர் அவர்களுக்கு மண்டல அலுவலராக பதவி உயர்வு பெற்றார் நாள். 16.11.2021 | - | 01 |
| | | 9. தற்போது மண்டல அலுவலர் பதவிக்கு ஏற்பட்டுள்ள ஒரு காலிப்பணியிடம் | - | 01 |
| | | 10. அரசாணை எண்.103 நாள்.09.01.2014 வரை 40 சதவீதம் எதிர்பாராமல் ஏற்படும் காலிப்பணியிடம். ( As per G.O. Ms. No.368, dated 18.10.1993 1 (iv) Where a panel is prepared after the relevant panel year, only the actual number of vacancies which really arose should be reckoned – NIL) | - | 00 |
| | | 11. அரசாணை எண். 59 ந.நி.கு.வ துறை (மா-3) நாள்.22.04.2019ன்படி அயற்பணியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 5 பணியிடங்களை நிரப்பப்பட வேண்டும், ஆனால் தற்போது கூடுதலாக 1 பணியிடம் சேர்த்து 6 நபர்கள் அயற்பணியில் பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி அரசாணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவாறு மீள நடைமுறைபடுத்த வேண்டிய நிலை ஏற்படின் நிரப்ப வேண்டிய காலிப்பணியிடம். | - | 01 |
| | | **மொத்த காலிப்பணியிடம்** | **-** | **02** |

| | | | |
|---|---|---|---|
| 6 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா? இல்லையெனில் காரணம். | | 2020-2021 ஆம் ஆண்டிற்கு மண்டல அலுவலர் பதவிக்கு காலிப்பணியிடம் இல்லாத காரணத்தால் "**இன்மைப் பட்டியல்**" வெளியிடப்பட வேண்டும். |

2020-2021ஆம் ஆண்டில் மண்டல அலுவலர் பதவியில் காலிப்பணியிடம் ஏதும் இல்லாததால் 2020-2021 ஆண்டிற்கு , "**இன்மை பட்டியல்**" வெளியிடப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மண்டல அலுவலர் பதவி வகுப்பு-1-A-ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், பொதுத்துறையின் 27.10.2021 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, கீழ்காண் பட்டியலில் உள்ள செயற்பொறியாளர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர் ஆகியோரின் விவரங்கள் துறை/மண்டலங்களிலிருந்து பெறப்பட்டுள்ளது.

அரசாணை -59ன் படி 5:8:1:1 விகிதாசாரத்தின் படி ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்கள்

| அயற்பணி<br>5: | செயற் பொறியாளர்/மின் கோட்டபொறியாளர்<br>8: | கூடுதல் வருவாய் அலுவலர் / தலைமை கணக்கு அலுவலர்<br>1: | கூடுதல் சுகாதார அலுவலர்<br>1 |
|---|---|---|---|
| திரு என். சங்கரன், ஆணையர் | திரு. டி.சுகுமார், செயற் பொறியாளர் (பதவி உயர்வு பெற்ற நாள். 25.07.2019) | - | - |
| திரு. ஆர். கோவிந்தராசு, மாவட்ட வருவாய் அலுவலர் | திரு. எச். முருகன், செயற் பொறியாளர் (பதவி உயர்வு பெற்ற நாள். 03.10.2019) | - | - |
| திரு. சி.மதிவண்னனன், நகராட்சி ஆணையர் | திரு. டி. ராஜசேகர், செயற் பொறியாளர் (பதவி உயர்வு பெற்ற நாள். 03.10.2019) | - | - |
| திரு. பி. முருகேசன், மாவட்ட வருவாய் அலுவலர் | திரு. பி.வி. சினிவாசன் செயற் பொறியாளர் (பதவி உயர்வு பெற்ற நாள். 03.10.2019) | - | - |
| திரு. எஸ். ஜெயசந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் | திரு. ஆர். மனோகரன் செயற் பொறியாளர் நாள். 04.03.2020 (ஓய்வு பெற்றார்) | - | - |
| திரு. என்.சுரேஷ் மாவட்ட வருவாய் அலுவலர் | திரு. ஜி. தமிழ்செல்வன் செயற் பொறியாளர் (பதவி உயர்வு பெற்ற நாள். 17.11.2021) | - | - |

மேற்கண்டவாறு, கடந்த 2019 அரசாணை பிறப்பித்த நாள் முதல் இன்று வரை மொத்தம் 6 செயற்பொறியாளர்கள் மண்டல அலுவலர் பதவி உயர்வு பெற்றுள்ளனர், விகிதாச்சார அடிப்படையில், இன்னும் இரண்டு செயற்பொறியாளர்கள் பதவி உயர்வு பெற்ற பின்பு, ஓர் சுற்று முடியும் அதன்பின்பு பொதுப்பிரிவு / வருவாய் மற்றும் சுகாதார பிரிவில் இருந்து தகுதியான நபர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும்.

அரசாணை எண் 59ன் படி, இதுநாள் வரை 5:8:1:1 விகிதாச்சாரத்தின்படி பொறியியல் பிரிவு, பொதுப்பிரிவு /வருவாய், மற்றும் சுகாதாரம் பிரிவுகளில் பணிபுரியும் வகுப்பு IA, IB மற்றும் IIனை சார்ந்த தகுதியுள்ள அலுவலர்களின் முதுநிலை பட்டியல் அட்டவணை-2ல்.

**அட்டவணை -2**

| வ. எண். | பெயர் / திருவாளர்கள் | செயற் பொறியாளர் / தலைமை கணக்கு அலுவலர் பணியில் சேர்ந்த நாள் | குறிப்புரை |
|---|---|---|---|
| 01. | திரு எ.சுந்தரராஜன் (செயற் பொறியாளர்) | 11.01.2013 | தனியர் மீது பொதுத்துறையில் கோப்பு எண். பொ.து.ந.க.எண். ஈ13/30210/2017ல் ஒழுங்கு நடவடிக்கை விதி 10(b) கீழ் குற்றச்சாட்டு ஏற்படுத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்தது. அதனால் 2019-2020 ஆண்டிற்கான மண்டல அலுவலர் பதவிக்கு தெரிவுப்பட்டியலில் தனியர் பெயர் பரிசீலிக்கப்பட்ட நிலையில் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்ததால், தனியர் பெயர் தெரிவுப்பட்டியலில் சேர்க்காமல் தவிர்க்கப்பட்டது. இதனை தொடர்ந்து மேற்படி குற்றச்சாட்டு குறிப்பாணையின் மீது இறுதி ஆணை பொ.து.ந.க.எண். ஈ13/30210/2017ல் நாள்.10.03.2020 அன்று தனியருக்கு ஊதிய உயர்வினை ஒரு வருட காலத்திற்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. தண்டனை காலம் 01.07.2020 முதல் 30.06.2021 வரை முடிவடைந்தது. மேலும், துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் 10.06.2022 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையில் ஒழுங்கு நடவடிக்கை விதி 10(a) கீழ் காரணம் கேட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு குற்றச்சாட்டு கைவிடப்பட்டது. மேலும், தனியருக்கு துணை ஆணையர் (பணிகள்)(பொ). அவர்களின் 22.06.2022 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையில் ஒழுங்கு நடவடிக்கை விதி 10(a)கீழ் காரணம் கேட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது. இக்குற்றச்சாட்டின் மீது முதன்மை |

| | | | |
|---|---|---|---|
| | | | செயலர் / ஆணையர் அவர்களின் 12.11.2022 நாளிட்ட செயல்முறை இறுதி ஆணையில் தனியருக்கு "**கண்டனம்" (Censure) தண்டனை வழங்கப்பட்டு நிலுவையில் உள்ளது.** அரசாணை எண்.22, நாள்.24.02.2014ன்படி தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளின்படி கண்டனம் தண்டனை ஒருவருட காலத்திற்கு தனியருக்கு எதிராக கருதப்பட வேண்டும். எனவே, தனியர் பெயரை பதவி உயர்வுக்கு பரிசீலிக்க இயலாது. **எனவே, தனியரின் பெயரை இத் தெரிவுப்பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 02. | திரு பி.சங்கரவேலு (செயற் பொறியாளர்) | 11.01.2013 | தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எதுவும் நிலுவையில் இல்லை. தனியருக்கு மண்டல அலுவலர் பதவிக்கு தற்காலிகமாக விருப்பம் இல்லை என 07.02.2019 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ளார். மேலும், தனியர் 2021-2022 கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கு விருப்பம் தெரிவித்துள்ளார். எனவே தனியரின் பெயரை **இத்தெரிவுப்பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** (இது மூன்றாவது தெரிவுப்பட்டியல்) |
| 03. | திரு ப்பி.அண்ணாதுரை (செயற் பொறியாளர்) | 11.10.2013 | தனியர் மீது பொதுத்துறையில் கோப்பு எண். பொ.து.ந.க.எண். ஈ13/178832019 நாள். 29.06.2019 மூலம் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது. மேற்படி ஒழுங்கு நடவடிக்கையிருந்து தனியரை விடுவித்து 11.06.2022 தேதியன்று ஆணையர் (பொறுப்பு) அவர்களால் ஆணையிடப்பட்டது. எனவே, மண்டல அலுவலர் பதவிக்கு தகுதிவுடையவராகிறார். ஆனால் தனியருடைய 16.06.2022 நாளிட்ட மனுவில் மண்டல அலுவலர் பதவிக்கு நிரந்தரமாக விருப்பம் இல்லை என தெரிவித்துள்ளார். எனவே, தனியரின் பெயரை **இத்தெரிவுப்பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** (இது முதலாவது தெரிவு பட்டியலாகும்). |

| | | | |
|---|---|---|---|
| 04. | திரு எம். புகழேந்தி (செயற் பொறியாளர்) | 11.01.2013 | தனியர் மண்டல அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதியான E.O. தேர்வு முடிக்கவில்லை எனவே தனியரின் பெயரை **இத்தெரிவுப்பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 05. | திரு ஜி. அருள்விஜூ (செயற் பொறியாளர்) | 13.03.2013 | தனியர் அவர்களின் 11.12.2019 நாளிட்ட கடிதத்தில் மண்டல அலுவலர் பதவிக்கு தற்காலிகமாக **விருப்பமில்லை என தெரிவித்துள்ளார்.** இது இரண்டாவது தெரிவுப்பட்டியல். **இத்தெரிவுப்பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 06. | திரு எஸ்.சுதாகர் (செயற் பொறியாளர்) | 29.05.2013 | இவர் மண்டல அலுவலர் பதவிக்கு 15.11.2021 அன்று **விருப்பம் தற்காலிகமாக இல்லை என தெரிவித்துள்ளார். இத் தெரிவுப்பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** (இது முதலாவது தெரிவுப்பட்டியல்.) |
| 07. | திரு ஏ.எஸ்.முருகன் (செயற் பொறியாளர்) | 29.05.2013 | தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும் மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் தனியரின் பெயரை **இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க தகுதிவுடையவராகிறார்.** |
| 08. | திரு ஆர்.சரவணன் (செயற் பொறியாளர்) | 14.06.2013 | தனியர் அவர்களின் 11.12.2019 நாளிட்ட கடிதத்தில் மண்டல அலுவலர் பதவிக்கு தற்காலிகமாக **விருப்பமில்லை என தெரிவித்துள்ளார்.** இது இரண்டாவது தெரிவுப்பட்டியல். **இத்தெரிவுப்பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 09. | திரு. பி.ஆர். சரவணமூர்த்தி (செயற் பொறியாளர்) | 12.06.2013 | தனியர் மீது பொதுத்துறையில் கோப்பு எண். பொ.து.ந.க.எண்.ஈ13/18257/2019 நாள். 30.04.2020 விதி 10(அ)ன் கீழ் காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டு இறுதி ஆணைக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசாணை எண்.22, நாள்.24.02.2014ன்படி |

| | | | |
|---|---|---|---|
| | | | தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளின்படி தண்டனை ஏதும் வழங்கப்படாத நிலையில், தனியரின் பெயர் **இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க தகுதிவுடையவராகிறார்.** |
| 10. | திருமதி. L. வெண்மதி (தலைமை கணக்கு அலுவலர்) | 23.11.2017 | தனியர் மண்டல அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதியான E.O. தேர்வு முடிக்கவில்லை. மேலும், தனியர் 30.6.2022 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெற்றார். எனவே தனியரின் பெயரை **இத்தெரிவுப்பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.** |
| 11. | திரு.ட.கருணாகரன் (தலைமை கணக்கு அலுவலர்) | 23.11.2017 | தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும் மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் தனியரின் பெயரை **இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க தகுதிவுடையவராகிறார்.** |

மேற்படி, அட்டவணை 2ல் வரிசை எண்.5, 6 (ம) 8ல் உள்ள நபர்கள் மண்டல அலுவலர் பதவிக்கு விருப்பம் இல்லை என தெரிவித்துள்ளதால், TamilNadu Government Servants (Conditions of Service) Act 2016ல் 57(2)ன்படி தனியர்களுக்கு மூன்று ஆண்டுகள் மண்டல அலுவலர் பதவி உயர்வு வழங்கப்படமாட்டாது.

அரசாணை எண்.59ன்படி 5:8:1:1 விகிதாசாரத்தின் அடிப்படையில் ஏற்கனவே, 6 செயற் பொறியாளர்களுக்கு பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது விகிதாசாரத்தின் படி மீதம் 2 செயற் பொறியாளர் மற்றும் பொது பிரிவு / வருவாய் பிரிவு மற்றும் சுகாதார பிரிவு தலா ஒரு பணியிடம் நிரப்பபட வேண்டும். ஆனால் காலிபணியிட மதிப்பீட்டின்படி 2 காலிப்பணியிடங்கள் உள்ளன. எனவே, 2 செயற் பொறியாளர்கள் பெயரை தற்போது தெரிவுப்பட்டியலில் சேர்க்கலாம்.

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 04.12.2021 நாளிட்ட ஆணையின்படி, திரு.என்.சங்கரன் ஆணையர்/ இணை இயக்குநர், நகராட்சி ஆணையரகம், அவர்கள் அயற்பணியில் நிர்ணயிக்கப்பட்ட விகிதாசாரத்தை விட, கூடுதலாக பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலராக, மண்டலம்-1ல் பணியமர்வு செய்யப்பட்டார். பணி விகிதாசாரப்படி கடைபிடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களை கொண்டு ஒரு பணியிடம் நிரப்ப பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2021-2022ஆம் ஆண்டு மண்டல அலுவலர் பதவிக்கு எதிர்பார்க்கப்பட்ட 1 காலிப்பணியிடம் திரு. எஸ். தேவேந்திரன் மண்டல அலுவலர், அவர்கள் 2021-2022 ஆம் ஆண்டு கண்காணிப்பு பொறியாளராக பதவி உயர்வு வழங்க அரசாணை பெறப்பட்டு அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதனால் எற்பட்ட மண்டல அலுவலர் காலிப்பணியிடம் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட பணிவிதிகளின் படியும், விகிதாச்சாரத்தின்படி முழு தகுதி பெற்ற **அட்டவணை-2-ல்** கண்டுள்ள செயற்பொறியாளர்கள் முதுநிலைப்பட்டியலின் அடிப்படையில் 2021 - 2022 ஆம் ஆண்டிற்கான அரசாணை எண்.59-ன்படி **தெரிவுப்பட்டியல்** பின்வருமாறு அமைகிறது.

<u>அட்டவணை -3</u>

| வ. எண். | பெயர் / திருவாளர்கள் | செயற் பொறியாளர் / தலைமை கணக்கு அலுவலர் பணியில் சேர்ந்த நாள் | அரசாணை எண் 58ன் படி விகிதாசாரம் 5:8:1:1 | ஓய்வு பெறும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | திரு. ஏ.எஸ்.முருகன் செயற் பொறியாளர், மழைநீர் வடிகால் துறை, (தற்போது மண்டல அலுவலர் (பொ) மண்டலம் - 6 | 29.05.2013 | செயற் பொறியாளர்/ கோட்ட மின் பொறியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விகிதாசாரத்தில் (8ல்) 7வது முறையாக சேர்க்கும் பொருட்டு) | 31.03.2026 |
| 2. | திரு. பி.ஆர். சரவணமூர்த்தி, செயற் பொறியாளர், மண்டலம் -12 | 12.06.2013 | செயற் பொறியாளர்/ கோட்ட மின் பொறியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விகிதாசாரத்தில் (8ல்) 8 வது முறையாக சேர்க்கும் பொருட்டு) | 28.02.2024 |

மேலும், அரசாணை எண்.181 நகராட்சி நிரவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள். 06.10.2009ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எனவே,

அ) 01.07.2020-ஐ மைய நாளாக கொண்ட 2020-2021ஆம் ஆண்டில் மண்டல அலுவலர் பதவியில் காலப்பணியிடம் ஏதும் இல்லாததால் 2020-2021 ஆண்டிற்கு, "**இன்மை பட்டியல்**" வெளியிடவும்,

ஆ) 01.07.2021 ஐ அறுதி நாளாகக் கொண்டு, 2021-2022 ஆம் ஆண்டிற்கான மண்டல அலுவலர் பதவி உயர்வுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி கல்வித்தகுதி மற்றும் பணிக்காலத்தகுதி ஆகிய முழுத்தகுதி பெற்ற அட்டவணை-3ல் கண்டுள்ள செயற்பொறியாளர்கள் அடங்கிய தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

இ) மேற்படி, தெரிவுப்பட்டியலின் ஒப்புதலுக்குட்பட்டு அடுத்து வரும் மைய நாளுக்கு முன்பு ஏற்பட்டுள்ள/ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களை, 7வது ஊதியக்குழு பரிந்துரையின்படி, ரூ.61900-228100 (Level 26) என்ற ஊதிய விகிதத்தில் மண்டல அலுவலர் பதவி உயர்வு வழங்கவும்,

மேற்கண்ட 'அ' முதல் 'இ' வரை உள்ள இனங்களுக்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

*** * * * * ***

**பொ.து.ந.க.எண்.ஈ3/34593/2022**

**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:623/2022** **பொருள் எண்.55**

**அயற்பணி - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் - மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும்.**

அரசாணை (வா) எண்.3981, பொது(சிறப்பு-அ)த்துறை, நாள்:.14.10.2022 மற்றும் அரசாணை (ப) எண்.140, தமிழ் வளர்ச்சி (ம) செய்தி (நிர்வாகம்.1)த்துறை, நாள்: 17.10.2022-ன்படி, கீழ்க்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ, எண், | பெயர் | அரசாணை எண். மற்றும் நாள் | அயற்பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | திரு. எம். பி. அமித், இ.ஆ.ப.<br>வட்டார துணை ஆணையர்(தெற்கு)<br>பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (வா) எண்.3981, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 14.10.2022 | 19.10.2022 மு.ப. |
| 2 | திரு. த. செந்தில்குமார்<br>துணை இயக்குநர்/<br>மக்கள் தொடர்பு அலுவலர்<br>பெருநகர சென்னை மாநகராட்சி | அரசாணை (ப) எண். 140, தமிழ் வளர்ச்சி (ம) செய்தி (நிர்வாகம்.1)த் துறை, நாள்: 17.10.2022 | 19.10.2022 மு.ப. |

"இதனை நியமனக்குழு பதிவு செய்து
மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது".**

******

**சகு.நக.எண்.சகு.1/2040/2022**
**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 15.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:624/2022** **பொருள் எண்.56**

**பெருநகர சென்னை மாநகராட்சி - சட்டக்குழுமம் - கூடுதலாக மூன்று வழக்குரைஞர்களை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் வழக்குகளை கையாளுவதற்கு நிலை வழக்குரைஞர்களாக பயன்படுத்திக்கொள்ளவும் - தொடர் கட்டணம் (Retainer Fees) வழங்கவும் அனுமதி.**

மன்ற தீர்மான எண்.326/2022, நாள்.30.07.2022 மற்றும் மன்ற தீர்மான எண்.358/2022, நாள்.30.08.2022ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் வழக்குகளை கையாளுவதற்கு, 16 நிலை வழக்குரைஞர்கள் இரண்டு கட்டங்களாக நியமித்து ஆணையிடப்பட்டுள்ளது.

தற்போது, மூன்றாம் கட்டமாக, நிர்வாக நலன் கருதி

1. திரு.ப்பி. பிரித்வி சோப்டா, பதிவு எண். MS.2817/15
2. திரு.எம்.சுரேஷ்குமார், பதிவு எண். MS.727/1994
3. திருமதி.எஸ்.வனிதா ஜாய்ஸ் ராஜ், MS.1414/2007

ஆகிய மூன்று வழக்குரைஞர்களை 01.12.2022 முதல் நியமிக்கவும், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக 01.12.2022 முதல் ஓராண்டு காலத்திற்கு நடைமுறை விதிமுறைகள் மற்றும் வரையரைகளுக்குட்பட்டு ஒதுக்கப்படும் வழக்குகளை கையாளுவதற்காக மாதாந்திர தொடர் கட்டணத்துடன் (Retainer Fees) நிலை வழக்குரைஞர்களாக நியமிக்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

**"இப்பொருள் ஒத்தி வைக்கப்படுகிறது".**

* * * * * *

**ம.அ.5ந.க.எண்.17038/2022**
**முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:625/2022** **பொருள் எண்.57**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5, வார்டு - 55, ஏழுகிணறு தெரு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள CMWSSB வார்டு - 55 அலுவலக கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 5, பகுதி - 13, வார்டு - 55க்கு உட்பட்ட ஏழுகிணறு தெருவில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டடத்தில் *CMWSSB* வார்டு - 55 அலுவலகம் இயங்கி வருகிறது. தற்பேது மிகவும் பழுதடைந்து அபாயகரமான சூழ்நிலையில் உள்ளதால் இந்த *CMWSSB* வார்டு - 55 அலுவலக கட்டடத்தை இடித்துவிட்டு புதியதாக கட்டடம் கட்டுதல் அவசியமாகிறது. இது சம்பந்தமாக துறைமுகம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர் பாபு அவர்கள் 2022 - 2023 ஆம் ஆண்டு தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து புதிதாக கட்டடம் கட்டுவதற்கு ஆகும் செலவினை தருவதற்கு இசைவு தெரிவித்துள்ளார்கள்.

இக்கட்டடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

தரை மற்றும் முதல் தளம் = 42 மீ *X 6.5* மீ = 273 சதுர மீட்டர்

தற்போதைய புத்தக மதிப்பு = ரூ 75,000/-

எனவே, மண்டலம்-5, வார்டு-55, ஏழுகிணறு தெருவில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த மற்றும் அபாயகரமான சூழ்நிலையில் உள்ள *CMWSSB* வார்டு - 55 அலுவலக கட்டடத்தை இடித்து அகற்ற மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

**********

**ம.அ.10ந.க.எண்.A2/17243-A/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:626/2022** **பொருள் எண்.58**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10, வார்டு-133, தி.நகர் ராதாகிருஷ்ணன் தெருவில் அமைந்துள்ள பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள ஆரம்ப சுகாதார மைய (UPHC) கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

மண்டலம்-10, வார்டு-133, தி.நகர் ராதாகிருஷ்ணன் தெருவில் அமைந்துள்ள பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள ஆரம்ப சுகாதார மையத்தை (UPHC) இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | வார்டு எண்-133 | மண்டலம்-10 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | தி.நகர் ராதாகிருஷ்ணன் தெருவில் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள ஆரம்ப சுகாதார மையம் (UPHC). |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1969 |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 200 சதுரமீட்டர் (தரைதளம்) |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 412 சதுரமீட்டர் |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ.3587.86 |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | ஆம். |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | ஆரம்ப சுகாதார மைய (UPHC) கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | Dilapidated condition. |
| 9. | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | செயற்பொறியாளர்-10 |
| 10. | வார்டுக்குழு தீர்மான எண். மற்றும் நாள் மதிப்பீடு | 94, நாள்.12.09.2022<br>3,76,000/- |

எனவே, மண்டலம்-10, வார்டு-133, தி.நகர் ராதாகிருஷ்ணன் தெருவில் பழுதடைந்து இடிந்த நிலையில் உள்ள ஆரம்ப சுகாதார மைய கட்டடத்தை இடித்து அகற்ற, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

*** * * * * ***

**ம.அ.5.ந.க.எண்.இ1/7778/PM-15/2022**

**முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 21.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:627/2022** **பொருள் எண்.59**

**பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பந்த பணி - 2022-23 - மண்டலம்-5, வார்டு-60ற்குட்பட்ட ராஜாஜி சாலையில் உள்ள தலைமைசெயலகம் பூங்கா ஒரு வருட பராமரிப்பு பணிக்கு மின்னனு ஒப்பம் (E - Tender) - குறைந்த சதவீதம் அளித்த திரு.எம்.மகேஷ், அவர்களுக்கு ஒப்பத்தை வழங்க அனுமதி.**

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| 1 | 60 | ராஜாஜி சாலையில் உள்ள தலைமைசெயலகம் பூங்கா ஒரு வருட பராமரிப்பு பணி | ரூ.86,72,000 |

| | | |
|---|---|---|
| 2 | மதிப்பீட்டின் எண்/குழுவின்/மன்றத்தின் தீர்மான எண்/நாள் | தீர்மான எண்:139/2022 நாள்.21.07.2022 பொருள் எண்:02 |
| 3 | திட்டக் குறியீட்டு எண். | |
| 4 | ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைபடி எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு | ரூ.86.72இலட்சம் 2022-2023ம் ஆண்டின் விலை விவரப்படி |
| | அ) பணியின் செலவீனம் | ரூ.75,08,328.50 |
| | ஆ) மேற்பார்வை செலவீனம் | ரூ. - |
| | இ) சில்லரை மேற்பார்வை செலவு | ரூ. - |
| | ஈ) தரக் கட்டுப்பாடு செலவு | ரூ. - |
| | உ) மற்ற எதிர்பாரா செலவு 2.5% | ரூ. 1,87,588.79 |
| | ஊ) த.நா.க பணி செலவீனம் 1.0% | ரூ. 75,083.29 |
| | எ) ஜி.எஸ்.டி வரி 12% | ரூ. 9,00,999.42 |
| | மொத்தம் | ரூ.86,72,000.00 |
| 5 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர். 28, இதழ்.1398 நாள்.08.09.2022<br>The Hindu நாள்: 08.09.2022 |
| 6 | ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | 22.09.2022 அன்று மாலை 3.00 மணி வரை |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | 23.09.2022 அன்று மாலை 3.30 மணி வரை |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து ஒப்பம் பெறுவதற்கு 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | |
| 9 | எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன | e-Procurement முறையில் ஒப்பந்தம் வரவேற்கப்பட்டது. |
| 10 | எத்தனை ஒப்பம் பெறப்பட்டன | e-Procurement முறையில் - 4 ஒப்பம் பெறப்பட்டது. |

11) ஒப்பந்தத்தில் பங்கேற்றவர்களின் விவரங்கள்

| வ. எண் | ஒப்பந்தத்தில் பங்கேற்றவர் பெயர் | அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பந்ததொகை | விலை விகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு.எம்.மகேஷ் | ரூ.75,08,328.50 | ரூ.73,54,407.77 | (-) 2.05% குறைவு |
| 2 | திருவாளர்.எஸ்.எம்.கே. கான்ட்ராக்டர்ஸ் | ரூ.75,08,328.50 | ரூ.73,58,912.76 | (-) 1.99% குறைவு |
| 3 | திருவாளர். ஸ்ரீ கீதா எண்டர்பிரைசஸ் | ரூ.75,08,328.50 | ரூ.68,91,143.90 | (-) 8.22% குறைவு |
| 4 | திரு.பி.டி.கிருஷ்ணசாமி | ரூ.75,08,328.50 | ரூ.71,33,662.91 | (-) 4.99% குறைவு |

மேற்படி பணிக்கான ஒப்பந்தத்தில் 4 ஒப்பந்ததாரர்கள் கலந்துக்கொண்டனர். இவற்றில் திருவாளர். ஸ்ரீ கீதா எண்டர்பிரைசஸ் அவர்கள் ஒப்பந்த விதிகளின்படி தொழிற்நுட்ப ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. திரு.பி.டி.கிருஷ்ணசாமி அவர்கள் தனது வேலை பளு காரணமாக இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகிக்கொள்வதாக தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார். ஏற்கப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.எம்.மகேஷ் அவர்களிடம் மேலும் விலைகுறைப்புக்கான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில் திரு.எம்.மகேஷ் ஒப்பந்ததாரர் (-)2.05%-லிருந்து (-)4.99%-க்கு குறைத்துகொள்வதாக ஒப்புக்கொண்டு கடிதம் வழங்கியுள்ளார்.

| | | |
|---|---|---|
| 12 | குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | பேச்சுவார்தை நடத்தப்பட்ட நாள்: |
| 13 | பேச்சுவார்த்தைக்கப்பின் ஒப்பந்தத்தொகை ஒப்பந்த சதவீதம் | ரூ.71,33,662.90 (-) 4.99% குறைவு 2021-22 ம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 14 | குறைந்த ஒப்பந்த சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதிவின் நிலை,பதிவு நாள். | முதல் வகுப்பு |
| 15 | கூடுதல் பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம் | - |

திரு.எம்.மகேஷ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்ப சதவீதம் (-) 4.99% குறைவு என்பது 2022-2023-ம் ஆண்டு அலுவலக விலையின்படி ரூ.71,33,662.90 என்பது குறைவாகும்.

| வ எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | அலுவலக விலை | ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத் தொகைக்கு (-) 4.99% (12% GST சேர்த்து) |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.மகேஷ் | ரூ.75,08,328.50 | ரூ. 71,33,662.90 + ரூ.8,56,039.54 = ரூ.79,89,702.45 |

மேலும், GST வரியானது 12% லிருந்து 18% சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளதால் இப்பணிக்கு கூடுதலாக 6% GST வரி ரூ.4,28,019.77/-ஐ சேர்த்து வழங்கவேண்டியுள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தில் திரு.எம்.மகேஷ் அவர்கள் அளித்துள்ள ஒப்ப சதவீதம் (-)4.99% குறைவு என்பது 2022-23ம் ஆண்டு அலுவலக விலை ரூ.75,08,328.50/-க்கு (-)4.99% ரூ.71,33,662.90/-க்கு 18% GST ரூ.12,84,059.32/- சேர்த்து மொத்தம் ரூ.84,17,722.23/-க்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1988 பிரிவு 7(1) மற்றும் 7(2)-ன்படி இப்பணியை திரு.எம்.மகேஷ், அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

* * * * * *

**க.து.ந.க.எண்.பி11/MP/2149/2022**

**முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 19.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:628 / 2022** **பொருள் எண்.60**

**பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - 2022-23 - கட்டடத்துறை - வடசென்னை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மண்டலம்-2, பகுதி-5, வார்டு-21 பாடசாலை தெருவில் உள்ள சென்னை மாநகராட்சி பள்ளிக்கு 3 + 3 வகுப்பறைகள் மற்றும் படிக்கட்டுகள் மற்றும் கழிவறைகள் (தரைதளம் + முதல்தளம்) கட்டும் பணிக்கு திருவாளர். Annamalai Construction அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும் மற்றும் ரூ.1,84,59,248.18க்கு திருத்திய நிர்வாக அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் விவரம் | மண்டலம்-2, பகுதி-5, வார்டு-21 பாடசாலை தெருவில் உள்ள சென்னை மாநகராட்சி பள்ளிக்கு 3 + 3 வகுப்பறைகள் மற்றும் படிக்கட்டுகள் மற்றும் கழிவறைகள் (தரைதளம் + முதல்தளம்) கட்டும் பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | முதன்மை செயலாளர்/ஆணையர் அவர்களின் அனுமதி நாள்: 18.07.2022 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்- 2 |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்துதயாரிக்கப்பட்டது | 2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 1,71,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 1,49,69,790.18 |
| | (ஆ) மின்சாரம் கட்டணம் | ரூ. 30,000.00 |
| | (இ) தரக்கட்டுப்பாட்டு செலவு | ரூ. 1,54,137.10 |
| | (ஈ)தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொதுநல வாரியநிதி 1 % | ரூ. 1,49,697.90 |
| | (இ) சரக்கு மற்றும் சேவை வரி 12 % | ரூ. 17,96,374.82 |
| | மொத்தம் | **ரூ. 1,71,00,000.00** |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | முரசொலி நாள்: 26.08.2022<br>தி டெக்கான் க்ரோனிக்கல் : 26.08.2022<br>சென்னை மாநகராட்சி செய்திமலர் நாள்: 25.08.2022 |
| 7 | ஒப்பந்த புள்ளி எற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 16-09-2022 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து15நாட்கள்ஒதுக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 9 | எத்தனைஒப்பங்கள்பெறப்பட்டன | ஒரு மின் ஒப்பம் (e- Tender) இணையத்தளத்தின் மூலம் ஒரு ஒப்ப படிவம் பெறப்பட்டுள்ளது. |
| 10 | பணிக்கான நிதி ஆதாரம்<br>அ) வரவு செலவு திட்ட தலைப்பு | வட சென்னை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்ட நிதி. |
| 11 | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | 15-12 -2022 |

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ. எண் | ஒப்பத்தில்பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி | பணியின் அலுவலக மதிப்பு 2021-2022 | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை (ரூ) | விலைவிகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | Annamalai Construction | ரூ. 1,49,69,790.18 | ரூ.1,64,66,769.20 | (+) 10.00 % அதிகம் |

மேற்கண்ட பணிக்காக ஒப்பம் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 16.09.2022 அன்று ஒரு மின் ஒப்பம் (e-Tender) பெறப்பட்டன. ஒப்பந்ததாரரான திருவாளர். Annamalai Construction அவர்களின் ஒப்பத் தொகை 2021-2022 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ. 1,49,69,790.18ஐவிட (+) 10.00 % அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத் தொகை ரூ.1,64,66,769.20 ஆகும்.

ஒப்பந்ததாரரை விலைக்குறைப்பு செய்ய கோரியதில் 10.10.2022 அன்று இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,49,69,790.18 யைவிட (+)4.50% அதிகமாக விலைக் குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத் தொகை ரூ.1.56,43,430.66 ஆகும்.

| ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி | மதிப்பீட்டில் பணியின் தொகை 2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலை | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை | விலைக் குறைப்பிற்கு பின் ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை, | 2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம் | ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்பத் தொகைக்கான GST 18 % தொகை |
|---|---|---|---|---|---|
| திருவாளர் Annamalai Construction | ரூ.1,49,69,790.18 | ரூ.1,64,66,769.20 | ரூ.1,56,43,430.66 | (+) 4.50% அதிகம் | ரூ.28,15,817.52 |

மேலும், ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை விலை குறைப்பிற்கு பின் சரக்கு மற்றும் சேவை வரி 18% சேர்த்து மொத்த தொகை ரூ.1,84,59,248.18 ஆகும். இத்தொகை வடசென்னை பாராளுமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்த தொகையினை விட ரூ.12.38 லட்சம் கூடுதலாக இருப்பதால் வடசென்னை பாராளுமன்ற உறுப்பினரிடம் கூடுதலாக ரூ.12.38 இலட்சம் ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இதன்படி வடசென்னை பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் 02.11.2022 அன்று மேற்கண்ட பணிக்காக கூடுதலாக ரூ.13.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்து பரிந்துரை அளித்துள்ளார்கள். மேலும் 08.11.2022 அன்று வடசென்னை பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் மேலும் ரூ.60000/- இப்பணிக்காக கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து பரிந்துரை செய்துள்ளார்.

இப்பணிக்கான ஒப்பத் தொகைக்கு பணியின் மதிப்பீடு ரூ.1,56,43,430.66/- ஆகவும், சரக்கு மற்றும் சேவைவரி 18% ரூ.28,15,817.52 சேர்த்து மொத்த தொகையான ரூ.1,84,59,248.18க்கு ஒப்ப சதவீதம் (+)4.50க்கு திருவாளர் Annamalai Construction அவர்களுக்கு ஒப்பம் வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, மேற்கண்ட பணிக்கு ஒற்றை ஒப்பம் அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையானது ரூ.1,56,43,430.66/- ஆகவும், (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தாறு இலட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து நானூற்றி முப்பது மற்றும் அறுபத்தாறு பைசா மட்டும்) சரக்கு மற்றும் சேவைவரி 18% ரூ.28.15,817.52 சேர்த்து ஆக மொத்த தொகையான ரூ.1,84,59,248,18க்கு (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தி நான்கு இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து இருநூற்று நாற்பத்தெட்டு மற்றும் பதினெட்டு பைசா மட்டும்) 2021-2022ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டு

விலைப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் (+)*4.50%* அதிகமான விழுக்காட்டிற்கு திருவாளர் *Annamalai Construction* அவர்களுக்கு பணி வழங்கலாம் எனக் கருதப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான மதிப்பீடு *GST* வரி 12% சேர்த்து ரூ.1,71,00,000.00 ஆகும், இப்பணிக்கு *GST* வரி 18% சேர்க்கும் போது ரூ.1,79,98,187.41 மதிப்பீட்டு தொகைக்கு திருத்திய நிர்வாக அனுமதியும்,
2. திருவாளர்.*Annamalai Construction* அளித்த ஒப்பத்தொகை ரூ.1,*56,43,430.66* மற்றும் ஒப்ப சதவீதம் (+)4.50 ஆகும் *GST* வரி சேர்த்து ரூ.1,*84,59*,248.18 (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தி நான்கு இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து இருநூற்று நாற்பத்தெட்டு மற்றும் பதினெட்டு பைசா மட்டும்)க்கு ஒப்பம் வழங்க அனுமதியும்,
3. மதிப்பீட்டு தொகையை விட ஒப்பத்தொகை ரூ.4,61,060.77 கூடுதலாக இருப்பதால் இத்தொகைக்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

* * * * * *

**பே.சா.து.ந.க.எண்.பி4/3406/2022**

**முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 21.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:629/2022** **பொருள் எண்.61**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை - 2022-23 - பாராளுமன்ற உறுப்பினர் மத்திய சென்னை தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மண்டலம்-9 வார்டு- 114ல் அண்ணா சதுக்கம் அருகில் புதிய நவீன அமைப்புடன் கூடிய பேருந்து நிறுத்த நிழற்குடை அமைக்கும் பணிக்கு ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைபுள்ளி அளித்த திருவாளர்.எஸ்.ஆர்.காண்டிராக்டர்ஸ் அவர்களுக்கு பணியினை வழங்க அனுமதி.**

பாராளுமன்ற உறுப்பினர் மத்திய சென்னை தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மண்டலம்-9, வார்டு- 114ல் அண்ணா சதுக்கம் அருகில் புதிய நவீன அமைப்புடன் கூடிய பேருந்து நிறுத்த நிழற்குடை அமைக்கும் பணிக்கு ரூ.1.18 கோடி மதிப்பீட்டில் 12.10.2022 அன்று முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பபுள்ளிகள் கோரப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் மத்திய சென்னை தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மண்டலம்-9, வார்டு- 114ல் அண்ணா சதுக்கம் அருகில் புதிய நவீன அமைப்புடன் கூடிய பேருந்து நிறுத்த நிழற்குடை அமைக்கும் பணிக்கு ஒப்பங்கள் "இரண்டு உறைகள்" என்ற முறையில், ஒப்பம் இறுதி நாள் 08.11.2022 எனவும், ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழ் "Deccan Chronicle" மற்றும் தமிழ் நாளிதழ் "முரசொலி" 28.10.2022 நாளிட்ட நாளிதழிலும் 27.10.2022 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது, 03.11.22 மாநில ஒப்பந்த புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஒப்ப நாளான 09.11.2022 அன்று தொழில் நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது. இரண்டு ஒப்பந்ததாரர்கள் பங்கேற்றனர். தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 14.11.2022 அன்று திறக்கப்பட்டது.

**(அட்டவணை-I)**

| S. No (1) | File No / BRR.C.No. (2) | No.of Bidder Participated (3) | Name of the Bidder (4) | Work Value Including GST(18%) (Rs.) (5) | Based on SOR 2021-22 Quoted % (6) |
|---|---|---|---|---|---|
| 1 | B4/3406/2022 | 2 | S.R.Contractors | 11400843.31 | (+)9.60% |
| 2 | | | P.Radhakrishnan | 11400843.31 | (+)15.00% |

ஒப்பந்ததாரரின் ஒப்பப் புள்ளியானது 2021-22ம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு, குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த ஒப்பந்ததாரரிடம் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். விலைக்குறைப்புக்கான ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

**(அட்டவணை-II)**

| S. No (1) | File No / BRR.C.No. (2) | No.of Bidder Participated (3) | Name of the Bidder (L1) (4) | Work Value Including GST(18%) (Rs.) (5) | Based on SOR 2021-22 Quoted % (6) | Based on SOR 2021-22 % Offered After Negotiation (7) | Based on SOR 2022-23 %Offered After Negotiation (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | B4/3406/2022 | 2 | S.R.Contractors | 11400843.31 | (+) 9.60 | (+)2.40% | (+)1.06% |

மேற்குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் பேச்சுவார்த்தைக்குப்பின் அளித்த ஒப்ப விகிதத்தை ஒப்பிடுகையில் 2021-22ம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் அதிகமாகவும் மற்றும் 2022-23ம் ஆண்டு அலுவலக புள்ளியுடன் ஒப்பிடுகையில் அதிகமாகவும் உள்ளது. இதற்கு மேலும் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்கள்.

எனவே, இந்த ஒப்பம் சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமத்திற்கு சமர்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னணு (e-tender) முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். சந்தை விலைப்பட்டியலை கருத்தில் கொண்டு ஒப்பந்தப்புள்ளி ஒப்பிடுகையில் விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தத் தொகையானது ஏற்றுக் கொள்ளத் தக்க நிலையில் உள்ளது.

2) மேலும், ஒப்பந்ததாரர்கள் தங்கள் விலை குறைப்பு கடிதத்தில், மூலப்பொருள்கள் விலை, தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, மற்றும் போக்குவரத்து வாகன செலவு பெருகி உள்ளதாலும் அலுவலக விலையை விட ஒப்ப விலை அதிகமாக உள்ளதாலும் கொரோனா வைரஸ் நோய் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு தேவையான வசதிகளை தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தி கொடுப்பதற்கும் கூடுதல் நிதி சுமை ஏற்படுவதை கருத்தில் கொண்டும் விலைகுறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த விலை விகிதம் அளித்த கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்களுக்கு பணியை வழங்க 18.11.2022 அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கி உள்ளது.

**(அட்டவணை-III)**

| S. No (1) | File No / BRR.C.No. (2) | No.of Bidder Participated (3) | Name of the Bidder (L1) (4) | Amount After Negotiation GST (18%) Rs. (5) | Based on SOR 2021-22 % Offered After Negotiation (6) | Based on SOR 2022-23 %Offered After Negotiation (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | B4/3406/2022 | 2 | S.R.Contractors | 11674463.55 | (+) 2.40% | (+)1.06% |

எனவே,

1) மண்டலம்-9, வார்டு- 114ல் அண்ணா சதுக்கம் அருகில் புதிய நவீன அமைப்புடன் கூடிய பேருந்து நிறுத்த நிழற்குடை அமைக்கும் பணிக்கு குறைந்த விலைபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர் எஸ்.ஆர். காண்டிராக்டர்ஸ் அவர்களுக்கு (+)2.40% ஒப்ப புள்ளி சதவிகிதம் மற்றும் ரூ.11674463.55 ஒப்பத் தொகைக்கு (18% GST வரி சேர்த்து) பணியினை வழங்கவும்,

2) மேற்காணும் பணிக்கான நிதியினை பாராளுமன்ற உறுப்பினர் மத்திய சென்னை தொகுதி மேம்பாட்டு நிதியில் ஒப்பந்ததாரருக்கு பட்டி தீர்வு செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/2826/2022**

**முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 26.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:630/2022** **பொருள் எண்.62**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - மண்டலம்-5, , வார்டு-55க்கு உட்பட்ட கதவு எண்.61/34, தாத்தா முத்தியப்பன் தெருவில் (ஆச்சாரப்பன் தெரு சந்திப்பு) காலியாக உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தின் தரைதளப் பகுதியை நியாயவிலைக் கடைக்கு ஒதுக்கீடு செய்ய கோரியது - மண்டலம் - 5லிருந்து அறிக்கை பெறப்பட்டது - நியாய விலை கடைக்கு (02AF009NC) ஒதுக்கீடு செய்ய அனுமதி.**

இணைப்பதிவாளர் (பொவிதி) 1, கூட்டுறவுத்துறை, அவர்களின் 24.11.2021 நாளிட்ட கடிதத்தில், சென்னை வார்டு எண்.55, போர்ச்சுகீஸ் சர்ச் தெருவில் வ.உ.சி. கூட்டுறவு பண்டகசாலையின் கடை எண். 02AF009NC 400 சதுர அடியில் இயங்கி வருகிறது. இதில் 1167 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளது. இந்த நியாய விலைக் கடைக்கு ஆச்சாரப்பன் தெரு, புட்டி சாகிப் தெரு, எம்.கே.கார்டன் தெரு, வரதமுதலியப்பன் தெருவில் இருந்து பொது மக்கள் மேற்கண்ட நியாய விலைக் கடையில் பொருட்கள் வாங்கிச் செல்கின்றனர். மழை நேரத்தில் பொதுமக்கள் இந்த நியாய விலைக் கடைக்கு வந்து செல்வதற்கு மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றார்கள் என்றும், ஆச்சாரப்பன் தெருவின் முனையில் உள்ள தாதா முத்தியப்பன் தெருவில், சென்னை மாநகராட்சி கட்டிடம் ஒன்று 550 சதுர அடியில் உள்ளது எனவும், இதில் மேல்தளத்தில் அரசு நூலகம் ஒன்று இயங்கி வருவதாகவும், இதில் கீழ்தளம் காலியாக உள்ளது எனவும், இந்த காலியாக உள்ள கீழ்தளத்தை வ.உ.சி. கூட்டுறவு பண்டக சாலை கடை எண். 02AF009NCக்கு குறைந்த வாடகைக்கு நியாயவிலைக் கடைக்கு ஒதுக்கீடு செய்து தருமாறு கடிதம் அளித்துள்ளார்.

மண்டல அலுவலர், மண்டலம் - 5 அவர்களின் 25.11.2022 நாளிட்ட கருத்துருபடி, மண்டலம்-5, பகுதி-13, வார்டு-55க்கு உட்பட்ட கதவு எண்.61/34, தாத்தா முத்தியப்பன் தெருவில் (ஆச்சாரப்பன் தெரு சந்திப்பு) அமைந்துள்ள கட்டிடம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் முதல் தளத்தில் நூலகம் இயங்கி வருவதாகவும், தரைதளத்தில் காலியாக உள்ளது. இதனை கடந்த 24.11.2022 அன்று மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திருமிகு.P.K. சேகர்பாபு அவர்கள் மற்றும் இணைப்பதிவாளர் (பொவிதி) 1 மற்றும் மண்டல அலுவலர், மண்டலம் - 5 ஆகியோர் கூட்டு ஆய்வு செய்ததாகவும், அதன் அடிப்படையில் காலியாக உள்ள தரைத்தள பகுதி 20 x 20 (படிகட்டு பகுதி நீங்கலாக) 400 சதுர அடிகள் அளவுள்ள இடத்தினை நியாய விலைக் கடைக்கு குறைந்தபட்ச வாடகைக்கு ஒதுக்க கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்து தருவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, கடிதத்துடன் கட்டிடத்தின் அளவுகளுடன் (400 சதுர அடி) (வரைபடத்தின்படி) நியாய விலைக் கடை பயன்பாட்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி விதிகளின்படி அடிப்படையில் ஒதுக்கீடு செய்து வழங்கும்படி, மண்டல அலுவலர், மண்டலம் - 5 அவர்களின் மூலம் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மானம் எண்.689/2013 நாள்.31.10.2013-ன்படி மக்கள் நலன் கருதி வியாபார நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாய விலை கடைக்கு மாத வாடகை சதுர அடிக்கு ரூ.5./- என்று நிர்ணயம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளபடி, இப்பொருளில் கண்டுள்ள கடைக்கு நிர்ணயம் செய்யவும், இனிவரும் காலங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாய விலைகடைகளுக்கும் மற்றும் கூட்டுறவு நியாய விலை கடைகளுக்கும் மாத வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி கோரும் கோப்புகளில் சதுர அடிக்கு ரூ.5/- என்றே நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடனும் பெரும்பான்மை மன்ற உறுப்பினர்களின் கருத்தின் அடிப்படையிலும் அதற்கு மன்றம் அனுமதி அளித்துள்ளது.

எனவே, மண்டலம்-5, பகுதி-13, வார்டு-55க்கு உட்பட்ட கதவு எண்.61/34, தாத்தா முத்தியப்பன் தெருவில் (ஆச்சாரப்பன் தெரு சந்திப்பு) காலியாக உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தின் தரைதளப் பகுதியின் பரப்பளவு = 20 X 20 = 400 சதுர அடி ஆகும்.

<u>கீழ்கண்ட நிபந்தனையின் அடிப்படையில்</u>

1. ஒரு சதுர அடிக்கு ரூ. 5/- வீதம், வார்டு - 55ல் உள்ள நியாயவிலைக் கடை எண். 02AF009NCக்கு (400 ச.அடி) மாதம் ரூ.2,000/- ஆக 12 மாத வாடகை முன்பணம் ரூ. 24,000/- ஆக மொத்தம் செலுத்த வேண்டும் என்றும்,
2. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில்,

மேற்படி கட்டிடத்தினை இணைப்பதிவாளர் (பொவிதி) 1, கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் வரும் 02AF009NC என்ற நியாயவிலைக் கடைக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள, மாத வாடகையின் அடிப்படையில் நியாய விலை கடைக்கு ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டி அவசர அவசியம் கருதி மண்டல வார்டு குழு பரிந்துரையின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

******

**ம.அ.10ந.க.எண்.அ1/16976/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:631/2022** **பொருள் எண்.63**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10, வார்டு-137, எம்.ஜி.ஆர்.நகர் வெங்கட்ராமன் சாலையில் உள்ள பழுதடைந்த அங்கன்வாடி கட்டடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, வார்டு-137ல், எம்.ஜி.ஆர்.நகர் வெங்கட்ராமன் சலையில் உள்ள பழுதடைந்த அங்கன்வாடி கட்டடத்தை இடித்து அவ்விடத்தில் புதியதாக அங்கன்வாடி கட்டடம் கட்டப்பட உள்ளது. இப்பணிக்கு 12.09.2022 அன்று நடைபெற்ற வார்டு குழுவில் தீர்மான எண்.47ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | வார்டு எண்-137 | மண்டலம்-10 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | எம்.ஜி.ஆர் நகர் வெங்கட்ராமன் சாலையில் உள்ள பழுதடைந்த அங்கன்வாடி கட்டடம். |
| 2. | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 1989 |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 40 சதுரமீட்டர் (தரைதளம்) |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 430 சதுர அடி |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ.3800/- |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை. |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | புதிய அங்கன்வாடி மையம் வார்டு உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 8. | வார்டுக்குழு தீர்மான எண். மற்றும் நாள் | தீர்மான எண்.47, நாள்.12.09.2022 |

எனவே, மண்டலம்-10, வார்டு-137, எம்.ஜி.ஆர் நகர் வெங்கட்ராமன் சாலையில் உள்ள பழுதடைந்த அங்கன்வாடி கட்டடத்தை இடித்து அகற்ற, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”.**

* * * * * *

**P.H.D.C. No.B1/9284/2022**

**முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் அவர்களின் 26.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:632/2022** **பொருள் எண்.64**

**Greater Chennai Corporation - Public Health Department- COVID 19 test (RT-PCR test) on samples collected from GCC by Private Labs, Chennai – Clarification received from Government for settlement of RT-PCR pending bills to Private Labs – Pending bills received from Private Labs - Settlement of RT-PCR pending bills to Private Labs – For orders.**

During COVID pandemic situation, samples were collected from symptomatic patients & their contacts and sent to Government Labs as well as Private Labs in the limits of Chennai Corporation for doing RT-PCR test on samples. For that, the necessary payments were settled by Tamil Nadu Health Systems Project, Chennai for doing test under Chief Minister Comprehensive Health Insurance Scheme (CMCHIS). The payment for the samples sent to the private labs up to 31.10.2021.

Due to a huge number of covid cases and save the life of the patients, tightening the surveillance and getting the reports in time the GCC has continued to send the samples to the private labs in addition to Government Labs up to 04.12.2021.

The Project Director of Tamil Nadu Health Systems Project (TNHSP), Chennai letter dated.31.12.2021, has stated that the decision has been taken to settle the bills only up to 31.10.2021 under CMCHIS. From November 2021, the private labs testing of Govt.samples has to be met from local funds only. Subsequently, the letters dated.28.05.2022, 26.08.2022 & 19.10.2022 have been sent to Government for settling the pending bills to Private Labs as a special case.

In this regard, the Government have written back that *the Tamil Nadu Health System Project is not in a position to settle the bills* vide D.O letter from Principal Secretary to Govt., Health and Family Welfare Department, dated. 02.11.2022. Based on the letter received from Government, the GCC has to settle the pending bills on RT-PCR test (samples) to the private labs as per the norms of Government orders.

The bills along with RT-PCR samples received from private labs for the month of November and December 2021 as detailed below:

| Month | Name of the Laboratories | No.of RT-PCR samples | | | | | | | Per sample Rs. | Total Amount Rs. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ZONE-1 | ZONE-6 | ZONE-8 | ZONE-11 | Zone-14 | Zone-15 | Total samples | | |
| November & December 2021 | M/S.PREMIER CLINICAL LAB (from 1.11.2021 to 4.12.2021) | - | - | - | - | - | 19088 | 19088 | 400 | 76,35,200 |
| | M/S.ANDERSON DIAGNOSTICS & LAB (from 1.11.2021 to 4.12.2021) | - | 11511 | - | 16718 | - | - | 28229 | 400 | 1,12,91,600 |
| | M/S.NEUBERG DIAGNOSTICS (from 1.11.2021 to 4.12.2021) | - | - | 5508 | - | 7564 | - | 13072 | 400 | 52,28,800 |
| | M/S.LISTER METROPOLIS HEALTHCARE (from 1.11.2021 to 4.12.2021) | 9007 | - | - | - | - | - | 9007 | 400 | 36,02,800 |
| TOTAL | | | | | | | | 69,396 | 400 | 2,77,58,400 |

Hence,

1. To issue orders for ratification for doing RT-PCR test (samples) in private labs for the period from 01.11.2021 to 04.12.2021.
2. To sanction a sum of Rs.2,77,58,400/- (Rupees Two Crores seventy seven lakhs fifty eight thousand four hundred only) under account code: 230-701-201 to settle the payment for pending bills of RT-PCR test as per the norms of Government orders during the period from 01.11.2021 to 04.12.2021.

Sl.No. 1& 2 above, orders of the Council are requested.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********

**நி.ம.உ.து.ந.க.எண். எல்இ9/1963/2022**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.11.2022 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்:633/2022** **பொருள் எண்.65**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் - 5, வார்டு-57, சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி நகர், திருவல்லியன் பேசின் சவுத் தெரு பிளாக் எண்.68, நகர புல எண்.7878/1 மாநகராட்சி (தனி) நிலம் விஸ்தீரணம் 1 ஏக்கர் 3 சென்ட், புல எண்.7877/1 விஸ்தீரணம் 0 ஏக்கர் 94 சென்ட் (ம) புல எண்.7877/2 விஸ்தீரணம் 0 ஏக்கர் 3 சென்ட் ஆக மொத்தம் 2 ஏக்கர் மாநகராட்சி தனி நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப்பணிகளுக்காக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வது குறித்து உரிய ஆணை வழங்குமாறு அரசினை கோருவதற்கு அனுமதி.**

நிர்வாகப் பொறியாளர்/ தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களின் 25.08.2022 நாளிட்ட கடிதம் மற்றும் மேலாண்மை இயக்குநர்/ தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அவர்களின் 01.09.2022 நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சாலையோரம் வசிக்க கூடிய ஏழை எளிய மக்களுக்காக மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் முயற்சியினாலும் அறிவுறுத்தலின்படியும் அம்மக்களுக்கு புதியதாக அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கொடுத்திட கீழ்காணும் புலங்களில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி இடம் கண்டறியப்பட்டுள்ளது எனவும், இந்நேர்வில் வாரியத்தால் அடுக்குமாடி குடியிருப்பு திட்டம் செயல்படுத்திட சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம் வ.உ.சி நகர், திருவல்லியன் பேசின் சவுத் தெரு, பிளாக் எண்.68, நகர புல எண்.7878/1 உள்ள 0.24.0.56 ஹெக்டர் (11 கிரவுண்டு 39 ச.அடி) விஸ்தீரணத்தில் “ மாநகராட்சி தனி ” வகைபாடு கொண்ட நிலத்தினை அரசாணைஎண்.35, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந2) துறை நாள்.17.02.1997-ன் படி, மனை ஒன்றுக்கு ரூ.10,000/- வீதம் பெற்று கொண்டு வாரியத்திற்கு மேற்படி நிலத்தினை ஒப்படைப்பு செய்யுமாறும், மேலும், மாநகராட்சி (பொது) வகைபாடு கொண்ட புல எண்கள் முறையே 7877/1ல் 0.37.85 ஹெக்டர்(16 கிரவுண்டு 2346 ச.அடி மற்றும் 7877/2 ல் 0.01.40 ஹெக்டர் (1507 சதுரடி) ஆகமொத்தம் 1.57 ஏக்கர் (6381 ச.மீ) நிலத்தினை வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்து வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மன்றத்தீர்மான எண்.401/2022 நாள்.30.08.2022ல் கீழ்கண்ட இனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

1. மண்டலம்-5, வார்டு- 57, சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி நகர் கிராமம், திருவல்லியன் பேசின் சவுத் தெரு, பிளாக் எண்.68, நகர புல எண்.7878/1 –ல் 1 ஹெக்டேர் 19 ஏர்ஸ் 31.5 ச.மீ மொத்த விஸ்தீரணத்தில் 24 ஏர்ஸ் 56 ச.மீ பரப்பளவு நிலம், புல எண்.7877/1-ல் 40 ஏர்ஸ் 29.0 ச.மீ பரப்பளவுள்ள மொத்த விஸ்தீரணத்தில் 37 ஏர்ஸ் 85 ச.மீ மற்றும் 7877/2-ல் 1.40 ஏர்ஸ் ஆக மொத்தம் 1.57 ஏக்கர் (6,381 ச.மீ) பரப்பளவு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தனி நிலத்தில் ஏழை எளிய மக்களுக்காக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் பொருட்டு மனை ஒன்றுக்கு ரூ.10,000/- வீதம் பெற்றுக்கொண்டு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியதிற்கு நில மாற்றம் செய்ய உரிய ஆணை வழங்குமாறு அரசு கூடுதல் தலைமைச்செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களை கோருவதற்கும்.
2. மேற்படி புல எண்கள்.7878/1, 7877/1 மற்றும் 7877/2ல் அடங்கியுள்ள 1.57 ஏக்கர் நிலத்தில் முதற்கட்டமாக புல எண்கள்.7877/1 மற்றும் 7877/2-ல் அடங்கியுள்ள 0.96 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு வழங்கலாம். மேலும் புல எண்.7878/1ல் அடங்கியுள்ள 0.61 ஏக்கர் பரப்பளவு நிலத்தில்

அமைந்துள்ள பண்டக சாலையிலுள்ள பொருட்களை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய இடம் கிடைக்கப்பெற்ற பின்னர், இந்நிலம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு தேவைப்படும் பட்சத்தில் வாரியத்திடமிருந்து புதியதாக கேட்புக்கடிதம் பெற்று பின்னர் தனியே பரிசீலனை செய்யலாம்.

3. மேற்படி புல எண்.7877/1 மற்றும் 7877/2-ல் அடங்கியுள்ள 0.96 ஏக்கர் நிலத்தில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் அவ்விடத்தில் பணிகள் மேற்கொள்ள முன்நுழைவு அனுமதி வழங்குவதற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு மன்றத்தீர்மானத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மன்றத்தீர்மானத்தின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய உரிய ஆணை பெற்றுத்தருமாறு இவ்வலுவலக 02.09.2022 நாளிட்ட கடிதம் மூலம் அரசு கூடுதல் தலைமைச்செயலாளர்/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நாள்வரை அரசிடமிருந்து உரிய ஆணை ஏதும் பெறப்படவில்லை.

இந்நிலையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களின் 11.11.2022 நாளிட்ட கடிதத்தில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் நில உரிமை மாற்றம் செய்ய கோரிய 1.57 ஏக்கர் நிலத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி தீர்மான எண்.401/2022, நாள்.30.08.2022ல் 0.96 ஏக்கர் நிலத்தினை மட்டும் வாரிய திட்டப்பணிகள் செயல்படுத்த முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டதாகவும், மேலும் 03.10.2022 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் மேற்காணும் திட்டப்பகுதியை ஆய்வு செய்யப்பட்டதில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்கு ஏற்கனவே வாரியத்தால் கோரப்பட்ட 1.57 ஏக்கர் நிலத்துடன் (0.96 ஏக்கர் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத்துறையால் பண்டகச்சாலைக்காக மாற்று இடம் தேர்வு செய்யும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சியால் நிலுவையில் வைக்கப்பட்டுள்ள 0.61 ஏக்கர்) கூடுதலாக 0.43 ஏக்கர் நிலமானது வாரிய திட்டப்பணிகளுக்கு தேவைப்படுகிறது என தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கண்டறியப்பட்டுள்ளது என்றும், எனவே சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி கிராமம், திருவல்லியன் பேசின் சவுத் தெரு (Water Basin) திட்டப்பகுதி, கீழ்கண்ட புலங்களில் திட்டப்பணிகள் வாரியத்தால் செயல்படுத்தப்பட உள்ளது.

| வ.எண். | பிளாக் எண் | நகர புல எண் | நில உரிமை மாற்றம் செய்யகோரும் விஸ்தீரணம் | வகைப்பாடு |
|---|---|---|---|---|
| 1. | 68 | 7878/1 | 1 ஏக்கர் 3 சென்ட் | பெருநகர சென்னை மாநகராட்சி (தனி) |
| 2. | 68 | 7877/1 | 0 ஏக்கர் 94 சென்ட் | பெருநகர சென்னை மாநகராட்சி (தனி) |
| 3. | 68 | 7877/2 | 0ஏக்கர் 3 சென்ட் | பெருநகர சென்னை மாநகராட்சி (பொது) |
| | | மொத்தம் | 2 ஏக்கர் | |

மேற்காணும் புலங்களில் உள்ள 2 ஏக்கர் மாநகராட்சி (தனி) மற்றும் பொது நிலத்தினை வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்திட முன்நுழைவு அனுமதியினை வழங்கியும், நிலத்தினை வாரியத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்ய அரசாணை பெற்று வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

5-வது மண்டல அலுவலரின் 25.11.2022 நாளிட்ட அறிக்கையில், பொதுப்பண்டக சாலை என்பது மண்டலம்-1 முதல் 15 வரையுள்ள அனைத்து மண்டலத்திற்கும் துப்புரவு பணிக்கு தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு தேவைக்கேற்ப 15 மண்டலங்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வரும் இடமாகும் எனவும், இது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் இயங்கப்பட்டு வருகிறது எனவும், தற்போது இவ்விடத்தில் உள்ள பொதுப் பண்டகச்சாலை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய கோரியுள்ளதால் மண்டலம்-5ல் உள்ள காலி கட்டிடங்கள் மற்றும் காலி இடங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது எனவும், அதனடிப்படையில் கீழ்க்கண்ட இரண்டு இடங்கள் கண்டறிப்பட்டது எனவும்,

| வ. எண் | வார்டு | கட்டிடம்/இடம் | மொத்த இடத்தின் அளவு | கட்டிடத்தின் பரப்பளவு | காலி இடத்தின் பரப்பளவு |
|---|---|---|---|---|---|
| 1 | 50 | 1) சமுதாய நலக்கூடம்<br>2) ஷேக் மேஸ்திரி தெரு | 4305 ச.அடி | 1) தரைத்தளம் – 1995 ச.அடி<br>2) முதல் தளம் – 1995 ச.அடி | 2310ச.அடி |
| 2 | 58 | அவதான பாப்பையா சாலை (பழைய மலேரியா அலுவலகம்) | சுமார் 86,400 ச.அடி (36 கிரவுண்டு) | உபயோகிக்கப்படும் பகுதி (சுமார் 20 கிரவுண்டு)<br>1) BOV Shed<br>2)கட்டிட கழிவுகள் சேமிப்பு கிடங்கு (பிரிமியர்)<br>3) மத்திய மலேரியா மருந்து கிடங்கு | சுமார் 16 கிரவுண்டு |

மேற்கண்ட இடங்களில் திடக்கழிவு மேலாண்மை துறை ஆய்வு செய்து பொதுப்பண்டக சாலை அமைப்பதற்கு ஏதுவான இடத்தில் ஏதேனும் ஒன்றினையோ அல்லது இரண்டும் கூட பயன்படுத்திக்கொள்ளலாம் எனவும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பொதுப்பண்டகச்சாலை இயங்கிவரும் இடத்தில் எற்கனவே ஒப்புக்கொண்ட 1.57 எக்கர் நிலத்துடன் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் தற்போது கூடுதலாக கோரிய 0.43 ஏக்கர் நிலத்தினை வழங்குவது குறித்து திடக்கழிவு மேலாண்மைத்துறையின் ஒப்புதல் பெற்று பெருநகர சென்னை மாநகராட்சி நிலம் மற்றும் உடைமைத்துறை மூலமாக வழங்குதல் சம்மந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம் என மண்டல அலுவலர், மண்டலம்-5 தெரிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து கேட்புத்துறை கோரிய 2 ஏக்கர் நிலத்தின் அடிப்படையில், அவ்விடத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி, வடக்கு துணை ஆட்சியர் (நிமஉது) மற்றும் மேற்படி நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய உதவி செயற்பொறியாளர் மற்றும் உரிமம் பெற்ற நிலஅளவர் ஆகியோர் 27.11.2022 அன்று கூட்டாய்வு செய்து கேட்புத்துறைக்கு 1.90 ஏக்கர் நிலத்தினை நில உரிமை மாற்றம் வழங்க வரைபடம் தயார் செய்து சமர்ப்பித்துள்ளார்.

மேலும், பொதுப்பண்டக சாலையில் உள்ள பொருட்களை இடமாற்றம் செய்வது தொடர்பாக 5-வது மண்டல அலுவலர் பரிந்துரை செய்த இரண்டு இடங்களை பெருநகர சென்னை மாநகராட்சி தலைமைப்பொறியாளர்/திடக்கழிவு மேலாண்மைத்துறை அவர்களால் இன்று (28.11.2022) கள ஆய்வு செய்து, மேற்படி இரண்டு இடங்களில் வரிசை எண்.2-ல் தெரிவித்துள்ள வார்டு-58, அவதான பாப்பையா சாலை (பழைய மலேரியா அலுவலகம்) இடத்தில் இடமாற்றம் செய்ய தகுதியான இடமாக உள்ளதென தெரிவித்துள்ளார்.

அரசாணை (நிலை) எண்.35 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள்.17.02.1997-ல் நகராட்சி (ம) மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பட்டா நிலமாக

இருக்குமேயானால் அது எந்த அரசு (ம) அரசுத் துறை சார்ந்த நிறுவனத்திற்கு தேவையானாலும் அதனை அப்போதைய சந்தை மதிப்பு அடிப்படையில் தான் கொடுக்க வேண்டும் எனவும், குடிசைகள் மூலம் ஏற்கனவே ஆக்கிரமிப்பு செய்து பல ஆண்டுகளாக இருக்குமேயானால் மட்டும் அந்த நிலம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு மட்டும் தேவையெனில், அவ்வாரியத்திற்கு மனை ஒன்றுக்கு ரூ.10,000/- என்ற சலுகைவிலை அடிப்படையில் பெற்றுக்கொண்டு நில உரிமை மாற்றம் செய்ய அனுமதி வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட நிலமானது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான (தனி) நிலம் என்பதாலும், தற்போது இந்நிலமானது குடிசைகள் ஆக்கிரமிப்பு ஏதுமின்றி காலியாக உள்ளதாலும், இந்நிலத்திற்கு சந்தைவிலை அடிப்படையில் நிலக்கிரைய தொகை வசூலிக்கப்பட வேண்டும். மேலும் ஏற்கனவே அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்ட 1.57 ஏக்கர் நிலத்துடன் தற்போது கூடுதலாக கோரப்பட்டுள்ள வீஸ்தீரணம் 0.43 ஏக்கரில் தகுதியான வழங்கக்கூடிய 0.33 ஏக்கர் நிலத்துடன் ஆக மொத்தம் 1.90 ஏக்கர் நிலத்திற்கு வழிகாட்டி மதிப்பின்படி சதுர அடி ஒன்றுக்கு ரூ.3,685/- என கணக்கிடுகையில் 1.90 ஏக்கர் (82764 ச.அடி) நிலத்திற்கு ரூ.30,49,85,340/- (ரூபாய் முப்பது கோடியே நாற்பத்தொன்பது இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து முந்நூற்று நாற்பது மட்டும்) என கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் இந்நிலத்தினை மனை ஒன்றுக்கு ரூ.10,000/- என்ற அடிப்படையில் வாரியத்திற்கு வழங்கும் பட்சத்தில் மாநகராட்சி வருவாய் இழப்பு ஏற்படுவதோடு பிற்காலத்தில் தணிக்கை தடை ஏற்படும் சூழ்நிலை உருவாகும்.

இந்நேர்வில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமானது மேற்படி நிலத்தில் சாலையோரம் வசிக்கக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்படவுள்ளதாகவும், அதனடிப்படையில் இந்நிலத்தினை மனை ஒன்றுக்கு ரூ.10000/- அடிப்படையில் நிலக்கிரைய தொகையினை பெற்றுக்கொண்டு வாரியத்திற்கு நிலத்தினை ஒப்படைப்பு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் – 5, வார்டு-57, சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி நகர், திருவல்லியன் பேசின் சவுத் தெரு பிளாக் எண்.68, நகர புல எண்.7878/1 மாநகராட்சி (தனி) நிலம் விஸ்தீரணம் 0.37.52 ஹெக்டேர்ஸ் (3752 ச.மீ), புல எண்.7877/1 விஸ்தீரணம் 0.37.52 ஹெக்டேர்ஸ் (3785 ச.மீ) (ம) புல எண்.7877/2 விஸ்தீரணம் 0.01.40 ஹெக்டேர்ஸ் (140 ச.மீ) ஆக மொத்தம் 0.76.77 ஹெக்டேர்ஸ் (7677 ச.மீ (அ) 1.90 ஏக்கர்) பெருநகர சென்னை மாநகராட்சி தனி நிலத்தில் சாலையோரம் வசிக்கக்கூடிய ஏழை எளிய மக்களுக்காக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் பொருட்டு ஏற்கனவே அரசுக்கு 02.09.2022-அன்று முன்மொழிவு அனுப்பப்பட்ட 0.96 ஏக்கர் நிலத்தினை சேர்த்து மொத்தமாக தற்போது 1.90 ஏக்கர் (7677 ச.மீ) நிலத்தினை சிறப்பினமாக கருதி மனை ஒன்றுக்கு ரூ.10000/- என்ற கிரைய அடிப்படையில் பெற்றுக்கொண்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வது குறித்து உரிய ஆணை வழங்குமாறு அரசு கூடுதல் தலைமைச்செயலாளர்/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களை கோருவதற்கு, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்:-</u>**

அ) மேற்கண்ட நிலத்திற்கு அரசால் நிர்ணயிக்கப்படும் நிலமதிப்பு தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.

ஆ) மேற்கண்ட நிலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டிலுள்ள கட்டிடங்களை இடிக்கும் பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் கட்டிட மதிப்பு தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.

இ) இத்திட்டப்பகுதியில் கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளில் அரசாணை எண்.1862, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.26.09.1979-ன்படி 25 சதவிகித குடியிருப்புகள் பெருநகர சென்னை மாநகராட்சி நான்காம் நிலை பணியாளர்களான தூய்மைப்பணியாளர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".**

**********